# சிங்கப்பூர்
# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில்
# குடமுழுக்கு
# சிறப்பு மலர்



SINGAPORE
SRI SRINIVASA PERUMAL TEMPLE
KUMBABISHEGAM
SOUVENIR MAGAZINE

2-2-1979

M. C. (P) No. 438/1/79

*With Best Compliments*

*of*

இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்

**Indian Overseas Bank**

(Wholly owned by the Government of India)

Over 600 Branches throughout India and in
Hongkong, Sri Lanka and South Korea.
Correspondents in all the principal cities of the world.
Comprehensive Banking Services offered at all Branches of the Bank.

Singapore Branch
"INDIAN OVERSEAS BANK BUILDING"
1 & 3, COLLYER QUAY
POST BOX NO. 792
SINGAPORE-1
PHONE: 94875 (5 LINES)
CABLE ADDRESS: "OVERIND" TELEX: RS23908

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்

இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே!

தொண்டரடிப்பொடியாழ்வார்

*Your gracious form,*
*Green as the distant hills;*
*Your lips coral-red;*
*Your eyes, lotus-like,*
*Achuta, Lord of the Celestials!*
*Darling child of the cow-herds;*
*Such names taste sweet:*
*I seek not the joys of*
*Indra's abode to share,*
*O Lord of Arankam Shrine.*





# காணிக்கை

தன்னலம் கருதாத் தொண்டு
தகையுடன் மிகவே கொண்டு
அருளாளன் ஸ்ரீநிவாசன்
ஆலயம் ஓங்கி நிற்க
உண்மையாய் உழைத்த அன்பர்
உத்தமர் அனைவருக்கும்
பொன்மலர் காணிக்கையாய்ப்
பொற்பாதம் சமர்ப்பிக்கின்றோம்

**புதுப் பெரியவர்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

# வாழ்த்து

இந்த உலகமானது நான்முகனை பிர்ம்ம தேவனுல் படைக்கப்பட்டு ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுல் காக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீ மஹா விஷ்ணுவானவர் அநேக அவதாரங்கள் எடுத்து பூலோகத்திலுள்ள ஜனங்களுக்கும் — தேவ லோகத்திலுள்ள தேவதைகளுக்கும் அருளியிருக்கிறுர். முக்யமாக ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதாரங்கள் பத்து. அதாவது மச்சாவதாரம் — கூர்மாவதாரம் — வராஹாவதாரம் — நரசிம்மாவதாரம் — வாமனுவதாரம் — இராமாவதாரம் — **பரசுராமாவதாரம் — பலராமாவதாரம் — ஸ்ரீ கிருஷ்ணவதாரம் —** கல்கி அவதாரம் என்பன. கல்கி அவதாரம் தவிர மற்ற அவதாரங்களெல்லாம் முன் யுகங்களில் நடைபெற்றன. கல்கி அவதாரமானது கலியுக கடைசியில் வர இருக்கிறது.

கலியுகத்தில் தற்காலத்தில் எல்லா ஜனங்களுக்கும் பக்தியை ஏற்படுத்து வதற்காகவும் துன்பங்களையும் — கவலைகளையும் போக்கடிப்பதற்காகவும் கோவில் களில் விக்ரஹ வடிவங்களில் பகவான் எழுந்தருளியுள்ளார். அப்படி எழுந்தருளப் பட்ட க்ஷேத்திரங்கள் 108 திருப்பதிகளும் — 18 திருப்பதிகளும் விசேஷ முடையது. அவைகளுள் ஸ்ரீனிவாஸப் பெருமாள் என்று போற்றப்படும் திருப்பதி வெங்கடாஜலபதி சாமியானவர் கலியுகத்தில் ப்ரத்யக்ஷமாக ஜனங்களுக்கு பலன் களை அளித்து வருகிறுர். அந்த பெருமானுடைய திருநாமத்தைத் தாங்கி சிங்கப்பூரில் ஸ்ரீனிவாஸப் பெருமாள் கோவிலில் எழுந்தருளி இக்கோவிலுக்கு முக்யமான அங்கமாகவுள்ள திருக்கோபுரமும் செய்யப்பட்டு அதற்கு குடமுழுக்கு விழா நிகழும் காளயுக்தி வருஷம் தை மாதம் 20உ சிங்கப்பூர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் முன்னின்று நடத்த இருப்பதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம்.

பிள்ளை அவர்கள் பல நல்ல தர்ம காரியங்கள் இந்தியாவிலும் — சிங்கப் பூரிலும் செய்து வருகிறுர்கள். அன்னர் மேன்மேலும் இதுபோன்ற நல்ல அறப்பணிகளில் ஈடுபட்டு பகவானுடைய அனுக்ரஹத்திற்கு பாத்திரராகும்படி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி



# Message

*I share with you the joy in the completion and the consecration of the Tower of the Srinivasa Perumal Temple. As Hindus, the Tower has a deeper significance. As non-Hindus, who may not understand its symbolism, we can admire the art form of the structure, the skilled craftsmen who built it and the magnificent generosity of one man who bore the entire costs of building it.*

*This is a monument for Singaporeans, for devotees and non-devotees alike. On the commemorating ceremonies we could perhaps draw the thought - of the acceptance of the different religious faiths and the tolerance that exist between the various religious groups in Singapore. Yet we know that religion can be a divisive force and in its name terrible crimes and blood-shed have been committed. We value the harmony in which we live in. May this Tower where many thousands of devotees will come through to perform their religious ceremonies, and for the many Singaporeans and sightseers who come to admire it, represent the harmony of our peoples and bring peace in our hearts.*

DR AHMAD MATTAR
AG MINISTER FOR SOCIAL AFFAIRS

## *FOREWORD*

*The editorial board, in compiling this souvenir magazine, has endeavoured to make it as worthy a memento as possible to befit the occasion, that is, the "Kumbhabishegam" (consecration ceremony) of the Sri Srinivasa Perumal Temple on Friday, 2nd February 1979.*

*An event of this nature occurs normally once in about twelve years in Hindu temples or when a Rajagopuram is built. The religious significance to the Hindus is therefore obvious.*

*The editorial board extends a cordial invitation to all Hindus to participate in this important function and receive the blessings of Sri Srinivasa Perumal.*



# Message

*The temple–going Hindu public of Singapore has long felt the need for a Rajagopuram (Tower at the main entrance) for Sri Srinivasa Perumal Temple in Serangoon Road. The Hindu Endowments Board and the Temple Management Committee fully recognise the fact that a Rajagopuram is an essential and integral part of any major Hindu temple. However, financing the project was the problem.*

*Fortunately, Mr. P. Govindasamy Pillai, J. P., with his customary generosity, offered to bear the full cost of the construction of the Rajagopuram. During the last several months experienced temple sculptors, specially recruited from India, have been meticulously decorating the imposing five-tier Rajagopuram with relevant idols of the Hindu pantheon in accordance with Hindu Sastras. The opportunity has also been taken to carry out a general renovation of the whole temple.*

*The consecration ceremony or Kumbhabhishekam takes place on Friday, 2nd February 1979, followed on by special poojas for 41 days. I invite the Hindu public to participate in these ceremonies.*

*I wish to place on record the profound gratitude of the Hindu Endowments Board, the Temple Management Committee and the temple–going Hindu public to Mr. Govindasamy Pillai, J. P. for his generous assistance.*



*G. RAMACHANDRAN*
*Chairman, Hindu Endowments Board*



# Message

*The "Kumbhabhishekam" (consecration ceremony ) for the Rajagopuram of the Sri Srinivasa Perumal Temple is an important event not only for the temple itself but also for the Singapore Hindu community as a whole. In addition to the religious significance which it depicts, the Rajagopuram enhances the devine beauty of the temple and its surroundings.*

*Standing 21.4 metres tall and inlaid with intricate works of art, the Rajagopuram is a monument which adds another important Landmark in Singapore. The cost of building the Rajagopuram was entirely borne by Mr. P. Govindasamy Pillai, a noted philanthrophist and a benefactor. The Hindu community owes a debt of gratitude to Mr. P. Govindasamy Pillai for this gift.*

*I thank all those who have assisted in the completion of this project and those who have made invaluable contributions towards the planning, organisation and in the execution of the"Kumbhabhishekam"ceremony.*



*V. K. RAJAN*
*Chairman,*
*Kumbhabishegam Organising Committe.*

## MEMBERS OF THE HINDU ENDOWMENTS BOARD
## 1978–1981

*Chairman* : Mr. G. Ramachandran
*Members* : Mr. V. K. Rajan
: Mr. T. P. Naidu
: Mr. S. Dheivanayagam
: Mr. V. Mageswaralingam
: Mr. N. R. Krishnan
: Mr. M. Thirunalan
: Mr. P. Rattanam ary
: Mr. T. T. Durai
*Secretary* : Mr. P. Arumainathan

## MEMBERS OF THE MANAGEMENT COMMITTEE
## SRI SRINIVASA PERUMAL TEMPLE
## 1978–1980

*Chairman* : Mr. V. K. Rajan
*Members* : Mr. T. P. Naidu
: Mr. A. Mylvaganam
: Mr. M. Paramanathan
*Secretary* : Mr. A. Palaniappan

## KUMBABISHEGAM ORGANISING COMMITTEE

*Chairman* : Mr. V. K. Rajan
*Members* : Mr. T. P. Naidu
: Mr. A. Mylvaganam
: Mr. M. Paramanathan
: Mr. M. Thirunalan
: Mr. S. Dheivanayagam
: Mr. V. Mageswaralingam
: Mr. P. Arumainathan
: Mr. V. Krishna
: Mr. G. Thanabalan
: Mr. G. Ramakrishnan
: Mr. R. S. Sithamparam
*Secretary* : Mr. A. Palaniappan

## SOUVENIR MAGAZINE
## EDITORIAL BOARD

M. Paramanathan
A. Palaniappan
T. P. Naidu
S. Dheivanayagam

# பொறுப்பாளர்களின் முன்னுரை

அருள்மிகு ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஆலய: இராஜ கோபுர குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) விழாவினை சிறப்பிக்க மலர் ஒன்று வெளியிட கோவில் மேலாண்மைக்குழு பொறுப்பை எங்களிடம் வழங்கியபோது அதை ஸ்ரீநிவாஸப் பெருமாளின் அருள்வாக்காகப் பாவித்துப் பெற்றுக்கொண்டோம்.

ஸ்ரீநிவாஸப்பெருமாள் எழுந்தருளியிருக்கும் கோவிலில் நடைபெறும் திருப்பணியில் எங்கள் பங்காக நாங்கள் பெற்ற பெரும் பேறாக அதை நினைத்து மகிழ்ச்சியும பெருமையுமுற்றோம்.

எங்கள பணிக்கு கோவில் மேலாண்மைக்குழு, வள்ளல் திரு. பொ. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்களின் குமாரர்கள் திருவாளர்கள் கோ. தனபாலன், கோ. இராமகிருஷ்ணன், இந்து அறக்கட்டளை வாரிய அதிகாரிகள் ஆகியோர் வழங்கிய ஒத்துழைப்பும் நல்லாதரவும் என்றும் எங்கள் நினைவில் நிற்பவையாகும்.

வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள், புகைப்படங்கள் வழங்கிய பெருமக்களுக்கும், அறிஞர்களுக்கும், கவிதைப்போட்டியில் பங்கு பெற்ற கவிஞர்களுக்கும், சிறந்த கவிதைகளைத் தேர்வுசெய்ய உதவிய திரு. இக்குவனம் அவர்களுக்கும், குறித்த காலத்தில் மலரை சிறப்புற அச்சிட்டுத்தந்த வி. ஜி. கே. பிரஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இம்மலரின் வழி பெருமாளின் அருமை பெருமைகளையும், ஆலயத்தின் சிறப்பினையும், இந்து சமயத்தின், குறிப்பாக வைணவத்தின் திறத்தினையும் ஓரளவு படைக்க முயற்சி செய்துள்ளோம். பக்தப்பெருமக்களும், வாசகர்களும் மலரைப் படித்து அருள் சுவை பெற்று மகிழ்வர் எனப் பெரிதும் நம்புகின்றோம். இப்பெரும் பணியில், ஏதேனும் குறைகள் தென்படின் அவற்றைப் பெரும் மனம் கொண்டு பொறுத்தருள வேண்டுமெனப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

வள்ளல் துவங்கிய இத்திருப்பணியில், இன்றைய இளம் தலைமுறையினரான எங்களுக்குக் கிடைத்த இப்பணியை நாங்கள் பெற்ற பெரும் பேறாக எண்ணி இம்மலரை ஸ்ரீநிவாஸப்பெருமாளின் திருவடியில் வைத்து வணங்குகின்றோம்.

ஸ்ரீநிவாஸப் பெருமாளின் தொண்டில்,
ஆ. பழனியப்பன், மோ. பரமானந்தன்
பொறுப்பாளர்கள்
கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக் குழு.

# BLESSINGS TO THE BENEVOLENT SOUL

(Kavi Yogi Maharshi Shuddananda Bharatiar)

LET SRINIVASA PERUMAL
BLESS GOVINDASAMY PILLAI
Who works and saves and gives for all
His heart and head and help comply

He earns money by means so fair
He leads a perfect moral life
For charity he has a flair
As he thinks, thinks his lovely wife

He leads a life clean and simple
His words are few and deeds are more
His life is a lofty example
He gains to give us more and more

Whatever he touches becomes gold
In business he keeps account
Honesty is his great stronghold
His philanthrophy is a fount

He built a Ramakrishna mutt
A Kalyan hall grand as his heart
A Vishnu temple with a tower
As high as his endeavour

It is a song of gain and give
His longing is to live and love
He has a magnificient home
Busy around his Pooja room

When Japs occupied Singapore
When violence reigned everywhere
His good heart kept an open door
His table spread a welcome fare

He has helped my dreaming pen
My muse is always blessing him
Like him there are very few men
Let God grant him long life; AUM



வள்ளல் பொ. கோவிந்தசாமிப் பிள்ளை

# பல்லாண்டு பாடுவோம்

**கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்**

ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில்
கும்பாபிஷேகத்தின்போது பாடியது

### எடுப்பு

பல்லாண்டு பல்லாண்டு பாடிடுவோம்
பத்திரசத்துடன் கூடிடுவோம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன் - ஸ்ரீநி
வாசன்பெயர்சொல்லி ஆடிடுவோம்

### தொகுப்பு

உடையானுக்கே அன்பு சூடிடுவோம் -
உண்மையறிவின்பம் தேடிடுவோம்
கொடைவள்ளல்கோவிந்த சாமிபுகழ்போலக்
கோபுரப்புகழைக் கொண்டாடிடுவோம் (பல்)

### முடிப்பு

எல்லா வுலகமும் தானுகினன் - அவன்
இன்னுயிர்த் துடிப்பிலே நான் ஆகினன் - பெயர்
சொல்லும் உள்ளத்திலே தேனுகினன் - இந்தத்
தொல்புவியை - ஆளும் கோனுகினன் (பல்)

போயிற்று வல்லுயிர்ச் சாபமெல்லாம் - இங்கே
பூத்தது புதுயுகம் பூரணமாய் -
தேயமெல்லாம் - ஹரி நாராயணவோம் - எனச்
செப்பி சுத்தானந்தன் சேவிக்கும் தேவனுக்கே (பல்)

# வாழ்த்து

சிங்கப் பூரில் பலதமிழர்
   சிறப்புப் பெற்று வாழ்கின்றூர்;
அங்குப் பெருமக் கள்பக்தி
   அமையப் பலதொண் டாற்றுகின்றூர்;
பொங்கும் அருள்கொள் பெருமானுய்ப்
   பொலியும் சீனி வாசன்றன்
நுங்கக் கோயில் மிகச்சிறந்து
   சுடர்ந்து நன்மை மிகத்தருமே.

அந்தக் கோயிற் கணிசெய்ய
   அரச கோபு ரம்சமைத்து
எந்தத் திசையி லிருந்துமதை
   இனிது நோக்கிப் பணிவதற்குச்
சொந்தச் செலவில் கோவிந்த
   சாமி தொண்டு நிரப்பினர்;
சந்த முடைய கோபுரத்தின்
   கும்பா பிடேகம் சார்தருமே!

கோயிற் குள்ளே போவதன்முன்
   கும்பிட் டினிது வழிபடவே
தூய கோபு ரம்விண்ணைத்
   தொட்டு விளங்கும்; இக்கோயில்
மேய அதுதான் திருமாலின்
   மேன்மை அருளைப் பெறுவதற்கு
நீயிர் வாரும் என்றழைக்கும்
   நிலையில் உயர்ந்து விளங்குறுமே

சீனி வாசப் பெருமாந்தன்
   திருக் கோயிலிலே கோபுரந்தான்
ஞானத் தவிசின் திருமலைபோல்
   நன்கு விளங்கிச் சிங்கப்பூர்
மாந கர்க்கோர் அணியாக
   மாட்சி தோன்ற வாழியவே!
ஆன அன்பின் வழிப்டும்
   அன்பர் வாழி வாழியவே.

கி. வா. ஜகந்நாதன்

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயில் தல வரலாறு

**தகவல் தொகுப்பு: டி. பி. நாயுடு, ஆ. பழனியப்பன்**

சிங்கப்பூர்த் தீவு, ஆங்கிலேயர்களின் ஆட்சித் துவக்கத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பார்வையில் இருந்த காலம். "திரை கடலோடியும் திரவியம் தேடு" எனும் முதுமொழிக்கிணங்க, இந்தியர்கள் வர்த்தகம் செய்யவும், ஆங்கிலேயர்களின் நிர்வாகத்துறையிலும் மற்றும் இதர மேம்பாட்டுத் திட்டங்களிலும் வேலை செய்யவும் தென்கிழக்காசிய நாடுகளில் குறிப்பாக மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் குடியேறிய காலமும் அது.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது இந்துக்களின் இறைவழிபாட்டிற்கு ஏற்பட்ட இலக்கணம். தாய்நாட்டைவிட்டு வெளிநாடு வந்த போதிலும், இறைவழிபாட்டை மறவாத இந்துக்கள் கோவில் கட்டி, தங்கள் மதம், கலாச்சாரம், மொழி ஆகியவற்றை மறவாது ஒழுகி நிற்கத் துடித்த காலம். தங்களின் சக்திக்கேற்ப ஆங்காங்கே சிறு குடில்களாக கோவில்களை அமைத்து வழிபட்ட காலமும் கூட.

அச்சூழலில்தான் 1855-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20-ம் நாள் திரு. நரசிங்கம் என்பவருக்கு கிழக்கிந்தியக் கம்பெனி சிராங்கூன் சாலையில் 2 ஏக்கர் 19 போல்ஸ் பரப்பளவுள்ள நிலத்தை இருபத்தொன்று ரூபாய் மூன்று அணுக்களுக்கு விற்று நிலத்தை அவருக்கு உரிமையாக்கிக் கொடுத்தது. வாங்கப்பட்ட நிலத்தில் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டது. அதற்கு நரசிங்கப் பெருமாள் கோவில் என பெயர் வழங்கப்பட்டது. கோவிலின் அருகாமையிலேயே ஒரு திருக் குளமும் கட்டப்பட்டு கோவிலுக்குப் போகும்முன் அக்குளத்தில் முழுகிக் குளித்து உடல் தூய்மையுடனும் உள்ள தூய்மையுடனும் சன்னிதி அடைந்து வழிபட்டு வந்தனர். திருக்குளம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணால் நிறைக்கப்பட்டு மூடப்பட்டுவிட்டது.

சிறிய கோவிலாக இருந்த போதிலும் கோவிலுக்கு வரும் திருக்கூட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது. பக்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கோவிலும் பெரிதாக இருக்க வேண்டுமென ஆவலுற்ற கோவிலின் அறக்காப்பாளர்கள் அன்றைய பிரிட்டிஷ் அரசிடம் முறையிட்டனர். அம்முறையீட்டிற்கிணங்க,

*1) 25,792 சதுர அடி நிலம் $425.00* விலையில் 8.5.1894-ம் ஆண்டு சிராங்கூன் சாலையில் இருக்கும் நரசிங்கப் பெருமாள் கோவில் அறக்காப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

2) 15.8.1912-ம் ஆண்டு 3,422 சதுர அடி நிலம் 999 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

## பழைய கோவில்

நரசிங்கப் பெருமாள் கோவில் என வழங்கப்பட்ட பழைய கோவில் அப்போதே சிராங்கூன்



மூலவர் ஸ்ரீதேவி பூதேவியுடன் திருக்காட்சி தருகின்றார்.



விஷ்ணு பெருமான் ஆதிஷேசன் மீது சயனம் கொண்டிருத்தல்
*Lord Vishnu resting on Athishesha*



கோபுர மதில் மீதுள்ள சிலைகள்
*Statues on the wall of the Gopuram*

சாலையை முகப்பாகக் கொண்டு அமைந்திருந்தது. தோட்டத்தின் வழி அமைந்திருந்த ஒரு குறுகிய நடைபாதை மூலம் கோவிலுக்குப் பக்தர்கள் வந்து சேர்ந்தனர். கோவிலுக்குள் நரசிங்கப் பெருமாள், மகாலெட்சுமி, ஆண்டாள், ஆஞ்ச நேயர் ஆகியோர் குடி கொண்டிருந்தனர். கோவி லின் வெளியில் அரசமரத்தடியில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு வழிபட்டு வரப்பட்டது.

## இந்து அறக்கட்டளை வாரியம்

இக்கோவில் 1907-ம் ஆண்டு முதல் முகமதிய இந்து அறக்கட்டளை வாரியத்தினால் மேலாண்மை செய்யப்பட்டு பின்னர் இந்து அறக்கட்டளை வாரியத்தின் முழு அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1952-ம் ஆண்டு, மிகவும் மோசமான நிலையில் இருந்த கோவிலைத் திருத்தி அமைத்து புதுக் கட்டிடம் ஒன்றை எழுப்ப வாரியம் முடிவு செய்தது. மேலும் கோவிலுக்குள் நுழையும் வழியைத் தவிர சிராங்கூன் சாலையின் முகப்பில் அமைந்திருக்கும் நிலத்தில் கடைகளுடன் கூடிய வீடுகள் கட்டி 99 வருடக் குத்தகைக்கு விடவும் வாரியம் எண்ணியது. அத்திட்டம் அமுல்படுத்தப் பட்டிருப்பின், இப்போது இருப்பதைவிட கோவில் சிறியதாக அமைந்திருக்கும் என்பதுடன் கோவில் உத்தேசக் கட்டிடங்களின் பின்புறத்தை முகப் பாகவும் கொண்டு அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் அத்திட்டத் திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், திட்டத்திற்கு அங்கீகாரம் பெற நீதிமன்றத்திற்குவிண்ணப்பம் செய்த மனு விசாரணைத் தேதியின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

## புதுத் திட்டம்

இருப்பினும், 1957-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் நடைபெற்ற உபயக்காரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாரியம் தயாரித்த புதுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டு மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்திட்டத்தை 1961-ம் ஆண்டு பிப்பிரவரித் திங்க ளில் உயர்நீதிமன்றமும் அங்கீகரித்தது. அதனைத் தொடர்ந்து உள்நாட்டுக் கண்டிராக்டர்களைக் கொண்டு கோவில் கட்டும் வேலை ஆரம்பிக்கப் பட்டது.. 1963-ம் ஆண்டு தமிழகத்திலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு சிற்ப வேலை நடை பெற்றது. இராஜ கோபுரம், பிள்ளையார் சன்னிதி இவற்றைத் தவிர தற்சமயமுள்ள கோவில் 1966-ம் ஆண்டு திரு. வி. பக்கிரிசாமிப் பிள்ளை ஜே.பி. அவர்களின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப் பட்டது.

## கோவில் பெயர் மாற்றம்

நரசிங்கப் பெருமாள் கோவில் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலாக பெயர் மாற்றம் பெற்றது. நரசிங்க அவதாரம் எடுத்த விஷ்ணுவின் திரு உருவத்திற்குப் பதிலாக திருப்பதி வெங்கடேசப் பெருமாளை ஒத்த திருஉருவத்தைக் கோவிலில் மூலவராக வைக்க வேண்டுமென்ற எண்ணத் துடன் கருஞ்சிலையும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது.

## கோவிந்தசாமிப்பிள்ளை கல்யாண மண்டபம்

கோவிந்தசாமி பிள்ளை . கல்யாண மண்டபம், தமிழ்ப் பெரியாரும் வள்ளலுமான திரு. பி. கோவிந்தசாமிப்பிள்ளை ஜே.பி., பி.பி.எம். அவர் களால் கட்டப்பட்டு இந்து அறக்கட்டளை வாரியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. கல்யாண மண்டபத்தை அதிகாரப் பூர்வமாக சிங்கப்பூர் குடியரசின் முதல் அதிபர் இஞ்சே யூசோப் பின் இஸ்ஸாக் அவர்கள் 1965-ம் ஆண்டு திறந்து வைத்தது நினைவு கூறத்தக்கது. கல்யாண மண்டபம், திருமணங்கள், கூட்டங்கள் இன்னும் பல்வேறு சமய சமூக நிகழ்ச்சிகளை நடத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

## இராஜகோபுரமும் கோவில் திருப்பணியும்

ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில் 1966-ம் ஆண்டு புதிப்பித்துக் கட்டப்பட்டு கும்பாபி ஷேகம் முடிவுற்றவுடன் கோவிலுக்கு இராஜ கோபுரம் கட்டும் திட்டத்தில் திரு. பி. கோவிந்த சாமிப்பிள்ளை அவர்கள் நாட்டம் செலுத்த ஆரம்பித்தார்கள். திட்டத்தை இந்து அறக்கட்டளை வாரியம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டவுடன் இராஜகோபுரத்திற்கான நிர்மாண வேலை 1975-ம் ஆண்டு இறுதியில் திரு. வி. கிருஷ்ணு அவர் களின் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டது. இராஜகோபுரம் தென்கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்த ஒன்ருக உருவாக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு நல்ல பலனையும் அளித்துள்ளது.

இராஜகோபுர நிர்மாணம், கும்பாபிஷேகம், மற்றும் கும்பாபிஷேகத்திற்கு முன் கோவிலில் நடைபெற்ற இதர திருப்பணிகளுக்கும் ஏற்பட்ட செலவை வள்ளல் திரு. பி. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களே ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

## குடமுழுக்கு விழா

கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்த வைணவ ஆகமங்களில் தேர்ச்சிபெற்ற அலங்கார பட்டர் அவர்களும் அவர்தம் குழுவினரும் தமிழகத் திலிருந்து வருத்தப்பட்டனர். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 41 நாட்களுக்கு மண்டலாபிஷேக உபயங்கள் பக்தர்களின் உதவியுடன் நடத்தப் படும். மண்டலாபிஷேகத்தின் கூருக கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள திருமதி எம். எஸ். சுப்புலெட்சுமி அவர்களும் புலவர் கீரன் அவர் களும் வருகை புரியவிருக்கின்றனர்.

## தேசிய நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு மன்றம்

தேசிய நினைவுச் சின்னங்கள் பாதுக்காப்பு மன்றம் 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாள் ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலை தேசிய நினைவுச் சின்னங்களில் ஒன்ருக அங்கீகரித் துள்ளது என்பது இந்துக்களுக்கு பெருமையும் மகிழ்ச்சியும் தரும் ஒன்ருகும். இந்து அறக் கட்டளை வாரியத்தின் மேலாண்மையின் கீழ் உள்ள

ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானமும் பல ஆண்டுகளுக்கு முன்னரே தேசிய நினைவுச் சின்னங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவில் மேலாண்மை

ஸ்ரீனிவாசப் பெருமாள் கோவிலும், கோவிந்த சாமிப் பிள்ளை மண்டபமும் இந்து அறக் கட்டளை வாரியம் நியமிக்கும் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய மேலாண்மைக்குழு ஒன்றினால் நிர்வாகம் செய்யப்படுகின்றது. கோவிலின் நிதிகளும் சொத்துக்களும் சமூக விவகார அமைச்சின் கீழ் இயங்கும் ஆணைபெற்ற நிறுவனமான இந்து அறக்கட்டளை வாரியத்தின் காப்பில் உள்ளது.

## இராஜ கோபுரம் கட்டும் பணி தொடர்பில் நடைபெற்ற இதர வேலைகள்

### (அ) சன்னிதி விமானங்களுக்கு வண்ணம் தீட்டல்

தாயார், ஆண்டாள், பெருமாள் சன்னிதிகளில் அமைந்துள்ள விமானங்களைச் சுத்தம் செய்து அவற்றில் உள்ள சிற்பங்களுக்கு புது வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. ஏகாதேசி மண்டபத்தின் மீதுள்ள சிற்பங்களும் புதுப் பொலிவுடன் திகழ வண்ணம் தீட்டப்பட்டுள்ளன.

### (ஆ) விநாயகருக்கு விமானம் கட்டுதல்

கோவிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் சன்னிதியில் இதற்கு முன்பு விமானம் கட்டப்படாதிருந்தது. அச்சன்னிதிக்கும் விமானம் கட்டும் திருப்பணியையும் வள்ளல் திரு. வி. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களே முன்வந்து செய்து முடித்துள்ளார்கள்.

### (இ) ஆஞ்சநேயர் சன்னிதி

ஆஞ்சநேயரின் திருஉருவச் சிலையை பக்தர்கள் பிரகாரத்திற்குள் சுற்றி வலம் வரும்படி திருத்தி அமைக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடைந்துள்ளது.

### (ஈ) சன்னிதிகளுக்குள் அழகுக் கற்கள் இடும்பணி

கோவிலுள்ள எல்லா சன்னிதிகளிலும் முன்பு இருந்த டைல்ஸ் கற்களை அகற்றி விட்டு இத்தாலி நாட்டு அழகிய டைல்ஸ்கள் அழகிய வண்ணத்தில் சுவற்றிலும் தரையிலும் போடப்பட்டுள்ளன. இத்திருப்பணி நடைபெறும் முன் வைணவ ஆகமப்படி பாலாலயச் சடங்குகள் செய்யப்பட்டு விநாயகர், ஆஞ்சநேயர், ஆழ்வார்கள் ஆகியோரின் திருஉருவச் சிலைகள் யாகசாலைக் கட்டிடத்திற்குள்ளும், ஆண்டாள், தாயார், பெருமாள் ஆகியோரின் உற்சவ திருஉருவங்கள் ஏகாதேசி மண்டபத்திலும் வைக்கப்பட்டு அன்றாட பூஜைகள் நடத்தப்பட்டு வந்தன.

### (உ) கோவில் மதில் உயரம் அதிகரித்தல்

கோவிலைச் சுற்றி அமைந்திருக்கும் மதிலின் உயரம் உயர்த்தப்பட்டதுடன் மதிலைச் சுற்றி அதனுள்ளேயே மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

### (ஊ) கொடி மரம்

கொடி மரம் இழைக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வந்த செம்புத் தகட்டினால் மூடப்பட்டுள்ளது.

### (எ) இராஜகோபுரக் கதவு

காரைக்குடியில் உள்ள சிறந்த கலை நுட்பவாதிகளைக் கொண்டு இராஜகோபுரத்திற்கான கதவு செய்யப்பட்டுள்ளது.



விநாயகர் சன்னிதியின் பழைய தோற்றம்.

# கலை மேவும் தலைவாசல் இராஜகோபுரம்

## ஒரு விளக்கம்

ஆ. பழனியப்பன்

கோவிலுக்கு அழகையும் கம்பீரத்தையும் அளிப்பது கோபுரமே. கோபுரமின்றி கோவில் இருப்பதில்லை. நிர்ணய கிரந்தமும்

"கோபுரே சிகரேத்வாரே ப்ரகாரே
பலிபீடகே அர்ச்சகே மூலலிங்கேச
சண்டேச அஷ்டதர்சனம்"

என கோபுர தரிசனத்தையே முதன்மையாகக் குறிப்பிடுகின்றது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் முதுமொழியும் "கோபுர தரிசனம் பாப விமோசனம்" எனும் முதுமொழியும் கோபுரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவே ஏற்பட்டவை என்பதனையும் நாம் உணரலாம்.

இந்து அறக்கட்டளை வாரியத்தின் மேலாண்மையின் கீழ் இயங்கிவரும் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில் மறுசீரமைக்கப்பட்டு 1966ம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற்றது. பொருளாதாரப் பற்றுக் குறையாலும் வேறு பல காரணங்களாலும் அச்சமயம் கோவிலுக்கு இராஜ கோபுரம் கட்ட இயலாமற் போயிற்று. கோவில் கோபுரம் இன்றி மூடி நீங்கிய மாந்தர்தம் சிரம் போல் காட்சியளித்துக் கொண்டிருப்பதை பல நெஞ்சங்கள் நினைந்து உருகியதுண்டு.

ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலுடன் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து தொடர்பும் ஈடுபாடும் கொண்டு பல்வேறு திருப்பணிகளைச் செய்துவரும் தமிழ்ப் பெரியார், வள்ளல் திரு. பி. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் கோபுரம் கட்டும் திருப்பணியைத் தாம் செய்ய விரும்புவதாக இந்து அறக்கட்டளை வாரியத்திடம் 1975-ம் ஆண்டு தெரிவித்த போது இந்து அறக்கட்டளை வாரியம் மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்று இராஜ கோபுரத் திருப்பணியை ஆரம்பிக்க அனுமதி வழங்கியது.

1975-ம் ஆண்டில் இந்து அறக்கட்டளை வாரியத்தின் உறுப்பினராகவும் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலின் மேலாண்மைக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய அரசாங்கப் பொறியியலாளர் (இன்ஜினியர்) திரு. வி. கிருஷ்ண கோபுரம் கட்டும் திருப்பணியை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வந்தார். அன்னாரின் அயராத உழைப்பினாலும் அறிவு நுட்பத்தினாலும் இராஜ கோபுரம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### நிர்மாண வேலை ஆரம்பம்

இராஜ கோபுரத்தின் நிர்மாண வேலை, 1975-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராஜ கோபுரம் கட்டும் திருப்பணியில் சொதை வேலைகள் செம்மையுறவும் கை தேர்ந்த சிற்பிகளின் வண்ண வேலைப்பாடுடனும் அமைந்து கோவிலுக்கு எழில் ஊட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழகப் புகழ் சிற்பி திரு. என். கணபதி அவர்களும் அவர்தம் குழுவினரும் ஒப்பந்தத்தின் கீழ் வருத்தப்பட்டனர்.



சுமார் 4 லட்சம் வெள்ளி செலவில் புதுப் பொலிவுடன் விளங்கும் ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலின் இராஜ கோபுரம் ஐந்து மாடிகளைக் கொண்டு சிங்கப்பூர் இந்துக்களின் பெருமைக்கு அணி சேர்க்கின்றது. 21.4 மீட்டர் உயரத்தில் ஐந்து மாடங்களிலும் இந்து புராணஇதிகாசச் சின்னங்கள் சிற்ப வடிவங்களில் உயிரோவியமாகப் பல்வகை வர்ணங்களில் தீட்டப்பட்டு சிற்பக் கலையின் ஓர் எடுத்துக் காட்டாகவும் திகழ்கின்றது. வண்ண வண்ணச் சிலைகளுடன் வானளாவி நிற்கும் இராஜ கோபுரத்தில் மொத்தம் **258** தெய்வச் சிலைகள் அமைந்துள்ளன.

## கோபுரச் சிற்பங்களின் விவரம்

ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் இராஜ கோபுரத்தில் செய்திருக்கும் விக்கிர சுதை உருப்புக்களின் விவரம்:-

### மேல் நிலம் ஒன்று

| | |
|---|---|
| தெற்குப் பக்கம் மகா நாசு தலை | 1 |
| தெற்குப் பக்கம் லெட்சுமி | 1 |
| கெந்தர்வக் குழந்தை | 5 |
| வடக்குப் பக்கம் மகா நாசு தலை | 1 |
| வடக்குப் பக்கம் சரஸ்வதி | 1 |
| வடக்குப் பக்கம் கெந்தர்வக் குழந்தை | 5 |
| நான்கு கோடியில் கருடன் | 4 |
| துவார பாலகர் | 4 |
| சங்கநிதி 2, பத்மநிதி 2 | 4 |
| தெற்குப் பக்கம் நரசிம்மர், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| வடக்குப் பக்கம் வராக அவதாரம், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| ஆக மொத்தச் சிற்பங்கள் | 32 |

### நிலம் இரண்டு

| | |
|---|---|
| நிலம் கோபுரந் தாங்கி | 8 |
| தசாவதாரம் | 10 |
| துவாரபாலகர் | 4 |
| வெண்சாமரப் பெண்கள் | 4 |
| பொய்கையாழ்வார் | 1 |
| பூதத்தாழ்வார் | 1 |
| பேயாழ்வார் | 1 |
| திருமழிசையாழ்வார் | 1 |
| வடக்குப் பக்கம் வைகுண்ட நாதர், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| தெற்குப் பக்கம் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| கோடியில் குழந்தைகள் | 4 |
| ஆக மொத்தச் சிற்பங்கள் | 40 |

### நிலம் மூன்று

| | |
|---|---|
| கலியுகத்தில் அவதரித்த ஆழ்வார்கள் | |
| மதுரகவியாழ்வார் | 1 |
| நம்மாழ்வார் | 1 |
| குலசேகர ஆழ்வார் | 1 |
| பெரியாழ்வார் | 1 |
| ஆண்டாள் | 1 |
| தொண்டரடிப் பொடியாழ்வார் | 1 |
| திருப்பாணாழ்வார் | 1 |
| திருமங்கையாழ்வார் | 1 |
| இராமானுஜர், வேதாந்த தேசிகர் குருபீடத்தில் உள்ளோர் மொத்தம் | 10 |
| ஆதி லெட்சுமி | 1 |
| சந்தான லெட்சுமி | 1 |
| கெஜலட்சுமி | 1 |
| தனலெட்சுமி | 1 |
| தான்யலெட்சுமி | 1 |
| விஜயலெட்சுமி | 1 |
| மகாலெட்சுமி | 1 |
| வீர்யலெட்சுமி | 1 |
| துவாரபாலகர் | 4 |
| வெண்சாமரப் பெண்கள் | 4 |
| கோபுரம் தாங்கி ஆண்கள் | 4 |
| கோபுரம் தாங்கி பெண்கள் | 4 |
| கோடியில் குழந்தைகள் | 4 |
| வடக்குப் பக்கத்தில் ஸ்ரீனிவாசப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| தெற்குப் பக்கத்தில் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி | 3 |
| ஆக மொத்தச் சிற்பங்கள் | 52 |

### நிலம் நான்கு

| | |
|---|---|
| கோபுரம் தாங்கி ஆண்கள் | 6 |
| கோபுரம் தாங்கி பெண்கள் | 6 |
| துவார பாலகர் | 4 |
| வெண்சாமரப் பெண்கள் | 4 |
| கோடியில் குழந்தைகள் | 4 |

கிருஷ்ண அவதாரக் காட்சிகள்.

| | |
|---|---|
| 1. வசுதேவர், தேவகி கம்சன் திருமணம் | 3 |
| 2. யமுனை நதியில் வசுதேவர், கிருஷ்ணனைத் தூக்கிச் செல்லுதலும், பாம்பு படமெடுத்தலும் | 2 |
| 3. வசுதேவர், தேவகி | 3 |
| 4. கண்ணனுக்கு பூதகி பால் கொடுத்து மாண்டது | 2 |
| 5. கம்சன் வதம் | 2 |
| 6. காலிங்க நர்த்தனம் | 4 |
| 7. யசோதையால் கட்டுண்ட கண்ணன் வாயில் உலகைக்காட்டுதல் | 2 |
| 8. நாரையைக் கிழித்தல் | 2 |
| 9. கோபிஸ்த்தரின் புடவையை எடுத்தல் | 9 |

| | |
|---|---|
| 10. கோபரத்தினகிரியை குடையாகப் பிடித்தல் | 2 |
| 11. கிருஷ்ணன், ருக்மணி, திருமணம் | 5 |
| 12. கிருஷ்ணன், இராதை, ருக்மணி காட்சிகள் | 3 |
| 13. கிருஷ்ண ஆசீர்வாதம் | 1 |
| ஆக மொத்தச் சிற்பங்கள் | 64 |

## நிலம் ஐந்து

| | |
|---|---|
| கோபுரம் தாங்கி ஆண்கள் | 6 |
| கோபுரம் தாங்கி பெண்கள் | 6 |
| துவார பாலகர் | 4 |
| சரஸ்வதி | 1 |
| லெட்சுமி | 1 |

## இராம அவதாரக் காட்சிகள்

| | |
|---|---|
| 1. விசுவாமித்திரர் யாகத்தை இராமர் லெட்சுமணன் காத்தல் | 5 |
| 2. அகல்லியா சாப விமோசனம் பெறுதல் | 4 |
| 3. (இராமர் சீதை கல்யாணம்) சீதை சுயம்வரம் | 4 |
| 4. இராமர், சீதை, இலக்குமணர், குகன் படகில் செல்தல் | 4 |
| 5. பரதனுக்குப் பாதிகை கொடுத்தல் | 5 |
| 6. லெட்சுமணன் சூர்ப்பனகை மூக்கை அறுத்தல் | 2 |
| 7. மாரிசமாயமானே சீதை கேட்க, இராமர் மானைப் பிடிக்க முயலுதல் | 3 |
| 8. இராவணன் சீதையைத் தூக்கி செல்லும் போது சடாயு பறவையோடு சண்டை போடுதல் | 3 |
| 9. வாலி சுக்கிரவன் சண்டை, அதர்ம செயலுக்காக வாலியை இராமர் வதம் செய்தல் | 3 |
| 10. சீதையைத் தேடிவர அனுமாரிடம் கணையாழியைக் கொடுத்தல் | 3 |
| 11. அசோக வனத்தில் சீதையிடம் அனுமான் கணையாழியைக் கொடுத்தல் | 3 |
| 12. அனுமன், பெரிய பருவதம் மலையைத் தூக்கி வருதல் | 1 |
| 13. இராமர், பத்துத்தலை இராவணனுடன் போர் செய்து மடியச் செய்தல் | 4 |
| 14. இராமர், சீதை பட்டாபிஷேகம் (பரதன், அனுமன், இலக்குமணன், தேவகுரு வசிஷ்ட்டர் உள்பட) | 6 |
| 15. கோடியில் குழந்தைகள் | 2 |
| ஆக மொத்தச் சிற்பங்கள் | 70 |

## வடக்கு மதில் சுவரில் உள்ள சிற்பங்கள்

கருடன்

கீதை உபதேசம், போர்க்களத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தல்

அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் விசுவ ரூபத்தை காட்டுதல்

சீதா இராமர் கல்யாணம், இராமர், சீதை ஜனகர், தசரத சக்கரவர்த்தி, வசிஷ்ட்டர், விசுவாமித்திரர், கௌசல்யா, கைகேயி, தோழிகள், யாகம் வளர்க்கும் அந்தணர் மகாவிஷ்ணு, யானை, முதலை, கஜேந்திர மோட்சம்

## கோபுர வாசலில் உள்ள சிற்பங்கள்

விளக்கு நாச்சியார்

துவார பாலகர்

தென்மதில் சுவரில் உள்ள சிற்பங்கள்

குவல்யாபீடம், கிருஷ்ணன் யானையை வதம் செய்தல்,

திருப்பாற்கடலில் பெருமாள் பாம்பு படுக்கையில் பள்ளிகொண்ட நிலை, ஸ்ரீதேவி, பூதேவி அனுமார், கருடன், நாரதர், தும்புருவர்.

தசாவதாரம் (10 நிலைகள்)

கருடன்.

## முடிவுரை

ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவிலுக்கு இராஜ கோபுரத்தைக் கட்டி, இதர திருப்பணிகளையும் செய்த தமிழ்ப் பெரியார் வள்ளல் திரு. பி. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் பல்லாண்டு வாழ்க என நம்முடன் ஆலயத்தில் உறையும் எம் பெருமான் ஸ்ரீநிவாசப் பெருமாளும் வாழ்த்துவார் என்பதில் ஐயமில்லை. இராஜ கோபுரம் எழில் குன்றுது வானளாவி நிற்கும் ஒவ்வொரு நாளும் வள்ளலின் பெயரும் புகழும் உயர்ந்து நிற்கும்.



# வைணவ ஆகமம்

(லெ. சு. அலங்காரபட்டர்)



(கட்டுரையாளர் வைணவ ஆகமங்களில் தேர்ச்சி பெற்றவர் என்பதுடன் குடமுழுக்கு விழாவை நடத்திட தமது குழுவினருடன் தமிழகத்திலிருந்து சிங்கப்பூர் வந்துள்ளார்)

## ஆகமம் மூன்று வகைப்படும்

- வைணவ ஆகமம்-விஷ்ணுவைப் பற்றிப் பேசும் நூல்.
- சிவ ஆகமம்-சிவனைப் பற்றிப் பேசும் நூல்.
- சக்தி ஆகமம்-[சாக்தேயம்] சக்தியைப் பற்றியது.

வைணவ ஆகமத்தைப் பற்றி எழுதுகிறேன். வைணவ ஆகமம், இரண்டு வகைப்படும்.

1. வைகானஸ ஆகமம்
2. பாஞ்சராத்ர ஆகமம்

சிங்கப்பூர் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில் ஸ்ரீ வைகானஸ ஆகம முறைப்படி அந்தனவகானஸ ஆகமத்தில் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு திருகுடமுழுக்கும் (மஹா கும்பாபிஷேகமும்) நாள்தோறும் பூசை விதிகளும் தொடர்ந்து நடந்து வருவதுடன் பெரு விழாக்களும் நடத்தி வரப்படுகிறது.

இப்போது, மேற்சொன்ன ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருமுன் ராஜகோபுரம் அமைத்து ஆலய விமானம் பழுதுபார்த்து வைகானஸ ஆகமப் படியே நடத்தி வருகிறுர்கள்.

## ஸ்ரீ வைகானஸ ஆகமம்

ஸ்ரீ விகநஸ மாமுனிக்கு பகவான் ஸ்ரீமந் நாராயணன் ஆகமத்தை அருளினுர். அந்த விகனச முனிவர் தன்னுடைய மாணுக்கர்களாகிய (1) மரீசி (2) பருகு, (3) அத்ரி, (4) காஸ்யபர் என்ற நான்கு முனிவர்களுக்கும் அருளினுர். விகனஸ முனிவரால் அறிவுறுத்திய காரணத்தால் "வைகானஸ ஆகமம்" என்று பெயர் பெற்றது.

அந்த வைகானஸ ஆகமம் நான்கு இலட்சம் கிரந்தமாகப் பேசப்பட்டிருக்கிறது. அந்த ஆகமத்தில் முக்கியமாக அர்ச்சாவதார மகிமையே அதாவது உருவ வழிபாடே மனித சமூகத்திற்கு முக்கியமானது, என்று விரிவாகப் பேசியிருக்கிறுர். எங்கும் நிறைந்துள்ள உருவமற்ற கடவுளுக்கு உருவ அமைப்பு தேவையா? என்ற வினு எழுகின்றது. அந்த உருவ வழிபாட்டால் தான் மனித சமூகம் தெய்வத் தனமையை அடைய முடியும் என்பதை முக்காலமும் உணர்ந்தவர்களாகிய முனிவர்கள் கண்டார்கள். இங்கு முனிவர் என்பது மெய்ஞானம் பெற்றவர்கள் யாவரையுமே பேசுவதாகும்.

மனிதரில் மூன்று வகை: (1) மிருகத்தன்மை உடையவர்கள், (2) மனிதத்தன்மை உடையவர்கள், (3) தெய்வத்தன்மை உடையவர்கள்.

உண்டு, உறங்கி, மலசலம் கழித்து, வமிச வளர்ச்சியுடன், வேறு எதையும் கருதாமலிருப்பவர்கள் மிருக ரகத்தைச் சார்ந்தவர்கள். மிருகமும் உண்டு உறங்கி, மலசலம் கழித்து வமிச வளர்ச்சியுடனிருக்கிறது.

அடுத்தபடியாக மனிதத்தன்மை பெற்றவர்கள். நல்லது, தீயது அறிந்து புலன்கள் வழியே செல்லாமல் மனத்தை அடக்கி ஆண்டு மனத்திற்கு அடிமைப்படாது, மனத்தை அடிமைப்படுத்தி வாழ்பவர்கள் மனிதத்தன்மை பெற்றவர்கள்.

மூன்ருவதாக, தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். மனத்தை அடக்கி தியாக புத்தியுடன் உலக நன்மைக்காக இமயம் முதல் குமரி வரை கால்களால் நடந்து மனித சமூகத்திற்குச் சேவை செய்த ஆதிசங்கரர், ராமானுஜர், மத்வாசாரியார் போன்றவர்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள்.

மாமுனிவர்கள் மனித சமூகம் நாகரீகம் பெற்று தெய்வத்தன்மையுடன் வாழ வேண்டுமென்று கருதினுர்கள். நாகரிகம் என்பது ஆடை அணிகளில் இல்லை. மனிதனின் மனத்தில் மறைந்து இருக்கும் தெய்வீகத்தை தோற்றுவிக்குமாறு செய்வதே நாகரிகம் என உணர்ந்தார்கள்.

எங்கும் நிறைந்துள்ள கடவுளுடன் மனிதன் உறவு கொண்டு தெய்வத்தன்மையை அடைவது எப்படி இயலும். ஆகவே மனிதனின் கண்களுக்கு உருவாக்கவே அழகான உருவங்களை அமைக்க முடிவு செய்தார்கள். அழகு எங்கெங்கு இருக்கிறதோ அங்கெங்கு மனிதன் மனம் இழுக்கப்படுவதைக் கண்டார்கள். ஆகவே இறைவனின் உருவங்களை சிற்ப முறைப்படி அழகாக வடிக்கத் தீர்மானித்தார்கள்.

அப்படி சிற்ப முறைப்படி அமைக்கப்படும் வடிவங்கள் [வெகுகாலமிருந்து பயனளிக்க, ஐம்பொன்னுலும் கற்சிலையினுலும் மரத்தாலும் மண்ணுலும் ஆக்கும் முறையைச் சிற்பக்கலை

வாயிலாக உணர்ந்தார்கள். அந்த உருவங்களுக்கு அழிவும் ஏற்படாவண்ணம் அதைக் காப்பாற்று வதற்காக ஆலயம் அமைப்பதைச் சிற்பமுறைப்படி கட்டினார்கள்.

அந்த ஆலயத்தின் அடித்தளங்களை நிலத்தின் கீழ் பாறை காணும் வரை அல்லது தண்ணீர் காணும் வரை தோண்டி அடித்தளத்தை உறுதி படுத்தினார்கள். பக்கவாட்டிலிருந்து காற்று தண்ணீரால் அபாயம் ஏற்படாவண்ணம் அழகாகவும் மிகவும் உயரமாகவும் மதிற் சுவர்களை எழுப்பினார்கள். வானத்திலிருந்து ஆபத்து வராத அளவில் விமானத்தை உயர்த்திக் கட்டி அதில் செப்பு கலசத்தையும் வைத்து (இடிதாங்கியாக) காப்பாற்றும் முறையை (கையாண்டு வருகிறார்கள்) கற்பித்தார்கள்.

அப்படி அமைத்த கோயிலில் கடவுளின் வடிவத்தை வைத்து வழிபட கருவறை அமைத்து அதில் இறைவடிவத்தை நிறுத்தும் முறையில் நவரத்னங்களை மூலபிம்பத்தின் அடிப்பீடத்தில் ரத்நந்யாஸம் என்ற ஆகம முறைப்படி விலை உயர்ந்த ரத்தினங்களை இட்டு அதற்கு மேல் பிம்பத்தை கோவில் கொள்ளச் செய்தார்கள்.

நவரத்தினங்களுக்கு இயற்கையிலேயே நன்மை தீமைகளை உண்டு பண்ணும் சக்தி இருப்பதை ரத்னபரீக்ஷை தெரிந்தவர்களைக் கொண்டு அவ்வாறே நல்ல ரத்னங்களை பிம்பத்துக்கு அடியில் போட வேண்டுமென்பதை உறுதிப்படுத்தி பேசியுள்ளார்கள்.

அந்தமூல பிம்பத்திற்கு சிற்பக்கலைப்படி இயற்கை அழகை ஊட்டியும் செயற்கை அழகாக ஆடை, ஆபரணம், மாலைகளால் அலங்கரித்தார்கள். அந்தக் கருவறை இருட்டாக இருக்கும்படி சுவர்களில் சன்னல்களை வைக்காமல் அமைத்ததின் காரணம் மனிதனின் பார்வை அந்த அழகான மூல வடிவத்தில் ஒன்றிக்கவே செய்த சிறந்த முறையாகும்.

சிற்பக்கலைப்படி அழகாக உருவங்களைச் சமைத்து பாதுகாப்பாக ஆலயத்தில் வைத்து சக்திவாய்ந்த ரத்னங்களையும் பிம்பத்தின் கீழ் சமர்பித்தது போதாதா? அதுவே மனிதன் மனத்தை இழுத்து ஒர்மைப்படுத்துமே ! மேற்கொண்டு குடமுழுக்கு அன்றாடப் பூசை திருவிழாக்கள் தேவையா? என்ற வினவுக்கு விடை பகர்ந்துள்ளார்கள். அதைக் கீழே காண்போம்.

உலகில் மனித சக்திகளை அழிக்கும் அசுர சக்தியும் அசுர சக்திகளை அழித்து வரும் தெய்வ சக்தியையும் தங்களது அகக் கண்ணால் கண்ட மேலோர்கள் ஆலயம் கட்டி பிம்பத்தை நிலை நிறுத்தச் செய்து அப்படியே குடமுழுக்கு என்ற தெய்வீக கர்மாவை செய்யாமல் விட்டு விட்டால் அந்த ஆலயத்தில் பேய்களும் பூதங்களும் வாழத் தொடங்கி விடும். ஆகையால் ஆலயம் கட்டியதும் சுணங்காமல் திருக்குடமுழுக்குச் செய்ய வேண்டும். அப்படி உடன் செய்யாமல் போனால் நாட்டிற்கும் உலகத் தோர்க்கும் அதற்கு முக்கியமானவர்களாயிருந்த தலைவர்களுக்கும் பீடைகளும் பிணிகளும் ஆபத்தும் அழிவும் ஏற்பட்டுவிடும். ஆகையால் உடனே குடமுழுக்குத் தெய்வீகக் கர்மாவை நடத்த வேண்டுமென்று வேதங்கள் முறையிடுகின்றன.

குடமுழுக்கு என்னும் நிகழ்ச்சியால் எப்படி தெய்வீக சக்திகளை அந்த பிம்பத்திற்கு கொண்டு வருகிறார்கள் என்பதை விஞ்ஞான ரீதியில் அழகாகப் பேசியுள்ளார்கள். வேத முறைப்படி யாக சாலையும், குண்டங்களும் மேடைகளும் அமைத்து அந்த மேடையில் கும்பத்தை முறைப்படி பூசை செய்து வந்தால் அந்தக் கும்பத்தினுள் இருக்கும் தண்ணீரில் தெய்வீகத்தின் மாத்திரைகள் சேமிக்கப்படும் என்பதை வேத முறைப்படி விளக்கினார்கள். அதாவது யாகசாலையில் உயர்ந்த மேடையில் கும்பத்தை தண்ணீரால் நிரப்பி அந்தக் கும்பத்தின் உள்ளே சக்திவாய்ந்த யந்திரத்தகடுகள் தங்கத்திலும் வெள்ளியிலும் முறைப்படி மந்திர எழுத்துக்களை எழுதி அதை உருவேற்றி அதில் சமர்பிக்கச் செய்துள்ளார்கள். பின்னும் நான்கு வர்ணத்தார்களின் முகமாய மான ஆயுத உருபமான சித்திரங்களை அந்தத் தகடுகளில் எழுதி வைக்கச் செய்துள்ளார்கள்.

அதற்குப் பிறகு நவரத்னங்களும் சேர்க்கப்படுகிறது. தண்ணீர் ஒன்பது நாட்கள் குடத்திலிருப்பதால் அது கெடாதவண்ணம் கிராம்பு சாதிக்காய் ஏலம் குங்குமப்பூ பச்சை கற்பூரம் முதலிய வாசனைப் பொருட்களை அந்த தண்ணீரில் சேர்த்துள்ளார்கள்.

இவ்வாறு கும்பத்தை முறைப்படி செய்ததும் ஆசாரியர் அதற்கு தெய்வ சக்தியை ஊட்டுவதற்காக அக்ஷர ந்யாஸம் என்றசெபத்தை கும்பத்தின் அருகிலிருந்து செய்வார். அந்த செபத்தின் மாமந்திரத்தின் சொற்களின் தன்மாத்திரைகளையும் அங்கு யாகசாலையில் நடக்கும் வேள்வியின் மந்திரத்தின் தன்மாத்திரைகளையும் வேதபாராயணம் திவ்யப்ரபந்த பாராயணம் முதலிய பாடல்களின் பாராயணத்தின் தன்மாத்திரைகளையும் கும்பத்தில் உள்ள கூர்ச்சம் என்னும் தர்ப்பை புல்லால் முடிந்த ஒரு கருவி (சாதன வஸ்து) ஆகாய தன்மாத்திரையுடன் கலந்துள்ள மேற்சொன்ன மந்திர செப பாராயண தோத்திர பாடல்களின் தன்மாத்திரைகளை இழுத்து கும்பத்தில் சேர்த்து விடும்.

ஆகவே எவ்வளவு நாட்கள் அதிகமாக யாக சாலையில் கும்பம் வைத்து செபம் முதலியவைகளை செய்வோமோ, அவ்வளவுக்கு அந்தக் கும்பம் சக்தியுடையதாக ஆகிவிடுகிறது. தெர்பம் என்ற புல்லுக்கு மந்திரத்தின் தன்மாத்திரைகளை இழுக்கும் சக்தி உள்ளது என்றதை மாமுனிவர்கள் கண்டு தெய்வீகமான கர்மாக்களில் அந்த தர்ப்பைப் புல்லை பயன் படுத்தி வரும்படி வற்புறுத்தி பேசியுள்ளார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் வந்த அமெரிக்கப் பத்திரிக்கையில் இந்த தர்ப்பை பற்றிய ஆராய்ச்சி செய்து மந்திரத்தின் தன் மாத்திரைகளை இழுக்கும் ஆற்றல் உள்ளது என்று விளக்கியிருக்கிறார்கள். மின் அலைகளை கூர்மை பொருந்திய செப்புக்கம்பிகள் இழுக்கும் தன்மை போல் கூர்மை பொருந்திய தர்ப்பை புல் மந்திரங்களின் தன் மாத்திரைகளை இழுக்கும் வல்லமை பொருந்தியது.

இனி மந்திரங்களைப் பற்றிக் காண்போம். மந்திரங்கள் என்பது முனிவர்கள் வேதங்களி லிருந்தும் உபநிஷத்துக்களிலிருந்தும் தங்கள் தபோமகிமையால் கண்டு உணர்ந்த உண்மை யாகும். பல எழுத்துக்களின் தொகுதியின் சக்தி யால் அந்த மந்திரத்திற்கு கட்டுப்பட்ட தெய் வங்கள், நாம் விரும்பிய காரியங்களைச் செய்யும் ஆற்றலை அந்த மந்திரங்கள் மூலம் நாம் பெற முடியும். அதாவது ஒரு திருமண அழைப்பு இதழ்போல் உள்ளதும் சுற்றறிக்கை போல் உள்ளதுமான விளம்பரங்கள் குறிப்பிட்ட நேரத் தில் குறிப்பிட்ட இடத்தில் ஆயிரக் கணக்கான மனிதர்களைக் கூட்டி வைக்கும் ஆற்றல் அந்த விளம்பரங்களில் உள்ள எழுத்துக்களுக்கு இருப் பதை கண்கூடாகக் கண்டு வருகிறோம். அத் தன்மையதே முனிவர்களின் தபவலிமையால் கண்ட மந்திரங்களும்.

யாகசாலையில் மேடையில் வைத்து பூசை செய்த ஆற்றல் வாய்ந்த கும்பத்தை மேளதாள முழக்கத்துடன் முறைப்படி எடுத்துச் சென்று மூல பிம்பத்தின் அருகில் வைத்து விடுகிறார்கள். ஆசாரியர் திரையிட்டு தனியாக பிம்பத்தின் அருகில் அமர்ந்து அந்த பிம்பத்தின் தியான செபத்தை ஒர்மையுடன் செய்து, கும்பத்தின் அங்கங்களில் சக்திவாய்ந்த மந்திரங்களின் சொற் களைத் தர்ப்பையின் நுனியின் வாயிலாக மூர்த்தி யின் அங்கங்களில் எழுதுவார்கள். அதேசமயத் தில் வெளியேயுள்ள பக்தர்களுள் ஆண்டவன் வரப் போகிறார், நமக்கு சேவை சாதிப்பார் என்ற எண்ணத்தின் மனோதத்வ தன்மாத்திரை-களும் சேர்ந்து எம்பெருமானிடம் பரம கரு ணையை உண்டுபண்ண ஏதுவாகும்.

ஆசாரியார் அந்த ஆற்றல் வாய்ந்த கும்ப நீரால் தர்ப்பையின் மூலம் ஆவாகனம் செய்து குடமுழுக்கு என்ற நிகழ்ச்சியை நிறைவுபெறச் செய்து எம்பெருமானிடம் ஒர்மையான மனமுடன் வேண்டச் செய்து அவனை அர்க்கிய பாத்ய ஆசமன தீபங்களால் பூசை செய்வார்.

அன்று செய்த பூசை தொடர்ந்து அன்றாடப் பூசையாக நடத்தி வருவதால் பிம்பத்தில் உட் புகச் செய்த ஒன்றித்த தெய்வீக ஆற்றல் குறை யாமல் பக்தர்களுக்கு அருள் புரிந்து வருவதற் காகவே அன்றாடப் பூசைகளை மிகவும் சிறப்பாக வும் பயபக்தியுடனும் செய்து வரவேண்டியது முக்கியமாகும்.

திருவிழா நடத்துவதால் பலருக்கு கிடைக்கும் தேவ பணியால் நன்மை அடை கிறார்கள். அதுமட்டுமன்று, உலகில் பொருளா தாரம் பெருக அது சிறந்த நிகழ்ச்சியாகும். ஓர் ஊரில் திருவிழா நடந்தால் அந்த நகரத்தில் லட்சக் கணக்கில் வாணிகம் நடக்கவும் தொழில் வளர்ச்சியும் சமூகப் பண்பாடும் நாகரிகமும் ஏற் பட காரணமாயிருந்து வருகிறது.

மாமுனிவர்கள் ஆராய்ந்தார்கள். அன்றாட பூசை யில் குறிப்பிட்ட அளவில் தானே மனிதர்கள் பயன் அடைகிறார்கள். பலர் அதில் பங்கு கொள்ள இடமில்லையே என்று சிந்தித்து பஞ்சபர்வ புறப்பாடு, கார்த்திகை உறியடி முதலிய விழாக் களை ஏற்படுத்தி அதில் நிறையபேர்கள் ஈடுபடச் செய்தார்கள். அதிலும் அவர்களுக்கு மனம் நிறைவடையாத அளவில் வெகு பேர்களுக்கு தேவபணி கிடைக்காததினால் கோவிலில் ஆண்டுக் கொரு முறை விழா ஏற்படுத்தினார்கள். அதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பை அளித்தார்கள். அதுவும் முனிவர் களுக்கு மனநிறைவு அளிக்கவில்லை. பெரிய தேர் செய்து தேர்த்திருவிழா நடத்தி ஆயிரக் கணக் கான பேர்கள் ஈடுபட்டு மகிழ்ச்சி அடையச் செய்தார்கள். சிறிய மூர்த்திக்கு இவ்வளவு பெரிய தேர் தேவையா? என்ற யுக்தி வாதத்திற்கு இடமில்லாத அளவு எவ்வளவுக்கு தேர் பெரிய தாய் பளுவுள்ளதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு பதினாயிரக்கணக்கான பக்தர்கள் ஈடுபட்டு மகிழ்வார்கள் என்ற சிறந்த நோக்குடன் செய்ததே தேர்த்திருவிழாவின் பெருமையாகும். இவ்வளவு சிறப்புடையதாக ஆலய வழிபாட்டை ஏற்படுத்தி பின்னால் வரும் பக்தர்கள் அந்த ஆலயத்தை காப்பாற்றி வரவேண்டும் என்பதற்கே ஏற்பட்டது பழுது பார்க்கும் திருப்பணி நிகழ்ச்சி யாகும். பழையதைப் புதுப்பிப்பதே நமது கடமை. பழையதை அழிய விட்டுவிட்டு புதிய தாகச் செய்தால் மிகவும் தோசமாகும் என்பதை பெரிய ஆலயங்களின் கல்வெட்டில் அமைத்துள் ளார்கள்.

இராமநாதபுரம் மாவட்ட அருள்மிகு ஆண் டாள் திருமுன் திருக் கோயிலிலும், அவ்வூரிலுள்ள மற்றொரு வடபத்திரசயனர் திருக்கோயிலிலும் உள்ள கல்வெட்டுக்கள் நமக்கு நம் கடமையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன.

பிறர் செய்த தர்மத்திலிருந்து அந்த சொத் துக்களைக் கவர்வதால் தான், செய்த தர்ம மானது பாழாகி பலன் அறியாது போய்விடும். என்ற எழுத்துக்களிருப்பதைச் சிங்கப்பூர் அன்பர்கள் அழியாமல் தர்மத்தைக் காப்பாற்றி வர ஏதுவான பழையதை புதுப்பித்தல் என்ற சிறந்த தேவபணியைச் செய்திருப்பது. எம் பெருமானின் பரமன் அருளுக்கு உரியவர்கள் ஆகிறார்கள் என்ற மகத்தான நிகழ்ச்சி உலகிற்கே

சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. என்று எழுவது மகையாகாது.

ஆலயத்தின் விமானத்தையும் இராச கோபுரத்தையும் உயர்த்திக்கட்டிஇருக்கும் முறை யானது தூரத்தில் செல்லும் பயணிகளின் உள்ளத்தில் உணர்ச்சியை உண்டுபண்ணி கோபுரம் மறையும் வரை புகை வண்டியில் செல்பவர் களும் பேருந்துகளில் செல்பவர்களும் தன்னை மறந்து மூலஸ்தான பிம்பத்தை தன் உள்ளத்தில் உணர்ந்து கண்ணும் கண்ணீருமாய் வேண்டுதற்கு ஏதுவானதாகும் இந்த இராஜகோபுரம் அமைப்ப தால அருட்பெரும் கடலான அருள்மிகு ஸ்ரீநிவாசப்பெருமாள் அதில் பங்கு கொண்ட யாவருக்கும் பக்தர்களுக்கும் தொழிலாளர்களுக் கும் உடலாலும் பணத்தாலும் எண்ணத்தாலும் உதவியவர்கள் யாவருக்கும் அருள்புரிந்து நல் வழி காட்டி காப்பாராக.





# “திருமால் நெறி”

திரு. சே. இராமாநுஜாசாரியார், குமாரவாடி

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவை மிசை
படர்பொருள் முழுதுமாய் அவைஅவை
தோறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும்
பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே
— நம்மாழ்வார்.

எங்கும் பரந்து என்றும் நிலைத்துள்ள பொருளுக்குப் “பரம்பொருள்” என்று பெயர். அப்பொருள் எல்லாவற்றைக் கடந்தும், எதனுள்ளும் கலந்தும் இருப்பதால் “கடவுள்” என்று வழங்கப்படுகிறது. “பரந்து உளனும் எங்கும்” என்று இப்படி வியாபித்துப் பரவி நிற்றல் பற்றி வேதம் இறைவனை “வியாப்னோதி இதி விஷ்ணு” என்கிறது. இதே போன்று “ஸர்வத்ர-வஸதி இதி வாஸு தேவ:” என்பதும் வேதம் கண்ட சொல்லாகும். எல்லாவிடத்தும் வசிப்பவன் அதாவது பரவுதல், நிலைத்து நிற்றல் மட்டுமின்றி, தான் பரவியுள்ள பொருள் அனைத்தையும் தானே தாங்கி, தன்கருத்துப்படி இயக்கி, இறைவனாய் விளங்குபவன் என்ற முழுக் கருத்தையும் கொண்ட ஒரே சொல் நாராயணன் என்பது; “தன்னுள் அனைத்துலகும் நிற்க நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்” என்கிறார் நம்மாழ்வார். வேதமும் வேதாந்த விளக்கமான அனைத்து நூல்களும் விவரிப்பது இதனையே.

பெயரும் வடிவமும் உள்ளது பொருள்; ஒவ்வொரு பொருளுக்கும் பெயரும் வடிவமும் இருப்பது போலவே, உயிரும் உண்டு; சொல், கல் என்று நாம் பெயர் இட்டுக் குறிப்பிடும் எந்தப் பொருளிலும் உயிர் உண்டு; உயிருக்கே உரிய அறிவும் உண்டு; ஆனால் அந்த உயிர்களை நாம் காண முடிவதில்லை; நாம் கேட்பதும்



காண்பதும் பெயர் வடிவங்களை மட்டுமே; அறிதற்கு அப்பாற்பட்டு, கருதுதற்கு அரியதாய் விளங்குவது உயிர்; கருதுதற்கு அரிய உயிர்க்கும் உயிராய் விளங்குபவன் இறைவன். உயிர்களை உடையவன் இறைவன் என்பதே மறை பகரும் உண்மை.

உடல் உயிரின் பொருட்டே உள்ளதை அனுபவத்தில் அறிகிறோம்; உயிரினமாகிய நாமும், நம் உயிருக்கு உயிரான இறைவன் பொருட்டாகவே உடலுடன் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஊகித்தும் அறியலாமல்லவா? இவ்வாறு அறிந்து தெளிந்து வாழ்வதே உயிர் வாழ்வின் பயனாகும்; உண்மை உணர்வின் சிறப்பாகும்; இதுவே வேதக் கருத்தும் ஆகும்.

பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்கும், ஒண்தாமரையாள்
கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு.

உண்மை உணர்வின் சிறப்பை எடுத்துக் காட்டி, உயிர் வாழ்வின் பயனைப் பெற வைக்கும் நெறியே ஸ்ரீ வைஷ்ணவம். அனுபவத்தை யொட்டிய அறிவியல் வைதிக நெறி, வைணவமே.

## தத்துவச் சிறப்பு :

தத்துவம் (உண்மை) ஹிதம் (நன்மை) புருஷார்த்தம் (பேறு) இம்மூன்றையும் தெளிவுறுத்துவதே ஒரு மதம், தரிசனம் அல்லது சமய சித்தாந்தமாகும்.

ஸ்ரீ வைஷ்ணவம் மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட "தத்துவ த்ரய" தரிசனமாகும்.

தத்துவத்ரயம்: "சித்து" (அறிவுள்ள ஜீவன்), "அசித்து" (அறிவற்ற பொருள்) "ஈசுவரன்" பேரறிவாளன் (பேராற்றலுள்ளவன்). இவை மூன்றும் இணைபிரியா உண்மைப் பொருள்களாகும்.

அதில் "சித்து" மூன்று வகை: 1. "பத்தர்" பௌதிக உடலில் கட்டுண்ட ஜீவாத்மாக்கள். 2. முக்தர் பூத உடல்நீங்கி அமர உடல் பெற்றுப் பரமபதம் என்னும் வீடுபேறு பெற்றவர். "நித்யர்" இறைவனோடு என்றும் பிரியாது உடனுறைந்து அவனை உகப்பிப்பவர்.

அசித்து: 1. "சத்வ சூன்யம்" (காலம்). 2. "மிச்ர சத்வம்" (முக்குணம் கலசிய பொருளியல் உலகு-இயற்கை). 3. "சுத்த சத்வம்" பரமபதம் (அறிவியல் உலகு).

ஈச்வரன் (உடையவன்) ஒருவனே! அசித்தை உடலாகக் கொண்ட உயிர்களைத் தனக்குச் சரீரமாய்க் கொண்டு தானிட்ட வழக்காய் இயக்கி வைக்கும் ஈச்வரன் ஸ்ரீமந் நாராயணனே. இதனையே,

"மேவித்தொழும் பிரமன் சிவன்
இந்திரனாதிக் கெல்லாம்
நாவிக்கமல முதற்கிழங்கு"

என்றும்;

"முதல் தனி வித்தேயோ! முழு
மூவுலகாதிக் கெல்லாம்"

என்றும்;

"தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந்தன்எம் பெருமானே"

என்று அறுதியிட்டு வைத்தார் ஸ்ரீ வைஷ்ணவத்தின் பிரதம ஆசிரியரான நம்மாழ்வார்; இறைவனால் "மயர்வற மதிநலம்" அருளப் பெற்றவராகையால் அவர் வாக்குக்கு மறுப்புக் கூறுவாரும் உண்டோ?

சித், அசித், விசிஷ்டபிரம்மம்-"தத்வம் நாராயண; பர;" என்கிறபடி ஸ்ரீமந் நாராயணனே என்பது ஸநாதன ஸ்ரீ வைஷ்ணவ, விசிஷ்டாத்வைத வேதாந்த தரிசனமாகும்.

இதம் (நன்மை): இறைவனை அடையும் நல்நெறிகளாகக் கர்மஜ்ஞான, பக்தி யோகங்களை வேதங்கள் நமக்குக் காட்டின. ஆனால், "நெறி உள்ளி உரைத்த கணக்கறு நலத்தனன்"; "நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறை, ஞானத்து ஒரு மூர்த்தி" யான கீதாசாரியன் கண்ணனே "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்று தன் திருவடிகளையே (ஆசார்யர்களையே) தஞ்சமாகப் பற்றும்படி காட்டினான். "எம்பிரான் சரணே சரண் நமக்கு" என்றார் நம்மாழ்வாரும்.

புருஷார்த்தம் (பேறு): ஜீவன் அடையத்தக்க நற்பேறுகளான அறம், பொருள், இன்பம் வீடு என்பவற்றுள், "கண்ணனுக்கே ஆமது காமம்" என்கிறபடி "கிருஷ்ணநு ஸ்மரணம் பரம். (கிருஷ்ணனிடம் அன்பே பெரிது).

இங்கும், அங்கும், எங்கும் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று திருமாலுக்கு அடிமை செய்வதே சிறந்த பேருக அறுதியிடப் பெற்றுள்ளது. இப்படி தத்துவ, இத, புருஷார்த்தங்களைத் தெளிவுறுத்துகிறது வைஷ்ணவம்.

## பிரமாணங்கள் :

ஒன்றை உள்ளபடி அறிதற்கு உதவும் சாதனத்தை "பிரமாணம்" என்பர். அந்தப் பிரமாணம் பிரத்யட்சம் (கண்கூடு) அனுமானம் (ஊகம்), சப்தம் (சொல்வழி) என மூன்று வகைப்படும்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற

வகை தெரிவதற்கு உதவும் புறப்புலன்கள் ஐந்தும், நன்மை தீமைகளின் விளைவான இன்ப துன்பங்களை நுகர்வதற்கு அமைந்த உள் இந்திரியமும், சேர்ந்து அனுபவத்தில் காண்பது "பிரத்யட்சம்". புகை இருக்குமிடத்தைப் பார்த்து, அங்கே நெருப்பு இருக்கிறது என்று அறிகிறோமல்லவா? இது "அனுமானம்" — ஊகம்.

ஐம்புலன்களாலும், அனுமானங்களாலும் அறிய முடியாதவற்றை அறியச் செய்வது சப்தம்; அல்லது வேதச் சொற்களாகும். ஆத்ம, பரமாத்ம தத்துவங்களையும் இப்பிரபஞ்சத்தின் முழு உண்மையையும் அறிதற்கு சாஸ்திரங்களே (வேதங்கள்) நமக்குத் தஞ்சம்.

## வேதச் சிறப்பு :

ஒருவனால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் படைக்கப்படாமல், என்றும் தன்னாலேயே மற்றப் பிரமாணங்களும் உண்மையாக விளங்க உதவுவதே வேதத்தின் சிறப்பு. ஒருவனால் ஆக்கப்பெற்றதில்லை (அபௌருஷேயம்) என்பதால், ஒருவனுக்குள்ள ஐயம், திரிபு, மறதி, சோர்வு, வஞ்சகம் போன்ற குறைகள் அற்றது வேத நூல்.

ஊகத்தாலும், கண்கூடாகவும் உணர இயலாதவற்றையே உணர்த்தும் தனிச் சிறப்பால் தனக்கு நிகரின்றித் தானே மேலான பிரமாணமாக நிற்கிறது வேதம். கடவுளைப் போல் அதுவும் என்றும் உளதால், படைக்கப் படுவதுமில்லை; அழிவதுமில்லை. இவை போன்ற சிறப்புக்கள் வாய்ந்தவை மட்டுமே மறை நூல்கள் எனப்படுவன.

## மறையாய நால்வேதம் :

இப்போது நமக்குக் கிடைக்கும் மறை நூல்களில் "ருக் வேதம்" — 10 மண்டலங்களையும், 10,552 மந்திரங்களையும் கொண்டுள்ளது. வசன நடையில் உள்ள யசுர் வேதம் 40 அத்தியாயங்களையும், 1975 மந்திரங்களையும் கொண்டது. இறைவன் உகந்த இசை இன்பம் நிறைந்த சாமவேதத்தில் உள்ள மந்திரங்கள் 1875. போர்க்கருவி அழிவுச் சாதனங்கள், அதற்கான மந்திர தந்திரக் குறிப்புகள் நிறைந்த "அதர்வண வேதம்" 20 காண்டங்கள் 5987 மந்திரங்கள் உள்ளது.

எழுதாக் கிளவி, செவிச் செல்வம், மறை, "சுருதி" என்றெல்லாம் கொண்டாடப் பெறும் வேதங்களிலே மிக்க இறைநிலை, மெய்யாம் உயிர் நிலை, தக்கநெறி, தடையாகி நிற்கும் ஊழ்வினை, இறை அருளால் பெறும் நிறை வாழ்வு இவை ஐந்தும் செம்பொருள்களாகக் கூறப்படுகின்றன. வேதப் பகுதியில் "புருஷ ஸூக்தம்" தலை சிறந்தது. (வேதேஷு பௌருஷம் ஸூக்தம்) வேதத்தின் முற்பகுதி கர்ம காண்டம். பிற்பகுதி (உபநிஷத்துக்கள்) ஞானகாண்டம்.

இறை அருள் பெற அவனை உகப்பிக்கும் செயல்களை, இயற்கையின் முக்குணங்களான தாமஸ, ராஜஸ, ஸாத்விகங்களான வழிகளில் வகுத்துத் தக்காருக்குப் பொதுவாகக் கூறும் இயல்புடையது வேதம். பல்வகை வேள்விகள், அரிதாயும் பெரிதாயுமான தானங்கள், தியாகங்கள், கடுமையும் கொடுமையும் வாய்ந்த தவங்கள் போன்றவையும் வேதத்தின் கட்டளைகளாக உண்டு.

"காயோடு நீடுகனி உண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம் செய்யும்"

வழிகள் அவை.

கர்மகாண்ட விளக்கமாக, சமுதாயப் பொது அறநெறிகளாகிய கட்டளைகளை சுருதிகளை ஸ்மரித்து (நினைத்து) மனு முதலானோர் செய்த அறநூல்கள் (தர்மசாஸ்திரம்) ஸ்மிருதிகள் எனப்படுகின்றன. அவற்றுள் "மனு ஸ்மிருதி" மிகச் சிறந்தது.

ஸமுதாயமாகிய பந்தலைத் தாங்கும் நான்கு கால்கள் போல, நான்கு வர்ண தர்மங்களையும், பொது அறங்களையும்-தனி அறங்களான ஆசிரம நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டவை முனிவர்கள் வெளியிட்ட நூல்கள்.

## இதிகாசங்கள் :

பிரம்ம காண்டம் (உபநிஷத்துக்கள்) வேதாந்தப் பகுதி. அவற்றுள் தசோபநிஷத் (பத்து) மிக மேம்பட்டவை. அவற்றின் விளக்கமாக அமைந்தவை இதிகாசங்கள். பரப்பிரம்மம் தான் இவ்வுலகைப் படைத்துக் காத்து அழித்து விளையாடுகிறது. அதை உணர்ந்து தியானித்து அதனருளால் பிறவித் துன்பத்தை இவ்வுயிர்கள் போக்கிக் கொள்ளலாம் என்பது பிரம்ம காண்டக் கருத்து.

இறைவனுக்கு லீலா விபூதி (இவ்வுலகம்) நித்யவிபூதி (பரம பதம்) இரண்டும் உடைமையாகும். இறைவனது விளையாட்டுக்குரியது இவ்வுலகு. உயிர்கள் தம் வினையடியாக அவன் விளையாட்டில் அகப்படுகின்றன. சீவன் இறந்தால் இறைவனிடம் அடைக்கலம் கோரி, அவன் அருளுக்கு இலக்காகி இவ்விளையாட்டிலிருந்தே விடுபட்டு பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு அற்று ஒளிகொண்ட சோதியுமாகி அவனைக் கிட்டி அவ்வுலகில் நித்திய ஆனந்தமடையலாம்.

## பிரஸ்தான த்ரயம் :

"பிரஸ்தான த்ரயம்" என்று போற்றப்படும் உபநிஷத்துக்கள், வியாசரின் பிரம்ம ஸூத்ரம், பார்த்தசாரதியின் வார்த்தையான பகவத்கீதை மூன்றுமே, இவ்வுண்மையை விளக்குவன. உபநிஷத் வாக்கியங்களைக் குறிக்கொண்டு, இதிகாச, புராணங்கள் (அளவை) வியாகரண (சொல் இலக்கணம்), மீமாம்ஸை (வேதச் சொல் ஆய்வு) துணைகொண்டு, வேதாந்த நூல்கள் விரிந்தன. சங்கர, ராமானுஜ, மத்வ பாஷ்யங்கள் போன்றவை மலர்ந்தன.

எனினும், வேதாந்த விழுப்பொருளை விளக்குவதில் வால்மீகியின் இராமாயணமும் வியாஸ பாரதமும் கதை சொல்வதாக அமைந்து, கருத்தைப் புகுத்துவதில்முன் நிற்பன. அதனுள்

ளும் மறையாய நூல் வேதத்துள் நின்ற மலர்ச் சுடரான ஸ்ரீமந் நாராயணன், சக்கரவர்த்தித் திருமகனுய் அவதரித்தபோது, வேதமும் வால் மீகி முனிவரின் வாக்கில் இராமாயணமாய் வெளி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. "இதிகாச சிரேஷ்டம்" இராமாயணமே. மற்றும் பல காரணங்களாலும் பாரதம் கூறும் தூது போனவன் (கிருஷ்ணன்) ஏற்றத்தைக் காட்டி லும், சிறை இருந்தவள் (சீதை) ஏற்றத்தைக் கூறும் இராமாயணம் பரம ஸாத்விகமாக விளங்குகிறது!

## புராணங்கள் :

இதிகாச உண்மைகளை உருவகங்கள் கொண்டு மேலும் தெளிவுறுத்துபவை புராணங்கள். அவை பதினெட்டு. படைப்புக் கடவுளாம் பிரம்மாவின் வாக்கிலிருந்து வந்தவை. அவை ஸாத்விகம் ராஜஸம், தாமஸம் என மூவகை. அதில் வசிஷ் டரின் பேரனும் வியாசரின் தந்தையுமான பராசரர் இயற்றிய "விஷ்ணு புராணம்" "புராண ரத்னம்" என்று உச்சிமேல் வைத்து மெச்சப் படுகிறது. அதன் விரிவாக விளக்கமாகப் பரா சரின் பேரனும் வியாசரின் மகனுமான சுக முனிவரின் பாகவத புராணம் தலைசிறந்து விளங் குவது. ஸாத்விக புராணங்களுள் சிறந்தவை இவைவே. மற்றும் ராஜஸ தாமஸ, புராணங் கள் ஸாத்விகர்களால் தள்ளத் தக்கன; அவை ராஜஸ தாமஸர்களான பாமரர்களே கொள்ளத் தக்கன.

இப்படி ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்கள் அநாதியான வேதக் கருத்துக்களை விளக்கி எதிர் ஒலிப்பதால் "உபப்ருஹ்மணம்" என்று கூறப்படுகின்றன.

## மறைநுண்பொருள் நூல்கள் :

பிரம்மா மற்றும் ரிஷிகள் மூலம் பொதுவாக வேதமும், நீதிநூலும் வெளியிட்ட பகவான்; தானே நர - நாராயணனுய் நின்று வேதஸார தமமான அர்த்தங்களை ஸாத்விகர்களான வைஷ்ண வர்களுக்குத் தன் அருளாலே வெளியிட்டிருக் கிறுன். இவை "ஆசார்ய உபதேச" வழியாலே ஏழாட்காலம் (ஏழு தலை முறை) பழிப்பிலரான ஸ்ரீவைஷ்ணவர்களால், அன்று தொட்டு இன்று காறும் ரகஸ்யமாக ஆதரித்துக் கொண்டாடப் பட்டுப் பின்பற்றிவரப் பெறுகின்றன. வழிவழி வந்து, "தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி, திகழ் திருச்சக்கரத்தின்" கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடி ஆட் செய்கின்றோம்" என்கிற கிரமத்தில் "லட்சுமி நாத சமாரம்பாம்" என்று தொடங்கும் குருபரம்பரையைத் தழுவி, இப்படி மண்மிசை வேர் ஊன்றித் தழைத் தோங்கி நிற்கிறது ஸ்ரீவைஷ்ணவம்!

தாமஸர்களாலும், ராஜசர்களாலும் இடை இடையே பல தடைகள் ஏற்பட்டு வைஷ்ணவம் தளர்ச்சியும் தாழ்ச்சியும் உற்றாலும், ஆழ்வார் கள், ஆசார்யர்களால் அவ்வப்போது புத்துயிர் பெற்றுப் பொலிந்து நிற்கிறது. அற அழிக்க வொண்ணுத பரம சாத்விக நெறியாகும் இது!

## பகவானின் ஐந்து நிலைகள் :

நீக்கமற எங்கும் நிறைந்த பகவான், "பரம்" வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை முத லான ஐந்து நிலைகளிலே அண்டமனைத்திலும் நின்று, இருந்து, கிடந்து, நடந்து அருள் பாலிக்கிறுன்.

பரம: திருமகள் (ஸ்ரீ) மண்மகள் (பூதேவி) ஆய்மகள் (நீளா) தேவியரோடு பரமபதத்தில், தன்னை விட்டுப் பிரியாத அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் போன்ற நித்யர், பூவுலகு வாழ்வை விட்டுத் தன்னை வந்தடைந்து புனிதரான முக்தர் கள் ஆகியோருக்கு எப்போதும் இன்முகம் காட்டி வாழ்வளிக்கும் பரம ஆனந்த நிலையமே பரத் துவம்.

வியூகம்: "தேவும் எப்பொருளும் படைக்க (தன் நாபிக்கமலமாகிய) பூவில் நான்முகனைப் படைத்த பரமன், மற்றைத் தேவர்களின் குறை களைக் கேட்டு அறிவதற்கும் அவர்களது குறை களைக் களைய, மண்மிசை யோனிகள் தோறும் தன்னைத் தாழவிட்டுப் பிறப்பதற்கும் பாங்காகப் பள்ளி கொண்டிருக்கும் நிலையே வியூகம். இது மூன்றுவகையில், பன்னிரு மூர்த்திகளை ஆதார மாகக் கொண்டநிலை. "கேசவன் முதல்தாமோ தரன் ஈருக உள்ள மூர்த்திகளின் பெயர்களை ஓதாதார் வைதிகர் அல்லர்; மற்றையோர் ஓது வதும் ஓர்வனவும் அவன் பேராயிரமே".

விபவம்: அறம் தலைநிறுத்த (தர்ம ஸம்ஸ் தாபனம்) நல்லவர்க் காத்து (ஸாது பரித்ராணம்) அல்லவர்த் தேய்க்கும் (துஷ்க்ருத் விநாசம்) பொருட்டாகப் பூவுலகில் இராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை அந்த ஆழி நாயகன் மேற்கொள்வது விபவமாகும். மேன்மைக் குணங் களோடு கூடிய அவனது நீர்மைக் குணங்கள் நன்கு ஒளிவிடுவது, இந்த அவதார காலங்களில் தான். நினைத்தபோது, நினைத்த இடத்து, நினைத்த வண்ணம் அவதரிக்கவல்ல ஸர்வ சுதந்திரன் அவன் ஒருவனே. ஆதலால் "எந் நின்ற யோனியு மாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!" என்று விளித்தார் நம்மாழ்வார்.

அந்தர்யாமி: கறந்த பாலுள் நெய்யே போல், எள்ளுக்குள் எண்ணெயாக இவ்வையகம் எங்கும் நிறைந்து கருதற்கு அரிய உயிருக்கும் உயிராய், உயிர்களின் ஸத்தை (உளதாதல்) ஸ்திதி (நிலைத்தல்) பிரங்ருத்தி (ஒரு செயலில் மூளுதல்) நிவ்ருத்தி (ஒன்றிலிருந்து விடுபடல்) அனைத்தும் தான் இட்ட வழக்காய் விளங்கும் பரமன், சில ரிடம் உவந்து கட்டைவிரல் அளவில் இதயத்தில் தனிச்சிறப்போடு எழுந்தருளியிருக்கிறுன். இவ் வகையில் அமைந்த இவ்விருப்பு அந்தர்யாமித்து வமாகும்.

அர்ச்சை: எல்லாவற்றுக்கும் மேலாக, நீர் மையின் எல்லை நிலத்தில் அடியவர்களின் கண் ணுக்கு இலக்காகி அவர்கள் இட்ட வழக்காய், அடியார் விரும்பும் வகையில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களிலும், மரம், மண், கல் வரைசித்திரம் அனைத்திலும் பிம்ப, ஓவிய வடி வில் "தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" என்று எழுந்தருளி மண்ணவர்க்கு அருள்பாலிக்கும் ஸ்ரீமந் நாராயணனின் அழகிய

வடிவமே அர்ச்சவாதாரமாகும். தன்னை அனுசரிக்குமவர்களையும் ஆதரிக்கும் நிலை இதுவானதால் இறைவனின் நீர்மைக்கு இதனின் மேம்பட்ட நிலை இல்லை.

## குணங்களின் ஒளி :

நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்று நான்கு கோலங்களில் மண்ணுலகில் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு ஜ்ஞானம் (அறிவு) சக்தி (ஆற்றல்) பலம் (வலிமை) ஐசுவரியம் (செல்வம்) வீரியம் (ஆண்மை) தேஜஸ் (ஒளி) இவை ஆறும் மேன்மைக் குணங்களாம்.

அறிவாற்றல்களோடு ஸ்வாமித்வம் (உடையவன் என்ற உறவு), வாத்ஸல்யம் (அன்பு), ஸௌசீல்யம் (தோழமை), ஸௌலப்யம் (எளிமை), மற்றும் கருணை (க்ருபை), க்ஷமை (பொறுமை) அழகு, இளமை, எளிமை போன்ற நீர்மைக் குணங்கள் நமக்காகவே ஏற்பட்டவை.

## அருளிச் செயல் :

இத்தகைய குணக்கடலில் அர்ச்சாவதார அனுபவத்தில் ஆழ்ந்தவர்கள்தாம் ஆழ்வார்கள். இறைவனின் காரணமற்ற கருணைக்கு இலக்கான ஆழ்வார்கள் "மாலுகந்த ஆசிரியர்கள்" ஆவர்.

மண்ணில் அறம் குன்றி மறம் மிகுந்து நிற்கும்போது அவதாரங்கள் செய்த இறைவன், சாதுக்களின் நீதிநெறிகள் நிலை குலையாமல் அதனை வலியுறுத்த, தன் அவதாரங்களும் பயன்படாத நிலையில், மானிட இனத்தாரைக் கொண்டே மக்களைத் திருத்தத் திருவுளம் கொண்டான்; ராஜஸ, தாமஸம், கலசிப் பொது வாகிக் குழம்பி நிற்கும் வேத நெறிகள். வர்ண ஆசிரம தர்மங்கள் இவைகளையும் கடந்து, இவற்றிலிருந்து வடிகட்டியதான ஸாத்விக நெறிகளை ஸ்ரீவைஷ்ணவ மரபுகளை வளர்க்க ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினன் இறைவன்.

"என் நெஞ்சத்துள் இருந்து, இங்கு இருந் தமிழ் நூல் இவை மொழிந்து" என்றும் "என் நெஞ்சும் உயிரும் உள்கலந்து தானே யான் என்பானாகித் தன்னைதானே துதித்து" எனவும் நம்மாழ்வார் மூலம் வேதம் தமிழ் செய்தான் இறைவன். நம்மாழ்வாரைத் தலைமை கொண்ட மற்றைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களும் "பேசிற்றே பேசி" ஒத்த கருத்தை வெளியிட்டன. "வேதம் தமிழ் செய்த மாறன் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தார், திருமங்கை மன்னன்.

ஆழ்வார்கள் பாசுரங்களிலே ஆத்ம பரமாத்ம தத்துவங்களோடு உயிர்க்குலத்திற்குக் காட்ட வேண்டிய, பேரன்பின் பல்வேறு வடிவங்களைக் காணலாம்; தாயின் இனிய பண்பு, தந்தை நமக்கு நாடும் நன்மை, அன்புக்கு அடிமையுற்றவர் தொண்டு, வணக்கம் மிக்க பக்தனின் வழிபாடு, தலைமகனிடம் தலைமகளின் உண்மையான உயிர்க் காதல், பொங்கும் பரிவினால் அனைவர்க்கும் வாழ்த்துரைகள் (மங்களாசாஸனம்) இவை அனைத்தும் அருளிச் செயலில் காணலாம்.



**வை**ஷ்ணவன் என்பவன் நெற்றியில் திருநாமத்தைச் சாற்றிக்கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட சமூகம் என்பது தவறான கண்ணோட்டமாகும். பண்டைய நூல்களில் கூறியிருப்பதைப் போல ஓர் உண்மை வைஷ்ணவன் இரக்கத்திற்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டானவன்; தன்னிடம் விரோதம் காட்டுபவர்களிடங்கூட வெறுப்பைக் காட்டாதவன்; தன்னுடைய சமுதாயம் வாழ வாழ்த்துக் கூறுபவன். வைஷ்ணவனைக் கங்கை நதியோடு ஒப்பிடலாம். எப்படிக் கங்கை நதியில் மூழ்கியவர்களுக்குப் பாவம் களைகிறதோ, அது போன்று வைஷ்ணவனுடன் தொடர்பு வைத்துக்கொள்பவருக்கு மனஅமைதி கிட்டும். வைஷ்ணவன் தன் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து நடந்து கொள்ளுவதில் விருப்பம் உடையவன். பீஷ்மரைப் போல் இனிமையாகப் பேசுபவன்.

ஓர் உண்மை வைஷ்ணவனை சிறந்த இசை வல்லுநனுக்கு ஒப்பிடுவார்கள். எப்படி இசைவல்லுநன் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறானோ அதைப் போல, அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துபவன் வைஷ்ணவன். பாண்டவர்கள் இந்த இயல்புடைய மக்களோடு ஒப்பிடப்படுகிறார்கள். இத்தகைய குணங்களையுடைய மனிதர்கள் சமூகத்தில் நிலவுவதனால் நாட்டில் ஒற்றுமையும் செழிப்பும் நிலவும்.

**T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்**

# ஆழ்வார்கள் காட்டிய அருள்நெறி

திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார்

அறிவுத்திறன் வாய்ந்த முனிவர்கள் ருஷிக்ள் எனப்படுகின்றனர். "ருஷி" என்னும் சொல்லிற்குத் தேசத்தாலும் காலத்தாலும் அப்பாற்பட்டவற்றையும் அறிபவன் என்பது பொருள். அத்தகைய அறிவு, தவம்புரிந்து உயர்ந்த மாமுனிவர்களுக்கு அவர்தம் தவத்திற்கு ஏற்ப அமையும். தம்தம் தவத்திற்கு ஏற்ப அறிவுத்திறன் வாய்ந்த அம் முனிவர் இறையுணர்வு சிறிதுமில்லாத நம் போன்றவரைவிட மிகச் சீரியராவர். தவத்தால் இறையருள் பெற்று உயர்ந்த முனிவரினும் ஆழ்வார்கள் மிகச் சீரியராவர். ஏனெனில் தவத்திற்கேற்ப வந்த இறையருள் அளவுபட்டதாதலின், அவ்வருளின் விளைவாய் அமைந்த அறிவும் அளவுபட்டதேயாம். ஆழ்வார்களது அறிவோ, தவத்தாலன்றி இயல்பாகப் பெருக்கெடுத்தோடும் அளவிலாத இறையருளின் விளைவாயமைதலின் அளவற்றதாம். இறைவன் மயர்வற மதிநலத்தைத் தானாகவே அருளினன் என்பர். நம்மிடையே பிறந்து நம்மோடு துன்பச் சூழலில் உழன்றவர்களானாலும், கரைகட்டாக் காவிரி போற் பெருகும் இறை அருளுக்கு இலக்காகி முழுதுணர் நீர்மையினரே ஆழ்வார்கள் என்றதாயிற்று.

## வேதமும் திவ்வியப்பிரபந்தமும்

அளவுபட்ட அறிவினரான முனிவர்கள் இயற்றிய நூல்களும், அவற்றுக்கு முதல் நூலாய் அமைந்த வேதமும், வடமொழியில் அமைந்தவையாதலின், உணர்தற்கு அரியனவாயின. ஆழ்வார்கள் அருளிய நூல்களோ தேனினும் இனிய தென்மொழியாலமைந்து உணர்தற்கு எளியனவாயின. ஆதலின் முனிவர் நூல்களிலும், ஆழ்வார்கள் நூல்கள் ஏற்றம் பெற்றன. வடமொழி வேதம் ஆழ்வார்கள் வாயிலாகத் தமிழில் வந்து அருமை நீங்கி, எளியனவாய் ஏற்றம் பெற்றன என்று சொல்லப்படுகின்றது. ஆசார்ய இருதய காரர், வேதத்தை மண்குடமென்றும், தமிழ் மறைகளைப் பொற்குடம் என்றும் கூறியிருப்பது, குறிக்கொள்ளத்தக்கது. சிவப்பிரகாச சுவாமிகளும் இவ்வாறே கூறியிருப்பதும் நினைத்தற்கு உரியது. ஆக, வேதமும், ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களும், மொழி வடிவில் வேறுபட்டனவேயன்றிக் கருத்தினில் ஒருமைப்பட்டனவே என்றதாயிற்று. அத்தகைய திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் காட்டிய அருள்நெறியை இனி ஆராய்வோம்.

## பிரதாநப் பிரதிதந்திரம்:

"அறிவுப்பொருள்கள் அறிவற்ற பொருள்கள் அனைத்தையும் தன் வடிவமாகக் கொண்ட ப்ரஹமம் ஒன்றே உண்மைப் பொருள்" என்பது, வேதத்திற் கண்ட முடிபு. உலகம் அனைத்தும் இறைவனது வடிவமென்பது "ஆத்மா சரீரம்" "ப்ருதவ சரீரம்" என்று வேதத்திற் போலத் திவ்வியப் பிரபந்தத்திலும் "உடன் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துள்ளன" என்று கூறப்பட்டுள்ளது. வைதிகர்களான ஆழ்வார்களும் போதாயநர் போன்ற முனிவர்களும் இறைவனை ஆன்மாவாகவும், உலகினை அவனது உடலாகவும் கொள்கின்றனர். பிறர் இக்கொள்கையை ஏற்கவில்லை. ஆகையால் இக்கொள்கை "ப்ரதாநப்பிரதி தந்திரம்" என்று போற்றப் படுகின்றது. தன் மதத்திற்கே உரிய முக்கியமான கொள்கை "ப்ரதாநப்ரதி தந்த்ரம்" எனப்படும். இக்கொள்கை முரண்பாடின்றி வேத வாக்கியங்களை ஒருங்கே இணைப்பது, இம்மைக்கும் மறுமைக்கு இன்பம் பயப்பது; உலகியலுக்கு ஒத்தது.

## பரந்நியாஸம்:

இறைவனுக்கு உலகம் உடலாகவே அதனைக் காப்பது அவனுக்கு இயல்பாயமைந்த கடமையாயிற்று. உயிர் உடலைக் காப்பது இயல்பேயன்றோ? தானும் இறைவனது ஒருடல் என்று கருதித்தன்னைக் காப்பது அவன் கடமையே என்று, தன்னை இறைவன்பால் ஒப்படைத்தல் வேண்டும்; இதுவே பரந்நியாஸம் எனப்படும். என்னை நானே காத்துக் கொள்வேன் என்னும் செருக்கு நீங்கி, இறைவனது உடலான இவ்வான்மா என்ற துணிவுடன் தன்னைக் காப்பதற்கு



யாதொரு முயற்சியும் மேற்கொள்ளாது ஓய்ந்து நிற்றலே, பரந்யாஸம் என்று விளக்கம் கண்டு கொள்வது. இந்த பரந்நியாஸமே உய்வதற்குத் தீதில்லாத நன்னெறியாகும். "நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறைசேர்மின் உயிர்க்கு அதனேர் நிறையில்லே" என்று நம்மாழ்வர், யான் எனது என்னும் அகங்கார மகாரங்களே அடியோடு ஒழித்து, இறைவனே அண்டுவதே சீரியவழி என்கிருர். இறைவன் நம்மைக் காப்பதற்குத் தடையாயிருப்பன, நான் என்னேக் காத்துக் கொள்வேன் என்னும் அகங்காரமும், அதனல் வரும் மமகாரமுமே. அவை நீங்கினதும் உய்வு பெறுதல் உறுதி. இதனேயே "யான் எனதென்னும் செருக்கறுப்பான், வானேர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்று திருவள்ளுவரும் கூறுகின்ருர்.

## நன்மை தீமைகள் :

இனி, இறைவனது உடலாகத் தன்னேப் பார்ப்பவன், உயிருக்கு உடல் ஒத்து நடந்து தீங்கிழைக்காமல் இருப்பதுபோல, உலகுக்கெல்லாம் ஒருயிரான எம்பெருமானுக்கு ஒத்துத் தீங்கிழைக்காமலிருத்தல், இன்றியமையாததாகி விடுகின்றது. உயிரான இறைவனுக்கு ஒத்து நல்லமுறையில் நடத்தல் "ஆநுகூல்ய சங்கற்பம்" என்றும், தீங்கிழைக்காமலிருத்தல் "ப்ராதிகூல்யவர்ஜநம்" என்றும் சொல்லப்படும். அநுகூலமாயிருப்பதற்கு மனத்தில் சங்கற்பம் செய்து கொண்டாலே போதும். பிரதி கூலமாயிருப்பதைத் தவிர்ப்பதற்கு மனத்தில் சங்கற்பம் செய்து கொண்டால் மாத்திரம் போதாது. தவிர்த்தொழித்தேயாக வேண்டும். இக்கருத்து "சங்கற்பம்" "வர்ஜநம்" (தவிர்த்தல்) என்னும் சொல்லமைப்பிலே தோற்றுதல் காண்க. நன்மை இன்று விளேயாவிடினும், அதில் நாட்டமிருந்தால், நாளே விளேதல்கூடும். தீமை இன்றே தொலேந்தாக வேண்டுவதொன்றன்ருே?

அநுகூல்யஸங்கற்பமாவது: என்னேப் போல ஆன்மவர்க்கமனேத்தும் இறைவனுடைய உடலாயிருத்தலின், தனக்குப்போலப் பிற உயிர்களுக்கும் துன்பம் இழைக்காது இறைவன் திறத்திற்போல நல்லவனுய் நடந்து மகிழ்விக்கக் கருதலாகும். பிராதிகூல்யவர்ஜநமாவது: இங்ஙனமே இறைவன் திறத்திற்போல எல்லா உயிர்களிடத்திலும் தீங்கு இழைப்பதைத் தவிர்த்திருப்பதாகும். எவ்வுயிருக்குத் திங்கிழைப்பனும் இது இறைவனது வடிவமாதலின், இறைவனுக்கு இழைக்கும் அபசாரமாகி விடுகிறது என்பதை நாம் மறந்து விடலாகாது.

## இரக்கம் :

பிறர்படும் துன்பத்தைக் கண்டு இரங்குகை வைஷ்ணவதர்மம். "மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்றபடி, வழிபடும் கடவுள்போல அவனே அண்டினேரும் இரக்கப்படுபவர்களாயிருத்தல் வேண்டும். "ஈசுவரன் உகக்கைக்கு வேண்டுவது, பிறர் துயரங் கண்டு ஐயோ! என்று இரங்குகை" என்பர் நம்பிள்ளே. பிறர் துன்புறுவதைக் கண்டு நண்ணுதாராய் முறுவலிப்பது அதாவது மகிழ்வது, இறைவனது சீற்றத்தைக் கிளப்பிவிடும். அங்கே அவன் அருள் மழை பொழியான். சரமழையே பொழிவான். இதனே நம்மாழ்வார் இங்ஙனம் அருளிச் செய்கின்ருர்.

ஆவா என்ரு துலகத்தை
அலேக்கும் அசுரர் வாணுள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த
சிலேயா திருமா மகள்கேள்வா!
தேவா! சுரர்கள் முனிக்கணங்கள்
விரும்புந் திருவேங் கடத்தானே!
பூவார் கழல்கள் அருவினேயேன்
பொருந்து மாறு உணராயே.

இரக்கமின்றி அசுரர்கள் உலகத்தை அலேக்கிருர்கள், அவர்களே ஒழித்து உலகத்தை நீ காக்கின்ருய்! திருவேங்கடத்தானே! அதுபோல நீ என்னே அலேக்கும் அருவினேகளேயும் ஒழித்து, உன் திருவடிகளில் என்னேப் பொருந்துமாறு செய்தருளவேணும் என்பது இந்தப் பாசுரத்தின் கருத்து.

இயல்பாகவே அல்லலுற்றுள்ள உலகத்தைக் கண்டு இரக்கப்படவேண்டியிருக்க, மேலும் அலேக்கிருர்களே அசுரர்கள் என்கிற பேரிரக்கம் தோன்றுகிறது. "ஆவா என்ருது" என்ற சொற்ருெடரிலே. இரங்காமை அவர்களது இயல்பு என்பது தோன்ற "அசுரர்" என்கிருர். உலகின்மீதுள்ள இரக்கத்தால் அவ்வசுரரை வென்று புகர்படைத்தமை தோற்றத் "தேவா" என்று விளித்தார். தேவன் – புகாபடைத்தவன், தேவப்பிறப்பு, அசுரப்பிறப்பு என்று இரு பிறவிகள் கீதையிற் கூறப்பட்டுள்ளன. இறைவனே விரும்பும் நற்பண்புடையோர் தேவர்கள். உலகத்தை அலேத்து இறைவன் சீற்றத்துக்கு இலக்காவோர் அசுரர்கள் என்று, அப்பிறவிப் பிரிவுகள், இப்பாசுரத்திலும் உய்த்துணர வைக்கப்பட்டிருப்பதைக் காண்க.

ஆக, இரக்கமின்றி, அசுரர் உலகத்தை அலேப்பதால், அவர்கள்மீது இறைவனுக்குச் சீற்றம் மிக்கெழுந்து வாளி (அம்பு) மழை பொழிந்ததாக நம்மாழ்வார் குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

## பகைவர்க்கு இரங்கல் :

பகைவரிடத்தும் இரக்கம் காட்டப்பட வேண்டும். பகைவரும் தீயஎண்ணம் நீங்கித் திருந்தலாகாதாஎன்று நினேவதே, நேரிய நெறியாகும். பொல்லா அரக்கனுகிய இராவணனும் திருந்தி தன்னேச் சார்ந்து உய்வுறலாகாதா என்று விரும்புகிருன் இறைவன். விபீடணன், வந்தது இராவணனே வந்ததாயிருக்கக் கூடாதா என்று அவன் ஆசைப்படுகிருன். கொடுங்கொலேக்குள்ளாகாது, இராமபிரானேடு நட்புக்கொண்டு உய்வு பெறு என்கிருள் இராவணனே நோக்கிச் சீதாப்பிராட்டி. தன்மீது தீராப் பகைகொண்ட

தன் தந்தையின் பிழைகளைப் பொறுத்தருளி, அவனை உய்விக்குமாறு இறைவனிடம் வேண்டுகிறான் பிரகலாதன், தன்னை வெளியேற்றிய இராவணனை நோக்கி, வீடுபற்றி எரியும்போது பார்த்துக் கொண்டிருக்க மூடியாததுபோல், நீ அழிவுறுவதைப்பார்த்து என்னால் சகிக்கமுடியவில்லையே என்கிறான் விபீடணன். பகை நேர்ந்தாலும் இதம் சொல்லுகை தவிரேன் என்று உபதேசிக்கிறார் நம்மாழ்வார். "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்னும் அவரது குரல் இன்னும் நம் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இனி அசுரர்கள் இறைவனால் கொல்லப் படுவது தகுமா? அவர்கள் திறத்தும் இரக்கம் காட்ட வேண்டாவோ எனிற் கூறுவோம். சீர் திருந்தாது எதிர்த்த அசுரரைக் கொல்வதும் இறைவனது இரக்கத்தின் செயலே என்று நாம் உணர்தல் வேண்டும். திருந்தாத அவ்வசுரர் மேலுமிருந்தால், மேன்மேலும் தீமைகள் புரிந்து கெட்டழிவார் அன்றோ? இங்ஙன் அழியாது உடலை அழித்து அசுரரைக் காக்கின்றனன் இறைவன் என்க. கெடலாகாது என்னும் நல்ல கருத்துடன் செய்யப்படுதலின், கொலையும் நல்ல செயலாகிவிடுகிறதென்றுணர்க. வைத்தியன் செய்யும் அறுவை மருத்துவம் போன்றது இதுவும் என்க.

## தான்வருந்தியும் பிறருக்கு உதவுதல்:

இறைவன் தன்னிலைமை மாறிப் பன்றியாய் இவ்வுலகை இடந்தெடுத்து உதவினான். அதுபோல, அவனை அண்டினோரும் தம் நிலைமை மாறியாயினும், பிறர்க்கு உதவ முற்படுவர். இது நல்லோரது இயல்பாகும். இதனை நம்மாழ்வாரிடத்திலே நாம் காணலாம். உலகியலுக்கு மாறுபட்டு மாறன் எனும் பேர்பூண்ட நம்மாழ்வார், நெடியானே என்று கிடக்கும் நெஞ்சமும், குறளாகிய வஞ்சனே என்னும் வாசகமும், ஆயர் தாயவனே என்று தடவும் கைகளும் உடையவராய், கரணங்கள் அனைத்தும் கண்ணன்பால் ஈடுபட்டு அந்நிலையில் நிலை நிற்பவர். "உயிர்மாய்தல் கண்டாற்றேன்" என்று அவர் அந்நிலைமை மாறி, உலகிற்கண் வைத்து உபதேசத்தால் திருத்தி உதவிட முற்படுவதைப் பார்க்கிறோம். "வீவிலின்பம்மிக எல்லை நிகழ்ந்தனன்மேவியே" என்றபடி, இறைவனை மேவிப் பேரின்பமுறும் தமது நிலைமை மாறி, உபதேசத்தால் உலகை நல்வழிப்படுத்த முயலும் நம்மாழ்வாருடைய இரக்கத்தை என்னென்பது!

மாறன் அடிபணிந்துய்ந்த இராமாநுசரும், திருக்கோட்டியூர் நம்பியிடம் கேட்டறிந்த ரகசிய அர்த்தத்தை, அவரது ஆணையை மீறித் தமக்கு நரகம் நேருவதையும் பொருட்படுத்தாமல் மிக்க கிருபையால் பிறர்க்கு உபதேசித்து உய்வித்தருளிய வரலாறும் இங்கு அறியத்தக்கது. நரகத்தில் வீழ்த்தலும் பிறர் துன்பம் துடைத்த மகிழ்ச்சியிற் பெருவாழ்வாகத் தோற்றுகிறது, அந்த நல்லாசிரியர்க்கு! பிறர் படவேண்டிய நரக வேதனையை அவர்களுக்காகத் தாம் ஏற்பது பேரின்பமாகிவிடுகிறது.

பாகவதபுராணத்தில்வரும் ரந்திதேவனை, இந்த இடத்தில் நாம் நினைக்காமல் இருக்க முடியாது. அவர் 48 நாட்கள் குடும்பத்தோடு பட்டினி கிடந்தார். தற்செயலாகக் கிடைத்த உணவை உட்கொள்ளும் தறுவாயில், வந்த விருந்தினருக்கு அவ்வுணவளித்து மீந்ததை நாய்களோடு வந்து இரந்தவனுக்கு மகிழ்ச்சியோடு வழங்கிவிட்டான் அவன். அந்த ரந்திதேவனுக்கு நாய்களும், அவற்றோடு வந்தவனும் இறைவன் வடிவமாகத் தோன்றியதால் நாய்களையும், அவற்றோடு வந்தவனையும் அவன் வணங்கினானாம். பிறகு ஒருவர் மட்டும் குடிக்குமளவில் நீர் எஞ்சியதாம். அதைக் குடிக்கும் போது புலையனொருவன் வந்து நீர் கேட்க, விடாயுடன் வருந்தத்தக்க நிலைமையினை நோக்கி இரங்கிக் கூறுகிறான் ரந்திதேவன்.

ஓர் ஏழைக்காக உயிரை விடுவதால், இன்னல்களெல்லாம் தொலைந்து அஷ்ட சித்திகள் வாய்ந்த பிரமன் முதலியோர் பதவியும், ஏன் முக்தியுமே எனக்கு வேண்டுவதில்லை. உலகிலுள்ளார் அனைவருடையவும் நெஞ்சிலுள்ள துன்பத்தை நானே ஏற்று, அவர்களைத் துன்ப மற்றவர்களாக்கிப் பார்ப்பதே எனக்கு வேண்டுவது.

## சமூகத் தொண்டு, பேரின்பம்:

இறைவன் எல்லா உயிரினங்களுக்கும் இதத்தையே நாடுபவன். ஆதல்பற்றி அவனை "அனைத்துயிர்க்கும் நலம்புரிபவன்" என்று போற்றுகிறோம். அவனை அண்டின தொண்டர்களும், அவனைப்போல எல்லா உயிரினங்களுக்கும் இதத்தையே நாடுவதுதான் முறை. ஒவ்வொரு பொருளும் இறைவன் வடிவமாகத் தோன்றுவதால், ஏற்றத்தாழ்வுகள் தொண்டர்களுக்குத் தோன்றுவதில்லை. எந்த ஒரு பொருளுக்கு நன்மை புரியினும், அது இறைவனுக்குப் புரியும் பணியாகிவிடுகிறது. விண்ணகத்திற் புரியும் திருப்பணி இறைவனுக்கு வேண்டப்படுவது ஒன்றன்று. முக்தி யடைந்தவன் அடியானவதற்காக, அதனை அவன் அங்கே ஏற்கிறான். உயிரினங்கள் வடிவில் இங்குள்ள நிலையிலோ, திருப்பணிகள் இறைவனுக்கு வேண்டப்படுவன ஆகின்றன. ஆகவே முக்திநிலையிற் புரியும் திருப்பணியினும் சீரியது, உயிரினங்களுக்கு இங்கே உதவுவது. இதனையே தனக்குப் புரியும் பெருந் திருப்பணியாகக் கொண்டு இறைவன் பேருவகை எய்துகிறான். பேரருள் பெருகுகிறது. தன்னைப்போல் அடியார்களையும் பேரின்புறச் செய்கிறான். "தம்மையே ஒக்க அருள் செய்வர்" என்றார் திருமங்கைமன்னன். இங்கு உயிரினங்களுக்கு உதவிபுரிகின்றவர்களைத் தன்னைப் போல் இறைவன் உயர்த்திவிடுகிறான் என்கிற தத்துவத்தைக் கவிதை நயத்தோடு கலந்து உணர்த்துகிறார் நம்மாழ்வார்.

"மேகங்களோ உரையீர்
திருமால் திருமேனியொக்கும்
யோகங்கள்உங் களுக்கெவ்வாறு
பெற்றீர் உயிரளிப்பான்

மாகங்க ளெல்லாம் திரிந்து
நன்னீர்கள் சுமந்துங்கள்
ஆகங்கள் நோவ வருத்தும்
தவமாமருள் பெற்றதே

—திருவிருத்தம்

இது "தலைவி போலிகண்டுரைத்தல்" என்னும் அகத்துறையில் அமைந்த பாசுரம். "கரும்பெரும் மேகங்கள் காணில் கண்ணன் என்றேறப் பறக்கும்" என்றபடி கண்ணன் என்னும் கருந் தெய்வத்துக்குக் கரும்பெரும் மேகங்கள் போலி யன்றோ? மேகங்கள் கண்ணன் போன்று கறுத் திருப்பது, உயிர்களைக் காப்பதற்காக நல்ல நீரைச் சுமந்துகொண்டு, ஆங்காங்கே திரிந்து வருந்தியதால் உகந்த இறைவன் அருளின் பயன் போலுமென்று தற்குறிப்பேற்றத்தாற் பேசுகிறார். உயிர்களுக்கு உதவுவதற்காக வருந்துவது பெருந் தவமாக இறைவனுக்குத் தோன்றுவதும், அதனால் உவந்து இறைவன் அருள்புரிந்து அன்னாரைத் தன்னைப் போலாக்குவதும் இப்பாசுரத்தில் தோன்றுவது காண்க.

இங்கே "மால் திருமேனி" என்னாது "திருமால் திருமேனி" என்று கூறியது கூர்ந்து நோக்கத் தக்கது. பிரிவுத் துன்பத்தால் வெளுத்த என் மேனி போன்றதன்று மால்மேனி. திருமகளோடு என்றும் கூடியுள்ளமைபற்றி நிறம் மாறாமல் இருப்பது திருமால் திருமேனி என்பது கருத்து. என்னைப் போற் பிரிவாற்றாமையில்லாதவன் என்று இறைவன்மீது குறை கூறினபடி. உயிர ளிப்பான் எந்நின்றயோநியுமாய்ப் பிறப்பவன் இறைவன்; உயிரளிப்பான் மாகங்கள் (பெரிய ஆகாசங்கள்) எல்லாம் திரிவன மேகங்கள் என்று செயலொற்றுமை, அளிக்கும் திருமாலுக்கும், அளிக்கும் மேகங்களுக்கும் காணத்தக்கது.

ஆன்ம வர்க்கங்களை உய்விப்பதற்காக, இறை வனுடைய சீலம் முதலிய குணங்களைச் சுமந்து உடல் வருத்தம் பாராது எங்கும் திரிந்து உயிர் களை அளிப்பவர்கள், இறையருளால் முக்தி அடைந்தவர் போன்று இறைவனுக்குச் சம மானவராய் இவ்வுலகிலேயே இனிது வாழ்கிறார் கள் என்பது இப்பாசுரத்தின் உள்ளுறை பொரு ளாம். "தீதில் நன்னெறிகாட்டி எங்கும் திரிந்து அரங்கனெம்மானுக்கே காதல் செய்யும் தொண்டர்" என்றபடி நன்னெறிகாட்டி உய் விப்பதற்காகவே, ஓரிடத்தில் தங்காது உல கெங்கும் திரியும் மெய்யடியார்களை மேகங்களாகக் கூறுகிறார் நம்மாழ்வார்.

இங்ஙனம் உலகெங்கும் இறைவன் பேரோதித் திரிந்து தூய்மைப்படுத்தத் தொண்டர்களை உரு வாக்குகிறார் பூதத்தாழ்வார்.

பண்டிப் பெரும்பதியை யாக்கிப் பழிபாவம்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறாதே—
எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப்
பேதைகாள்!
தீர்த்தகர ராமின் திரிந்து.

பழிபாவம் கொண்டவர்களைப் பேசிப் பொழு தைப் பாழ்படுத்திக் கொண்டிராமல் உலகளந் தவன் திருநாமங்களைச் சங்கீர்த்தனம் செய்து கொண்டு எங்கும் திரிந்து உலகத்தைத் தூய்மைப் படுத்துங்களென்கிறார் பூதத்தாழ்வார்.

உலகளந்தான் சம்பந்தத்தால் தூய்மை பெறாத உலகம், பேரோதித்திரிவார் பாதம் பட்டுத் தூய்மை பெறுவதாகப் பூதத்தாழ்வார் கருதுகிறார். அவனிலும் அவனடியார் சீரிய ரன்றோ? "நாதனை நரசிங்கனை நவின்றேத்து வார்கள் உழக்கிய, பாத தூளிபடுவதாலிவ் வுலகம் பாக்கியம் பெற்றதே" என்று பெரி யாழ்வார் அருளிச் செய்திருப்பது அறியத்தக்கது.

## பொதுவுடைமை:

பூதத்தாழ்வார் "பண்டிப் பெரும் பதியை ஆக்கிப் பழிபாவம் கொண்டிங்கு வாழ்வார்" என்றது குறிக்கொள்ளத்தக்கது. பண்டி என்பது வயிறு. அதனைப் பெரிய நகரம் போற் பெரி தாக்கி, அதாவது எவ்வளவு சரக்கு வரினும் பெரிய நகரத்துக்குப் போதாதது போல, வந்த தெல்லாம் தன் வயிற்றிற்கே போதாது என்று கருதிச் சொத்துக்களைச் சேர்த்துக் குவிப்பது, பழிபாவத்துக்குக் காரணமாகும் என்கிறார் அவர். இதனால் சொத்துக்களை ஒரே இடத்திற் குவித் துக் கொள்வது, தீய செயலென்பது போதரும். சொத்துக்கள் ஒரே இடத்திற் குவிவதால், பிறர் பலர் பட்டினிக் கிடக்க நேருகிறது. பட்டினியால்

உழல்பவர் வடிவில் உள்ள இறைவனுக்குப், பொருளை ஒரே இடத்திற் குவிப்பவர்கள் தீங்கி ழைத்தவர்களாகிறார்கள். அதுவே பாபம் எனப் படுகிறது. பழி பாவத்துக்கு, அஞ்சி, நேர்மை யோடு பொருள் ஈட்டி மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளித்து அநுபவப்பதே, வாழ்க்கைக்கு வளம்தரும் என்கிறார் குறளாசிரியர். "பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றுமில்" என்பது குறள். எவர் எவருக் குப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதும் அக்குற ளாசிரியராலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்று, ஐம்புலத்தா றோம்பல் தலை" என்று பிதிருக்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் இவர்களோடு, தனக்குமாக ஐந்து பிரிவுகளாகப் பகுத்து உண்ண வேண்டும் என்கிறார்.

பாகவதத்தில், "தன் வயிற்றுக்கு வேண்டு மளவுக்குமேல், சேர்ப்பவன் திருடன்; அவன் தண்டனைக்கு உரியவன்" என்று சொல்லப்பட் டுள்ளது. திருமங்கை மன்னர் தீயவர்களிட மிருந்து சொத்துக்களைப் பறித்து நல்லவர்கட்குப் பகிர்ந்தளித்து இறைவனது பேரருளுக்கு இலக் கானது இங்கே நினைக்கத்தகும். ஆக, எல்லோ ருக்குமாக இறைவன் படைத்தபொது உடைமை யைத் தனக்கே உடைமையாக ஆக்குவது பெரும் பாவம் என்றதாயிற்று.

## முடிவுரை:

அளவற்ற அறிவுவாய்ந்த ஆழ்வார்கள், தமிழ் வேதமாகிய திவ்வியப் பிரபந்தத்தில் காட்டியபடி,

உலகனைத்தும் இறைவனது உடல் எனும் கொள்கையைப் பற்றி, உடலான என்னைக் காப்பது, உன் கடமையென்று பொறுப்பை இறைவன்பால் ஒப்படைத்து, இறைவன் உடலாம் உயிரனைத்துக்கும் நன்மை புரிந்து, தீமை விலக்கி, பிறர்படும் துன்பத்துக்கு இரங்கி, பகைவர்மாட்டும் இரக்கம் காட்டி, வருந்தியும் பிறருக்கு உதவிச் சமூகத் தொண்டையே பேரின்பமாகக் கொண்டு, பொதுவுடைமையைத் தன்னுடைமையாக்கிப் பழிபாவத்துக்கு ஆளாகாது, அருள் நெறியில் நடந்து இறைவன் பேரருளுக்கு இலக்காகி இன்புறுவோமாக.



# திருவடிகளே சரணம்!

இராவணன் சீதாதேவியை அந்தரத்தில் தூக்கிச் செல்லும்போது, தன்னைத் தேடி வரும் இராமலக்ஷ்மணர்களுக்கு தான் போன திசை தெரியட்டும் என்பதற்காகத் தனது அணிகலன்களையெல்லாம் கழற்றி ஒரு துணியில் மூட்டையாகக் கட்டிப் போட்டு விட்டுச் சென்றாராம் சீதாபிராட்டியார். அவ்வாறே தேடிப் புறப்பட்ட ஸ்ரீராமபிரானும், லக்ஷ்மணப் பெருமாளும் வழியில் கிடைத்த மூட்டையை எடுத்துப் பிரித்துப் பார்க்க, அதிலிருந்த ஆபரணங்களையெல்லாம் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஒவ்வொன்றாக எடுத்து தம்பி லக்ஷ்மணனிடம் காட்டி, இது சீதையினுடையதுதானா என்று அடையாளம் கேட்டாராம்.



ஒவ்வொரு நகையாகப் பார்த்துக்கொண்டே வந்த லக்ஷ்மணன் அவைகள் தனது அண்ணியார் சீதாதேவியாருடையதுதானா என்பது தனக்குத் தெரியாது தெரியாது என்று கூறிக்கொண்டே வந்தாராம்.

ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி வந்த ஸ்ரீராமபிரான் கடைசியாகக் கால் சிலம்பு ஒன்றைக் காட்டிக் கேட்டபோது இது எம்பெருமாட்டி சீதாதேவியாருடையதுதான் என்று அடையாளம் கூறினாராம். அதுவரை அன்னையின் திருவடிகளே சரணம் என்று தரிசித்து வந்த லக்ஷ்மணப் பெருமாள்.

ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள்



# இராமாநுசரின் இனிய அருளுரைகள்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

சான்றோர்களின் சொற்கள் நமக்கு வாழ்க்கையில் பெரிதும் நலம் விளைவிக்கும் சிறப்புடையன. வழுக்குகின்ற நிலத்தில் நடப்பதற்கு ஊன்றுகோல் பயன்படுவதுபோல, வாழ்க்கையில் துன்பங்களும் தொல்லைகளும் தோன்றும்போது சான்றோர்களின் சொற்கள் நமக்கு மிகவும் துணை புரிகின்றன. "இழுக்கல் உடையுழி யூற்றுக்கோல் அற்றே, ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்" என்பது திருக்குறள்.

சான்றோர்களின் சொற்கள் அனைத்துமே, பொது வகையில் நமக்கு நன்மை விளைவிக்கும் தன்மையுடையனவாகும் எனினும், அவற்றுள்ளும் சான்றோர்கள் தமது இறுதிக் காலத்திற் கூறியருளும் சொற்கள், சிறப்புவகையில் நமக்கு மிகவும் பயன் விளைவிக்கும் இயல்புடையனவாம். இறுதிக் காலத்திற் கூறப்படும் சொற்கள் அனுபவத்தின் முடிவாகவும் பிழிவாகவும் தோன்றுவன; தன்னலம் அற்ற நிலையிற் பிறர் நலமே விழைந்து வெளிவரும் புனிதம் மிக்கன; சொல்ல வேண்டுவன பலவற்றையும் உள்ளடக்கிச் சுருக்கமாகப் புலப்படுத்துவன. இனியொருகாற் கூறவும் கேட்கவும் படாத நிலையுடைமையால், மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தன.

உலகப் புகழ்பெற்ற புதினநூல் ஆசிரியர்களுள் ஒருவரும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேரறிஞரும் ஆகிய சர். வால்ட்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்னும் பேரறிஞர், தாம் இறக்கும் தருவாயில், லாக்கார்ட் (Lockart) என்பவரை நோக்கி, இறுதியாகக் கூறிய அறிவுரை; "எனக்கு இனியோய்! ஒரு நல்ல மனிதனை இரு" ("Be a good man, my dear") என்பதாகும். இவ்வறிவுரை எத்துணை அருமை மிக்கதொன்றாகத் திகழ்கின்றது! சுருக்கமாக இருப்பினும் இஃது எவ்வளவு பொருட்பெருக்கம் வாய்ந்து காணப்படுகின்றது!

அங்ஙனமே, மெய்ப்பொருள் நாயனர் நமது அரசியல் ஆயத்தார்க்கும் அழிவுறுங் காதலார்க்கும், தம் உயிர் பிரியும்பொழுதில் இறுதியாகக் கூறிய அறிவுரை "பரவ்ய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" என்பதாகும். தமது வாழ்நாள் முழுவதும் தாம் கடைப்பிடித்து ஒழுகி வந்த ஒரு குறிக்கோளினை இவ்வாற்றல் அவர் புலப்படுத்தியிருத்தல் காணலாம்.

இங்ஙனமே, தாம் சிலுவையில் அறையப்பட்ட போது இயேசுபெருமான் கூறிய இறுதியுரை, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்பது. இவ்வாறு சொல்லி அவர் தம் உயிரை நீத்தார். இந்தச் சொல்லானது எத்தனையோ பல நூற்றாண்டுகளாக, உலகெங்கும் வாழ்கின்ற பக்தியுள்ளவர்களின் மரணவேளை ஆறுதற் சொல்லாகப் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறே புத்தர்பெருமானும், நபிகள் நாயகமும்கூடத் தமது இறுதிக் காலங்களில், இத்தகைய அருளுரைகளைத் தம்மைப் போற்றிப் பின்பற்றிச் சூழ்ந்து நின்ற அன்பர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளியுள்ளனர்.

இராமாநுசர்:

அவைகளெல்லாம் எத்தகைய சிறப்பும் பெருமையும் உடையனவோ, அத்தகைய முறையில் ஸ்ரீ வைஷ்ணவப் பெரும் சான்றோராகிய இராமாநுசர், தாம் பரமபதத்துக்கு எழுந்தருளும்போது, அனைத்துயிர்களும் இறையருளைப் பெற்று உய்தி அடையும் பொருட்டு, தம்முடைய திருவடித் தொழும்பர்களாகிய முதலிகளுக்கு அறிவுறுத்திப்போந்த அருள்மொழிகளும் இணையற்ற பெருஞ் சிறப்பு உடையனவாகும்.

"ஒரு வைஷ்ணவனுக்குத் துவயத்தை ஒழிய மந்திரம் இல்லை; மிதுனம் ஒழிய வஸ்து இல்லை; கைங்கரியம் ஒழியப் புருஷார்த்தம் இல்லை; ஆசாரிய அபிமானம் ஒழிய மோட்ச உபாயம் இல்லை; பாகவத அபசாரம் ஒழிய மோட்ச விரோதம் இல்லை" எனத் தம் திருவடியைச் சார்ந்த முதலிகளுக்கு, இராமாநுசர் தமது இறுதிக் காலத்தில் அருளிச் செய்தார் என்று "குரு பரம்பரை பிரபாவம்" என்னும் நூல் கூறுகின்றது.

"பிரபந்த அம்ருதம்" என்னும் பிரிதொரு நூல், இராமாநுசர் தமது திருவடி முதலிகளுக்குப் பின்வரும் 82 இனிய அருண்மொழிகளை உபதேசித்தருளினர் எனச் சுவைமிகத் தொகுத்துக் கூறுகின்றது. இராமாநுசர் தம் இறுதிக் காலத்தில் அருளிச் செய்த அவ்இனிய அறிவுரைகள் மக்கள் உயிர்க்கு உறுதி பயக்கும் நலமுடையனவாகச் சிறந்து திகழ்கின்றன. இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பயக்கத்தக்க வகையில் விளங்கி, மக்கள் வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் அவ் அறிவுரைகள் பின்வருவனவாகும்:

(1) இறைவன் தொண்டினையும், அடியவர்களின் தொண்டினையும், ஆசிரியரின் தொண்டினையும், சம நிலையிற் கருதி மதித்தல் வேண்டும். (2) முன்னோர்கள் அருளிச் செய்த நூல்களில் நம்பிக்கை வைக்க வேண்டும். (3) ஒருபோதும் புலன்களுக்கு அடிமைப்பட்டு இருத்தல் ஆகாது. (4) சாதாரண நூல்களில் ஒருபோதும் பற்றுக்

கொள்ளுதல் ஆகாது. (5) இறைவனைப் பற்றிக் கூறும் நூல்களில் நிலையான அன்பும், உறுதியும் கொள்ளுதல் வேண்டும். (6) தனது ஆசிரியர்களின் அருளால் ஞானோபதேசம் பெற்றபின்னர், ஒரு பாகவதன் ஐம்புலன்களின் வழிச் செல்லுதல் கூடாது. (7) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தையும் அளவாக நுகர்தல் வேண்டும். (2) மலர், சந்தனம், வெற்றிலை முதலிய நுகர்ச்சிப் பொருள்களில் ஆசையற்றிருத்தல் வேண்டும். (9) இறைவனின் திருப்பெயர்களிற் போல அடியார்களின் திருப்பெயர்களிலும் மதிப்பும் விருப்பமும் கொள்ளுதல் வேண்டும். (10) சிறந்த அடியார்களாகிய நல்லோர் இணக்கமே வீடுபேற்றுக்கு வாயில் என்று தெளிந்து, அவர்களின் திருவுள்ளம் மகிழும்படி நடந்துகொள்ளுதல் வேண்டும்.

(11) ஒருவன் எவ்வளவுதான் அறிவுடையவனாயினும், இறைவனின் தொண்டினையும், ஆசிரியனின் தொண்டினையும் இகழ்ந்து, விருப்பு வெறுப்பு முதலியவைகளால் ஐம்புல நுகர்ச்சிகளில் ஈடுபடுவானாயின், அவன் அழிவு எய்துதல் திண்ணம். (12) வெறும் புற ஒழுக்கங்களும் ஆசாரங்களும் மட்டுமே பகவானை அடைவிக்கும் என்று நினைத்தல் ஆகாது. (13) ஸ்ரீ வைஷ்ணவ ஒழுக்கங்களையே, வாழ்க்கையில் சிறந்த பயனாக மதித்தல் வேண்டும். (14) அடியார்களை ஒரு போதும் ஒருமையில் அழைத்தல் ஆகாது. (15) அடியார்களைக் காணும்போது, நாமே முதலில் கைகூப்ப வேண்டும். (16) இறைவன்—ஆசிரியர்—அடியார் ஆகியவரின் முன்னிலையில் கால்களை நீட்டலாகாது. (17) இறைவன்—ஆசிரியன்—அடியார் ஆகியோரின் திருமாளிகைகள் உள்ள திசையில் கால்களை நீட்டிக்கொண்டு படுத்தல் கூடாது. (18) துயில் விழித்து எழும்போது ஆசிரியர்களின் திருமரபை நினைத்துத் தியானம் செய்து கொண்டு எழுந்திருக்க வேண்டும். (19) இறைவன் சந்நிதியில் அடியார்கள் பலர் திரளாக இருக்கும்பொழுது, துவயம் என்னும் மந்திரத்தை நினைந்து கொண்டே, வீழ்ந்து வணங்குதல் வேண்டும். (20) ஸ்ரீ வைஷ்ணவர்கள், இறைவன்—ஆசிரியர்—அடியார் ஆகியோரின் குணநலங்களைப் புகழ்ந்து ஈடுபட்டிருக்கும்போது, அவர்களைத் தானும் இயன்ற அளவு வழிபடுதலைவிட்டு, இடை நடுவில் எழுந்து போவது மிகவும் பெரிய குற்றமாகும்.

(21) ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளினால், எதிரே சென்று வரவேற்று உபசரிக்கவும், அவர்கள் திரும்பிப் புறப்படுங்கால் பின்சென்று அவர்களின் திருவுருவம் கட்புலனுக்கு மறையும்வரையில் அஞ்சலியும் கையுமாய்க் கண்களிக்க நோக்கிக் கொண்டிருந்து பிறகு திரும்பவும், வேண்டும். (22) ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமைப்பட்டு ஆன்மாவை நற்கதி அடையச் செய்து கொள்ளாமல், வயிறு வளர்த்தற்காகச் சாதாரண மக்களின் பின்னே அவர்களைப் புகழ்ந்து போற்றிக்கொண்டு, அலைந்து திரிதலாகாது. (23) எம்பெருமானின் விமான கோபுரங்களைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து அஞ்சலி செய்யவேண்டும். (24) பிற சமயத் தெய்வங்களின் விமானம் முதலியவற்றைக் கண்டால், மிக வியப்பாக நினைத்தல் கூடாது. (25) பிற சமயத் தெய்வங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டு மிக மகிழ்தல் கூடாது. (26) ஸ்ரீ வைஷ்ணவர்கள் பகவத் பாகவத ஆசாரிய குணநலங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அவற்றைக்கேட்டு மகிழ்ச்சியடையாமல், இடையில் குற்றங் குறைகளை எடுத்துக்கூறுதல் பெரும் பிழையாகும். (27) ஸ்ரீ வைஷ்ணவர்களின் திருமேனி நிழலை மிதித்தல் கூடாது. (28) ஸ்ரீ வைஷ்ணவர்கள்மீது, தம் நிழல்படும்படி நடத்தல் கூடாது. (29) அசுத்த மக்களைத் தொட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களைத் தொடுதல் ஆகாது. (30) ஏழையான ஸ்ரீ வைஷ்ணவன் நம்முன்னே தண்டனிட, அதை நாம் அசட்டை செய்தல் அபசாரம் ஆகும்.

(31) ஸ்ரீ வைஷ்ணவர்கள் அடியேன் என்று முன் சொல்லி வணங்க, அவர்களைப் போற்றாமல் அசட்டை செய்தல் பெருங் குற்றமாகும். (32) யாரேனும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவரின் குற்றங் குறைகளை நாம் அறிந்து கொள்ள நேர்ந்தாலும், அவற்றைப் பிறரிடம் சொல்லிக் கொண்டிராமல் அவருடைய நற்குணங்களை மட்டுமே நாம் நினைத்துப் பாராட்டி வருதல் வேண்டும். (33) பகவத் பாகவத ஆசாரியர்களின் திருவடித் தீர்த்தங்களைச் சாதாரணப் பொதுமக்கள் பார்க்கும்படி பெறுதல் கூடாது. (34) தத்துவத்திரயம் இரகசியத்திரயம் என்பவற்றின் ஞானம் இல்லாதவர்களின் திருவடித் தீர்த்தத்தை ஒருபோதும் ஏற்றல் கூடாது (35) ஞான அநுட்டானங்கள் நன்றாகவே உடைய ஸ்ரீ வைஷ்ணவர்களின் திருவடித் தீர்த்தத்தை நாள் தோறும் ஏற்றல் வேண்டும். (36) பாகவதர்களுக்குத் தான் அடிமையென்று இராமல், தன்னை அவர்களுக்குச் சமமானவன் என்று எண்ணக் கூடாது. (37) விழிப்பின்மையால் சாதாரணக் கீழ்மக்களைத் தீண்ட நேர்ந்தால், அவ்வுடையோடு நீராடியே, பாகவதர்களின் திருவடித் தீர்த்தத்தை உட்கொள்ள வேண்டும். (38) ஞானபக்தி வைராக்கியங்கள் நிறைந்த பெருமக்களைப் பெரிதும் சிறப்பாகப் போற்றி மதிக்க வேண்டும் (39) ஞானபக்தி வைராக்கியங்களில் சிறந்த திருமாலடியார்கள் திறத்தில், குலம், குணம் முதலியன பற்றிக் கருதாமல், அவர்களைப் பெரு மதிப்பிற்கு உரியவர்களாக மதிக்க வேண்டும். (40) சாதாரண உலக மக்களின் இல்லங்களில், பெருமான் தீர்த்தமாகிலும் ஏற்கலாகாது. (41) அத்தகையோர் இல்லங்களில் உள்ள பெருமான் திருவுருவங்களையும் சேவித்தலாகாது.

(42) பெருமாள் உகந்தருளிய திவ்விய தேசங்களில் பொது மக்களின் பார்வைபடுதலாகிய குற்றம் இல்லை. (43) இறைவன் சந்நிதியில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் கொடுத்த பிரசாதத்தைத் தனக்கு அன்றைய தினம் விரதநாள் என்று கூறி மறுத்தலாகாது. (44) பகவத் பிரசாதத்தினை இன்னொருக்குக் கொடுத்து எஞ்சியது என்று மறுத்தலாகாது. (45) ஸ்ரீ வைஷ்ணவர்கள் முன்னிலையில் தன்னுடைய பெருமைகளைச் சொல்லிக் கொள்ளக்கூடாது. (46) பாகவதர்களின் எதிரில் மற்றொரு பாகவதரை அசட்டை பண்ணுதல் கூடாது. (47) பாகவத குணானுபவத்தை நாள்

தோறும் ஒரு கணமேனும் செய்யாமல், தன் வேலையை மாத்திரம் பார்த்துக் கொண்டிருத்தல் ஆகாது. (48) ஆசாரியரின் குணநலங்களை நாடோறும் ஒரு நாழிகையாவது புகழ்ந்து போற்றல் வேண்டும். (49) நாள்தோறும் ஒரு நாழிகையேனும் அன்புடனும் நம்பிக்கையுடனும் திருவாய்மொழி முதலான பிரபந்தங்களை ஓதி வருதல் வேண்டும். (50) வயிறு வளர்ப் பதிலேயே காலம் கழிக்கும் உலக மக்களோடு கூட்டுறவு கொள்ளுதல் கூடாது.

(51) ஸ்ரீவைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக் கொண்டு புலன் வழியே செல்லும் வஞ்சகர் களுடன் பழகுதல் ஆகாது. (52) எப்போதும் பிறர்மீது குற்றம் சொல்லிக்கொண்டே இருப்ப வர்களோடு பேசுதலாகாது. (53) அத்தகைய வர்பால் பேசநேர்ந்த குற்றத்தைப் போக்கிக் கொள்ள, ஸ்ரீ வைஷ்ணவர்களோடு இடையறுது பழகி உரையாடுதல் வேண்டும். (54) ஆசாரியர் களையும் பாகவதர்களையும் நிந்திப்பவர்களைக் கண் ணெடுத்துப் பார்த்தலும் ஆகாது. (55) துவ யத்தை அநுசந்திக்கும் பாகவதர்களோடு எப் பொழுதும் பழகி நட்புக் கொள்ளல் வேண்டும். (56) பிரபத்தி நெறியில் மூழ்கியிருக்கும் பாகவ தர்களோடு இடையறுது தொடர்பு கொண்டு பழக வேண்டும். (57) தத்துவத் திரயம் இரக சியத் திரயங்களில் முழுப் புலமை வாய்ந்த பெருமக்களுடன் பழக வேண்டும். (58) உல கியலிலேயே உழலுபவர்களின் தொடர்பை விட்டு, பகவத் பக்தியிலேயே இருப்பவர்களோடு இடை யறுது பேசியும் பழகியும் வரவேண்டும். (59) வைஷ்ணவர்கள் தன்னை அவமானப்படுத்தினுல் அவர்களிடத்தில் பகைமை பாராட்டுதல் ஆகாது.

(60) பரமபதத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணம் கொண்டால் ஸ்ரீ வைஷ்ணவர் களுக்கெல்லாம் நன்மை செய்யவேண்டும். (61) இறைவனுடைய கட்டளைக்கு மாறுன செயல் களைச் செய்தால் மிகப்பெரிய நன்மைகளை அடை வதாக இருந்தாலும், ஒரு சேதனன் அவற்றைச் செய்தலாகாது. (62) பெருமாளுக்கு நிவே தனம் ஆகாத பொருள்களை உண்ணுதல் கூடாது. (63) இறைவனிடம் பக்தியின்றிப் பொருள் ஈட்டு தல் இன்பம் நுகர்தல் ஆகியவற்றிலேயே உழலு பவர்களிடத்தில், எந்தப் பொருளையும் ஏற்க லாகாது. (64) புலால் முதலிய தாமச குணப் பொருள்களையும், சண்டாளர் மிலேச்சர் முதலிய வர்களால் விரும்பப்படும் பொருள்களையும், அசுத்த மான பொருள்களையும் சிராத்தம் முதலியவற் றில் அளிக்கப்படும் பொருள்களையும், இறைவன் பால் அடைக்கலம் புகுந்த பிரபந்நர் புசித்தல் ஆகாது. (65) தனக்கு விருப்பமான பொருள் களை யெல்லாம் இறைவனுக்கு நிவேதனம் செய் தல் கூடாது. (66) நூல்கள் உண்ணத் தகுந்த வை என்று கூறும் பொருள்களை யெல்லாம் இறைவனுக்கு நிவேதனம் செய்தல் வேண்டும். (67) பகவானுக்குப் படைத்த உணவு நீர், சந்தனம், மலர், தாம்பூலம் ஆகியவற்றைப் பிர சாதம் என்று கருத வேண்டுமே தவிர, நாம் அனுபவிக்கத் தகுந்தவை என்று கருதுதலாகாது. (68) நூல்கள் விதிக்கும் கடமைகளை யெல்லாம் இறைவனின் முகமலர்ச்சிக்காகச் செய்வதாக எண்ணவேண்டும். (69) பாகவதர்களிடத்தில் அபசாரப்படுவதைக் காட்டிலும், ஆத்மாவுக்குக் கேடு வேறு எதுவும் இல்லை; மோட்சத்தை அடைவதற்குப் பாகவதர்களை உவகையுறச் செய் வதிலும் மேலான உபாயம் வேறு எதுவும் இல்லை.

(70) பாகவதர்களை வணங்கி வழிபடுவதைக் காட்டிலும், நாம் செய்யத்தக்கது வேறொன்றும் இல்லை; பாகவதர்களிடத்தில் துவேஷபுத்தி கொள்ளுவதைத் தவிர, ஆத்மா கெடுதற்கு வேறு காரணம் இல்லை. (71) இறைவனின் விக்கிரக மாக வழிபடப்பெறும் திருவுருவங்களைக் கல், மரம் என்றும், ஆசாரியனைச் சாதாரண மனிதன் என்றும், ஸ்ரீ வைஷ்ணவர்களை இன்னசாதியார் என்றும், பாகவதத் திருவடித் தீர்த்தத்தை வெறும்நீர் என்றும், இறைவனின் திருமந்தி ரத்தை எளிய சொற்கள் என்றும், திருமகள் கேள்வனை ஏனைய தெய்வங்களோடு ஒப்பு என் றும் நினைத்தல், நரகத்தை அடைய ஏதுவாகும். (72) இறைவனை மகிழ்விப்பதைவிட, அடியார் களை மகிழ்விப்பது சிறந்தது; இறைவன்பால் செய்யும் குற்றங்களைவிட, அடியார்கள்பாற் செய் யும் குற்றம் மிகவும் கொடியது. (73) பிரபந் நர்க்கு ஆன்ம ஈடேற்றம் இறைவனல் நிகழ்வது ஆதலால் அது நேராததற்குத் தான் வருந்துதலா காது; வருந்துவானுயின், இறைவன்பால் தன் ஆன்மாவை ஒப்படைத்தது பொய்யாகும். (74) பிரபந்நனுடைய உடல் வாழ்க்கை, முன் செய் வினையின் பயனுக நிகழ்வது ஆதலால், அது குறித்துக் கவலையுறுதல் ஆகாது. கவலையுற்றால், கடவுளிடத்து விசுவாசம் இல்லாதவனுவான். (75) நீங்கள் செய்யும் கடமைகளை ஏதேனும் நன்மை கருதிச் செய்தலாகாது. இறைவனின் திருவுள்ளம் உவப்பதற்காகவே செய்ய வேண்டும்.

(76) ஸ்ரீ பாஷ்யத்தைத் தக்க ஆசிரியன்பால் கேட்டுத் தெளிந்து, உலகத்தில் பரவச் செய்ய வேண்டும். (77) அது முடியாவிட்டால், ஆழ் வார்களின் அருளிச் செயல்களை நன்கினிது கற்றுத் தேர்ந்து மாணவர்களுக்கு உபதேசிக்க வேண் டும். (78) அது முடியாவிட்டால், எம்பெரு மான் உகந்தருளின திவ்விய தேசங்களில் திரு விமானம், திருமதில், திருமண்டபங்கள், திருஆரா தன பாத்திரங்கள், திருவாபரணங்கள் திருப்பரி வட்டங்கள், திருத்தேர் முதலிய வாகனங்கள், திருவிழா, அமுதுபடி, சாந்துபடி, திருநந்தவனம், திருமாலை திருவிளக்கு முதலிய தொண்டுகளில் இயன்றதைச் செய்ய வேண்டும். (79) இதுவும் செய்ய இயலா விட்டால், நமக்கு மிகவும் விருப்பமான திருநாராயணபுரத்தில் ஒரு கூரை வீடாகிலும் கட்டிக் கொண்டு வாசம் பண்ணுங் கள். (80) இதுவும் இயலாவிட்டால், பொருள் உணர்ந்து துவயத்தை இடையறுது அநுசந் தித்துக் கொண்டு இருப்பிடத்திலேயே இருங்கள். (81) இதற்கும் இயலாவிட்டால், ஞானபக்தி வைராக்யம் முதலான நற்குணங்கள் நிறைந்த வராய், நம்மைச் சேர்ந்தவர்கள் என்கிற நினை வுள்ள மகாத்மாக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்ந்து, அகங்காரத்தைவிட்டு அவர்களின் கட்

டளைப்படி, பணிந்து நடந்து கொண்டிருங்கள். இதுவே தான் கடைசி உபாயம். இதைவிட வேறு உபாயமில்லை.

(82) இவ்வாறு உய்தி பெறுவதற்குரிய அன்பர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆகிய அநுகூலர், பகவத் விரோதிகளாகிய பிரதிகூலர், உலகியல் வாழ்க்கையிலேயே ஊன்றியுள்ளவர்களாகிய அநுபயர் என்னும் மூவர் திறத்தினும், முன் எச்சரிக்கையாக ஆராய்ந்து நடந்து கொள்ளவேண்டிய முறைகள் மூன்று உண்டு. அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைச் சேவிக்கும்போது சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலானவைகளைப் பார்த்தாற் போலவும், விருப்பமான நற்பொருள்களைக் கண்டாற்போலவும், நடந்துகொள்ளவேண்டும். பிரதிகூலரான பகவத் விரோதிகளைக் கண்டால், நெருப்பு பாம்பு முதலியவைகளைக் கண்டாற் போல அஞ்சவேண்டும்; அநுபயரான உலகமக்களைக் கண்டபோது, விறகையும், மண்ணையும் கண்டாற்போல அசட்டை செய்யவேண்டும்.

ஒருகாற் பிரதிகூலர்கள் அநுகூலர்களானால் இரக்கமுற்று அவர்களை இனிது போற்றவேண்டும். இவ்வாறன்றிப் பொருள் முதலியவற்றின் மீதுள்ள ஆசையினால் பிரதிகூலர் ஆன பகவத் விரோதிகளைப் போற்றினால், ஒரு பேரரசனின் மனைவி நீசனிடத்தில் பிச்சை ஏற்றால், அப்பேரரசனுக்குப் பழியும் குற்றமும் உண்டாகுமாறு போல, இறைவனின் திருவுள்ளம் நொந்து விடும். பொருள்மீதும் இன்ப நுகர்ச்சிகளின் மீதும் கொண்ட ஆசையால், அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டு வணங்காமலும் ஆதரிக்காமலும் இருந்தால், பேரரசனின் முன்பு அவனது அருமைப் புதல்வனை அவமதிப்புச் செய்தவன் தண்டிக்கப்படுவதைப் போல, இறைவனின் திருவுள்ளம் கலங்கிவிடும். உலகமக்களாகிய அநுபயரை விரும்பி ஆதரித்தால், அது பெருஞ்சுடர் மணிக்கும் வெறும் கல்லுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறியாமை போன்ற குற்றமாகும். இதனால் நன்மை எதுவும் எய்துதல் இயலாது.

## முடிவுரை :

இராமாநுசர் அருளிச் செய்த இனிய அருள் மொழிகளாகப் "பிரபந்நாமிருதம்" என்னும் நூல் கூறுகின்ற இவ் வெண்பத்திரண்டு திருவார்த்தைகளின் அருமை பெருமைகளை, அன்பர்கள் அனைவரும் அறிந்து பெரிதும் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகி, நலம் பலவும் எய்த முயலுவார்களாக!

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அஞ்ஞானத்தையே ஆதியாகக் கொண்டது. இது ஞானத்தில் கரைந்துவிடும்.

—ஆதி சங்கரர்

நம்பிக்கையுணர்வும் உண்மையும் கொண்ட பிரார்த்தனைகள் மலைகளையும் அசைத்திடும் வலிமை பெற்றன.

—ஏசுநாதர்

பொறாமையும் பேராசையும் கெட்ட நடத்தையும் உள்ளவன், பேச்சினாலோ உடல் மினுமினுப்பினாலோ மட்டும் நல்லவனாகிவிட முடியாது.

—புத்தர்



குற்றம் குறைகளைப் பார்த்துக்கொண்டிருந்தால் ஒரு சுற்றத்தாரும் உனக்குக் கிடைக்கமாட்டார்கள். ஒவ்வொருவருடைய குற்றத்தையுமே பார்த்துக்கொண்டிருப்பதனால் எவரும் நமக்கு நண்பர்களாக இருக்கமாட்டார்கள்.

—ஔவையார்

நீண்டகாலம் நட்புச் செய்தாலும் நண்பர் ஆகாதவர்கள் நண்பர்களல்லர்; பாலைக் காய்ச்சினாலும் சுவை குன்றாதது போல, சுட்டாலும் சங்கு வெண்மை தருவது போல, கெட்டாலும் மேன்மக்கள் பண்பு குறையாதவராக இருப்பார்கள்.

—ஔவையார்

ஒரு தனியிடம் சென்று உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக்கூடிய சிந்தனைகள், வலிமை தரக்கூடிய சிந்தனைகள், துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் இவற்றால் அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்வதை ஒரே ஒரு நாளும் தவறவிடாதே.

—கவியரசர் பாரதி

**புதுப் பெரியவர்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**



# இந்து சமயத்தின் முப்பெருங் காவலர்கள்

**ஸ்ரீ சங்கரர்**

அதர்மம் ஓங்கிநிற்கும் போது தர்மத்தை நிலைநாட்ட பகவான் பூவுலகில் அவதரிக்கிறார். கலியுகத்தில் ஒருசமயம் நிரீசுரவாதம் தலைதூக்கி நின்றது. சிவபெருமான், ஞான மார்க்கத்தை வளர்க்க ஆவதாரம் எடுத்தார்.

சங்கர பகவத்பாதாளை சிவபெருமான் திரு அவதாரம் என்று கொள்வது சாலச் சிறந்த தாகும். கேரள நாட்டில் காலடி என்னும் சிற்றூரில் சூர்யாம்பாள் சிவகுரு தம்பதியருக்கு, வடக்கு நாதன் அருளால் குழந்தை பிறந்தது.

வட மொழியில் "சம்" என்றால் சுகம். "கரோதி" என்றால் கொடுப்பவன். பாரத மக்க ளுக்கு ஞானமார்க்க மெனும் சுகத்தையும், அத்வைத சித்தாந்தத்தால் ஆனந்தத்தையும் பிற்காலத்தில் அளிக்கப் போகும் சிறுவன் என்ப தால் பெற்றோர்கள் சங்கரன் என்று பெயர் சூட்டினர்.

சங்கரனுக்கு ஐந்து வயதாகும் போது உபநயனம் நடந்தது. பூணூல் போட்ட பின் குருகுல வாசம் செய்து வேதம் கற்பவன் பிரம்மசாரி எனப்படுவான். பிரம்மசாரி குருகுல வாசம் செய்ய வேண்டும். தினமும் வீடுவீடாகச் சென்று பிட்சை வாங்கி வரவேண்டும். ஒரு துவாதசியன்று பரம ஏழையான ஒருவரின் வீட்டின் முன்பு நின்று சங்கரன் பிட்சை கேட் டான். அந்த வீட்டுத் தாயிடம் நெல்லிக் கனி யைத் தவிர வேறில்லை. அந்த நெல்லிக் கனியைச் சங்கரனின் பிட்சைப் பாத்திரத்தில் இட்டாள். அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. சங்கரன் அந்த ஏழையைச் செல்வந்தராக்க ஸ்தோத்திரம் பாடி னார். அந்த வீட்டில் பொன்மாரி பொழிந்தது. அந்தத் துதிக்கு "கனகதாரா ஸ்தவம்" என்று பெயர்.

குருகுல வாசம் முடிந்த சங்கரனுக்கு, துற வறம் பூணும் நிலை ஏற்பட்டது. ஒரு நாள் ஆற்றில் நீராடுகையில், முதலை சங்கரனின் காலைப் பற்றிக் கொண்டது. தாய் சூர்யாம்பாள் எவ்வ ளவோ முயன்றும் முதலையினின்று மீட்பது கடினமாக இருந்தது.

அப்போதே துறவியாகி, இந்தப் பிறவியி லிருந்து விடுபட்டால் முதலைப் பிடியினின்று விடு பட முடியும் என்று சங்கரன் கருதினான். தாயின் அனுமதி கிடைத்தது. சங்கரன் சந்நியாசி ஆனார். முதலைப்பிடி கழன்றது.

சந்நியாசி ஒருவரிடம் முறையாக துறவறம் பெறவேண்டிய முறைப்படி தக்க துறவியை நாடிப் புறப்பட்டார் சங்கரர். கோவிந்த பகவத் பாதர் அவருக்குத் துறவு மந்திரம் புகட்டினார்.

"அனைத்தும் கடவுளின் தோற்றமே. மனித ஜீவனாகத் தன்னை எண்ணிக்கொண்டிருப்பவனும் உண்மையில் கடவுள் என்கிற ஒரே தத்துவம் தான்," என்ற உண்மையைக் கூறும் வேத மந்திரங்களுக்கு "மகா வாக்கியங்கள்" என்று பெயர். இந்த மகாவாக்கியங்களையும் சங்கர னுக்கு உபதேசித்தார் கோவிந்தர்.

இந்தத் தத்துவத்தை நாடெங்கும் பிரசாரம் செய்யப் புறப்பட்டார் சங்கரர். தெய்வமாக இருந்து பெரிய சக்தியினால் மக்களை நல்வழிப் படுத்துவதைவிட மனிதர் போல இருந்து அன் பால் அவர்களை உயர்த்துவதுதான் சிறப்பானது; அப்போதுதான் மற்ற மானுடர்களுக்கும் தாங் களும் தெய்வமாக உயரலாம் என்ற நம்பிக்கை பிறக்கும் என்று சங்கரர் கருதினார். இந்த தத்துவத்தை மக்களுக்கு விளக்கப் புறப்பட்டார். அவரது அறவுரைகளை மக்கள் கேட்க முற் பட்டனர்.

வியாசர் அருளிய பிரம்ம சூத்திரம், வேத ரிஷிகள் அருளிய உபநிடதங்கள், கண்ணபிரான் இயற்றிய கீதா உபதேசம் ஆகிய மூன்று நூல் களுக்கு சங்கரர் உரை இயற்றினார். இவை "பாஷ்யம்" எனப்படும்.

பாரத தேசமெங்கும் சுற்றி அத்வைதத்தைப் பரப்பிய ஸ்ரீ சங்கரர், காஞ்சி நகருக்கும் வந் தருளினார். பராசக்தி காமாட்சியின் அருள் பொங்கும் நகரமாக காஞ்சி நகரையே ஸ்ரீ சக்ர வடிவமாக அமைய அருளினார். காமாட்சி யிடம் எல்லையற்ற பக்தி கொண்ட சங்கரர் காமகோடி பீடத்தை அங்கு ஏற்படுத்தினார்.

வேத மதத்தை நிலைநாட்டத் தோன்றிய சங்கரர் அத்வைதத்தை நாடெங்கும் பரப்பிய சங்கரர் தாம் வந்த பணி ஒருவாறு முடி வடைந்து விட்டது என்று எண்ணித் தமது முப்பத்திரண்டாவது வயதில் பராசக்தியுடன் இரண்டறக் கலந்துவிட்டார்.

சங்கரரின் பெயரும் அவர் உபதேசித்த தத் துவங்களும் இன்றும் அழியாமல் நின்று வழிகாட்டுகின்றன.

## ஸ்ரீ இராமாநுஜர் :

அனைத்துயிரும் ஒன்றே (பிரமம்மே) என்று கருதுவது அத்வைதம்.

"ஒருவன் தெருவில் விழுந்து காயமுற்று இரத்தம் சிந்தும்போது, நீயும் இரத்தம்பெருகக் காயமடைந்திருப்பதாய் உணர்ந்தால் நீ வைஷ்ண வன்; காய முற்றவன் வேறொருவன் என்ற உணர்ச்சி ஏற்பட்டால் நீ ஸ்ரீ வைஷ்ணவன் இல்லை" — இப்படி நஞ்சீயர் ஒரு பாகவதரை நோக்கிக் கூறியதாக மூதறிஞர் பி. ஸ்ரீ. எழுது வார். இதுவே விசிஷ்டாத்வைத அருள் நெறி; அன்பு நெறி.

வைஷ்ணவன் என்போன் யாரெனக் கேட்பின்
வகுப்பேன் அதனைக் கேட்பீரே

பிறருடைத் துன்பம் தனதென எண்ணும்
பெருங்குணத்தவனே வைஷ்ணவனும்.

விருப்பும் வெறுப்பும் விலக்கிய நடுநிலை
விளங்கிட ஆசைகள் விட்டவனாய்
ஒருப்படுடன் அன்னிய மாதரைத் தாயென
உணர்வோன் வைஷ்ணவன் ......
ஊரார் உடமையைத் தொடமாட்டான்......

என்று நாமக்கல் கவிஞர் "வைஷ்ணவன் என் போன் யார்?" என்ற பாடலில் கூறுகிறார்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்குப் புது ஒளி கொடுத்து உலகம் உணரச் செய்தவர் ஸ்ரீ இராமாநுஜர். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீ பெரும்புதூரில் கேசவ சோமயாஜி என்ற பெயருடைய உத்தமருக்கும், காந்திமதி எனும் மங்கை நல்லாளுக்கும் புதல்வராக இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிங்கள ஆண்டுச் சித்திரைத் திங்களில் சுக்கில பட்சத்துப் பஞ்சமியில் வியாழக்கிழமையும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில், இராமாநுஜர் திரு அவதாரம் செய்தார்.

இராமாநுஜன் என்பதற்கு இராமன் தம்பி என்று பொருள். ஸ்ரீ வைஷ்ணவ மகானை ஆளவந்தார் என்பவரை ஞானகுருவாகக் கொண்டவர் இராமாநுஜர். அவரது முப்பெரும் விருப்பங்களாவன: வியாச முனிவரிடமும், பராசரரிடமும் நன்றி உணர்வு மிகுந்து இருத்தல். சடகோபராகிய நம்மாழ்வாரிடம் விசேஷ பக்தி. நம்மாழ்வாரின் கொள்கைகளுக்கு இசையப் பிரம்ம சூத்திரங்களுக்கு விசிஷ்டாத்வைதப் பேருரையாகிய "பாஷ்யம்" இயற்றுதல். — மூன்றையும் பூர்த்திசெய்ய உறுதி பூண்டார்.

அந்த உறுதியே ஸ்ரீ பாஷ்யம் என்ற பேருரையை ஸ்ரீ இராமாநுஜர் இந்து சமயத்திற்கு அளித்தது. ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீ இராமாநுஜரின் தனிப்பெரும் நூல். ஸ்ரீ பாஷ்யத்தை இராமாநுஜர் சொல்ல ஸ்ரீ கூரத்தாழ்வார் எழுதினார்.

ஸ்ரீ இராமாநுஜர் ஸ்ரீ பாஷ்யம் எழுதி முடித்த பிறகு தம் கொள்கைகளைப் பரப்ப பாரத நாடெங்கும் திக்விஜயம் செய்யப் புறப்பட்டார். விசிஷ்டாத்வைதக் கொள்கை நாடெங்கும் பிரபலமடைந்தது.

ஸ்ரீ இராமாநுஜர் திருமலையப்பனின் பெருமையை உணரச் செய்தவர்.

வேதங்களின் சிகரமான உபநிடதங்களில், "உண்மைப் பொருள் ஒன்றே, இரண்டு அல்ல" என்ற சொற்றொடர் ஒன்று உண்டு.

"ஜீவனும் பிரம்மமும் இரண்டல்ல, ஒன்றே" என்பது அத்வைதம், ஜீவனும் பிரம்மமும் ஒன்றல்ல, இரண்டே என்பர் துவைதியர்.

பகவானுடைய திருவருளால்தான் மோட்சம் அல்லது விடுதலை கிடைக்கும். மோட்ச வீடாகிய பரமபதத்திலும்கைங்கர்யம் என்ற அநுபவம் உண்டு. இந்த அநுபவத்துடன் பகவானுடைய திருக்குணங்களையும் அனுபவித்துக் கொண்டு பரமானந்த மடைகிறார்கள் முக்தர்கள். இது விஷ்டாத்வைதம். ஸ்ரீ இராமாநுஜர் நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்தவர்.

ஸ்ரீ இராமாநுஜர் சிவந்து நெடியராய் ஆஜாநுபாகுவாய் சர்வலட்சண சம்பன்னராய்த் திகழ்ந்தார் என்றும், இவரது வடிவழகும் கண்ணுக்கு இனியனவாய்ச் சீடர்களையும் பிறரையும் குளிரப் பண்ணின என்றும் குருபரம்பரைகள் சொல்லுகின்றன.

ஸ்ரீ பெரும்புதூரிலுள்ள ஸ்ரீ இராமநுஜர் விக்கிரகத்தை ஸ்ரீ இராமநுஜரே உவப்புடன் அதைத் தழுவிக் கொண்டாராம். "தான் உகந்த உருவம்" என்கிறார்கள் அந்தத் திருவிக்கிரகத்தை.

## ஸ்ரீ மத்வர் :

நமது இந்து சமுதாயத்திற்கு ஊறு ஏற்படாமல் காத்து, அதன் பாரம்பரியத்தைப் போற்றி வளர்த்தவர்கள், ஆதிசங்கரர், ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மத்வர் ஆவர். அவர்கள் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்னும் முப்பிரிவுகளுக்குள் இந்து மதத்தை அடக்கி இன்று மகோன்னதமாக விளங்கச் செய்தவர்கள். அவர்களுடைய வழி வெவ்வேறாக இருப்பினும் வேத, உபநிஷத்துக்களின் மூலாதாரக் கருத்தை விடவில்லை. பிரம்மஸூத்திரத்திற்கு அவரவர் சித்தாந்தத்திற்கேற்ப பாஷ்யங்கள் செய்தனர்.

ஜீவாத்மா — பரமாத்மா இரண்டும் ஒன்றே என்றார் சங்கரர். இக்கருத்தை ஸ்ரீ இராமாநுஜர் ஏற்கவில்லை. ஜீவன், பிரம்மத்தை உணர பக்தியினாலேயே சாத்யம் என்று அருளி வேத, உபநிஷத்துக்களிலிருந்து தனது வாதத்திற்கு மேற்கோள்களைக் காட்டி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

ஸ்ரீ இராமாநுஜருக்குப் பின்னால் தோன்றிய மத்வர் அத்வைதத்தை அறவே ஒதுக்கினார். த்வைத பிரசாரத்தில் தீவிரமாக இறங்கினார். ஜீவன், வேறு — பிரம்மம் வேறு, எல்லாவற்றிற்கும் மேலானவன் ஸ்ரீமந்நாராயணனே ஆவர். உலகம் மாயை அல்ல. நம் உள்ளத்திலும், வெளியிலும் தோன்றும் வித்தியாசங்கள் எல்லாம் உண்மையே. ஜீவன்களில் ஏற்றத்தாழ்வு உண்டு.

ஸ்ரீ நாராயணனைச் சார்ந்ததே ஜீவன். ஆத்ம சுகத்தை அடைவதே முக்தி. இதைப் பெற ஹரிபக்தி ஒன்றே வழி. பிரத்யட்சம், அநுமானம், ஆகமம் ஆகிய மூன்றும் பிரமாணங்களாகும். ஸ்ரீ ஹரியை வேதங்களின் மூலமாகத் தான் அறிய முடியும் என்று த்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்தார் ஸ்ரீ மத்வர்.

உடுப்பிக்கு அருகேயுள்ள "பாஜக க்ஷேத்திரம்" என்ற கிராமத்தில் வேதவதி அம்மையாருக்கும், மத்யகேஹரருக்கும் பிறந்தவர் மத்வர். அப்போது அவர் வாஸுதேவன் என்ற பெயரைப் பெற்றிருந்தார். அவருடைய வாழ்வில் பல அரிய, அற்புத சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. குருகுல வாசத்தில் குருவை மிஞ்சக் கூடிய சிஷ்யராக விளங்கினார். பிரம்மசரிய ஆஸ்ரமத்திலிருக்கும் போதே சந்யாசத்தை மேற்கொண்டார். பூரணப்ரக்ஞர், ஆனந்த தீர்த்தர், மத்வர் என்ற திருநாமங்களைப் பெற்றிருந்தார். அத்



ஸ்ரீ ஆதிசங்கரர்



ஸ்ரீ மத்வர்



ஸ்ரீ இராமாநுஜர்

வைதியான தனது குரு அச்சுத பிரேக்ஷருடன் பல சம்வாதங்களை நிகழ்த்தி த்வைத சித்தாந்தத்தை நிலைநாட்டினார். பலர் அவருக்கு சிஷ்யராயினர். சில சிஷ்யர்களுடன் தென்னாட்டுத் தலங்களைத் தரிசித்தார். பத்ரி, காசி, பூரி போன்ற வடநாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்தார்.

உடுப்பியில் கீதைக்குப் பாஷ்யம் இயற்றினார். பின்பு பிரம்ம ஸூத்திரத்திற்கு ஸ்ரீ வியாச பகவானை அணுகி, அவருடைய அனுக்கிரகத்துடன் பாஷ்யம் செய்தார். ஒருசமயம் தன் ஞான திருஷ்டி மூலமே துவாரகையிலிருந்து படகு மூலமாக கிருஷ்ண விக்கிரகம் வருவதை அறிந்தார். பின்பு கடற்கரையில் காத்திருந்து த்வாதச ஸ்தோத்திரத்தை இயற்றி, விக்கிரகத்தைப் பெற்று உடுப்பியில் பிரதிஷ்டை செய்தார். பல மடங்களை ஆங்காங்கு நிறுவினார். அவருக்குப் பிறகு இன்னும் ஸ்ரீ உத்திராதி மடம், ஸ்ரீ வியாசராய மடம், ஸ்ரீராகவேந்திர மடம் முதலானவை தோன்றின.



**யா**ருடைய மனதையும் புண்படுத்தி விடாதபடி மரியாதையாகப் பேசு.
—சமண மதம்

**கு**ழந்தைகளின் இதயத்திலும் வாயிலும் வரும் கடவுளின் பெயர் தாய். —தாக்கரே

**த**ர்ம காரியங்கள் செய்யும்போதுதான் ஒருவன் தெய்வ வழிபாடு செய்வதாகச் சொல்ல முடியும்.
—ஸவான ரோலா

**ந**ம்மிடத்தில் எங்கேயோ கோளாறு இருப்பதனால் நாம் கடவுளில் ஒன்றுபடாதிருக்கிறோம்.
—அருள் விருந்து (தர்ம சக்கரம்)

**கா**மம், க்ரோபம், லோபம், மோகம், மதம், வெறுப்பு ஆகிய துர்க்குணங்கள் கண்ணனின் நாமத்தை ஜபிப்பதனால் வேரோடு கிள்ளி எறியப்படுகின்றன.
—ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்

**செ**ய்யாமல் விட்டுள்ள ஒவ்வொரு கடமையும் புதிதாக ஏழு கடமைகளுடன் திரும்ப வரும்.
—சார்லஸ் இங்ஸ்லே

**சூ**ரிய உதயம், உச்சிப்போது, சாயரட்சை, மாலை, யாமம், வைகறை, ஆகிய ஆறு காலங்களிலும் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும். —வடலூர் வள்ளலார்

**ம**னிதனின் பாவங்கள், அவனுடைய மன அவலங்களின் பயன். மனதைச் சிரைத்துப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளாதவர்கள், மயிரை மட்டும் ஏன் சிரைத்துக்கொள்ள வேண்டும்?
—கபீர்தாசர்

**வெ**ளிப் பார்வைக்குக் கேவலமாக உள்ளதும், ஆனால் உட்புறத்திலே அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசைதான் ஆண்டவன் குடியேறி வசிப்பதற்கு ஏற்றதொரு மாளிகை.
—இங்கர்சால்

# கோதையார்

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

தமிழ் நாட்டில் மார்கழித் திங்களில் நாள்தோறும் வைகறை போதில் கோவில்களிலும் வீடுகளிலும் இன்னிசைப் பாமாலையாகியத் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுவதைக் கேட்டு நாம் மகிழ்கிறோம். திருப்பாவை என்னும் பாவைப் பாட்டுகள் பண்டைக் காலந்தொட்டே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டு வந்தது, பரிபாடல் முதலிய பழந் தமிழ் நூல்களால் விளங்குகிறது. சங்கத் தமிழை நன்கு பயின்ற கோதையார் என்னும் தமிழ்ச் செல்வியார், "சங்கத் தமிழ் மாலை முப்பது" எனத் தாம் பாடிய தமிழ்த் திருப்பாவையைப் பாராட்டியிருக்கின்றார். தெய்வத் திருவருளை நாடிப் பாவை பாடிய அத்தமிழ்ச் செல்வியார் வரலாற்றைச் சுருக்கமாகப் படித்து அறியலாம்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீவில்லிபுத்தூர் என்னும் திருப்பதியில் பெரியாழ்வார் என்னும் வைணவப் பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் திருமாலுக்கு அடிமை செய்து, தம் மனைவியருடன் இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். அவர்களுக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. அவர்கள், "யாவும் இறைவன் செயலே" என்று கருதி ஆற்றியிருந்தார்கள்.

பெரியாழ்வார் பூங்கா அமைத்துத் துளசியும் பலவகை மலர்ச் செடிகளும் வளர்த்து, நாள்தோறும் மலர் மாலை தொடுத்து, அவ்வூரிலுள்ள வடபெருங் கோயில் உடையான் என்னும் பெருமானுக்கு அளித்து வந்தனர். அவர் தமிழ் மொழியிலும் பெரும்புலமை வாய்ந்தவர். ஆதலின், பூமாலையுடன் பாமாலையும் தொடுத்துப் பாடி மகிழ்வார். அவர் பாடியருளிய தெய்வப் பாடல்கள் "பெரியாழ்வார் திருமொழி" என்னும் பெயருடன் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திகழ்வதைக் காணலாம்.

ஒரு நாள் பெரியாழ்வார் மலர்க்காவில் மலர் பறிக்கச் சென்றவர், அழகே வடிவெடுத்தாற்போன்ற பெண் மகவு ஒன்றை கண்டார்; வறியவன் புதையலைக் கண்டாற்போலப் பெருமகிழ்வடைந்தார்; அம்மகவை எடுத்து வந்து தம் மனைவியாரிடம் கொடுத்தார். அவ்வம்மையார், குருடன் கண் பார்வை பெற்றாற்போல மகிழ்ந்து, அக்குழவியைப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டி வளர்த்து வந்தார்.

பெரியாழ்வார் அக்குழந்தைக்குக் "கோதை" எனப் பெயரிட்டுத் தக்க பருவத்தில் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அன்போடு கற்பித்து வந்தார். செல்வியார் ஆழ்வார் கற்பித்தவற்றை அவரே கேட்டு வியக்கும்படி கற்று, பாட்டியற்றும் புலமையிலும் சிறந்து, திருமாலிடத்துப் பெரிதும் அன்பு கொண்டு, திருப்பாடல்கள் பலவற்றை இயற்றினர். அப்பாடல்களே திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி என்னும் பெயர்களுடன் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளவை. திருப்பாவை, "கோதை தமிழ்" எனச் சிறப்பிக்கப்பட்டது; முப்பது பாடல்களை உடையது; பழங்காலம் தொட்டுப் பாவையர் நோற்று வந்த பாவை நோன்பின் பண்பை விளக்குவது. நாய்ச்சியார் திருமொழி நூற்று நாற்பது மூன்று பாசுரங்களையுடையது.

கோதையார் நாள்தோறும் ஆழ்வார் தொடுக்கும் மலர் மாலையை அவர் அறியாதபடி தாம் சூடிக்கொண்டு, கண்ணாடி முன் நின்று, தம் அழகு இறைவருக்கு இன்பம் பயப்பதாய் இருக்குமா என்று எண்ணி மகிழ்வார். திருமாலிடத்துத் தோன்றிய தெய்வக் காதல், "மானிடவர்க்கென்று வாழ்க்கைப்படின், வாழகில்லேன் மன்மதனே!" என்று அவரை முறையிடச் செய்தது.

கோதையார் சூடிக் களைந்த மாலையைச் சூடிக் கொள்வதில் இறைவர்க்கும் இன்பம் பெருகியது என்பதை ஒரு நிகழ்ச்சி விளக்குகிறது. ஒரு நாள் கோதையார் மாலை சூடி ஆடி முன் நின்று தம்மை மறந்தார். அதைக் கண்ட ஆழ்வார் அச்செய்கையைக் கடிந்து, அன்று பெருமானுக்கு மலர் மாலை அளியாமல் இருந்து விட்டார். அன்று இரவு பெருமானர் அவர் கனவில் தோன்றி, "ஆழ்வீர், கோதை சூடிக் கொடுக்கும் கோதையே எமக்கு இன்பந் தருவது. ஆகையால், இனி நீர் அவள் சூடிக் கொடுக்கும் மாலையையே எமக்கு அளிக்கக் கடவீர்", என்று கூறி மறைந்தருளினர்.

ஆழ்வார் விழித்தெழுந்து "சூடிக்கொடுத்த நாய்ச்சியே என்னை ஆண்டாள்!" என அன்பு கனிந்து, மொழிந்து அன்று முதல் கோதையாரைச் சூடிக் கொடுத்த நாய்ச்சியார் எனவும், ஆண்டாள் எனவும் வழங்கி வரலாயினர்.

மணப்பருவம் எய்திய அம்மையார் மனிதருள் எவரையும் மணக்க விரும்பாமையை அறிந்த ஆழ்வார் மனங்கசிந்து உறங்குகையில் அவரது கனவில் இறைவர் தோன்றி, "ஆழ்வீர், கோதையைத் திருவரங்கத்திற்கு அழைத்து வருக!" என்று கூறி மறைந்தார்.

ஆழ்வார் தமக்கு மாணவரான சீவல்லப தேவர் என்னும் பாண்டிய மன்னருக்கு அறிவித்தார். மன்னர் ஆவன அனைத்தும் செய்வித்து, கோதையாரைப் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு பலரும் புடைசூழத் திருவரங்கத்தைச் சேர்ந்தனர். திருக்கோயிலுள் நுழைந்ததும் அம்மையார் இறைவரின் திருவுருவோடு கலந்து விட்டனர் என அவரது வரலாறு கூறுகிறது.

அம்மையார் அளித்த அருந்தமிழ்ப் பாக்கள் கற்பார் உள்ளத்தைக் கடவுளிடம் பதியச் செய்பவை. பண் சுமந்த அப்பாடல்களை நாமும் பாடி மகிழ்கிறோம்!.

வாழ்க ஆண்டாளின் வளர்புகழ்!

# உபதேச இரத்தினமாலை

ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

முன்னுரை :

முன்னம் திருவாய் மொழிப்பிள்ளை
தாம் உப தேசித்தநேர்
தன்னின் படியைத் தணவாத சொல்
மணவாள முனி,
தன் அன் புடன்செய் உபதேச
ரத்தின மாலைதன்னைத்
தன்நெஞ்சு தன்னில் தரிப்பவர்
தாள்கள் சரண் நமக்கே

— தனியன்.

ஸ்ரீவைஷ்ணவப் பெருஞ்சான்றோராகிய மண வாளமாமுனிகள் அருளிச் செய்த நூல்களுள், உபதேச ரத்தினமாலை என்பதும் ஒன்றாகும். இதன்கண் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் அருட் பெருஞ் சான்றோர்களான ஆழ்வார்களின் திருப் பெயர்கள், அவர்கள் அவதரித்த மாதங்கள், நட்சத்திரங்கள், தலங்கள், அவ்வாழ்வார்கள் அருளிய திவ்வியப்பிரபந்தங்களுக்கு வியாக்கி யானங்கள் முதலியவற்றை அருளிச்செய்த ஆசாரி யர்களின் பெருமைகள், அவ்வாசாரியர்களுள் தலைவரான பிள்ளைலோகாசாரியரின் பெருமை, அவர் அருளிச் செய்த நூல்களுள் தலைசிறந்த ஸ்ரீவசனபூஷண நூலின், பெருமை, அந்நூலின் சாரமான நுண்பொருள்கள், ஆகிய பலப்பல செய்திகள், உபதேச ரத்தின மாலை என்னும் இந்நூலின்கண், அழகிய இனிய வெண்பாக்களில் சிறப்புற எடுத்து விளக்கப் பெறுகின்றன. அந் நூற் பொருளைச் சுருக்கமாக ஈண்டுத் தொகுத் துக் காண்போம்.

ஆழ்வார்கள் :

பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழி சைப்பிரான், நம்மாழ்வார், குலசேகரப்பெருமாள், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய இவர்கள் ப்தின்மரும் முறையே அவதரித்தவர் களாவர், இவர்களுடன் ஆண்டாள் நாச்சியார், மதுரகவியாழ்வார் என்னும் இருவரையும் சேர்த்து, ஆழ்வார்கள் பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு. ஆழ்வார்களின் அவதாரக்கிரமத்தை ஒருசிலர் மாற்றிச் சொல்வதுண்டு. அது பொருந்தாது. ஆழ்வார்களின் அவதாரக் கிரமம் இதுதான் என்று மணவாள மாமுனிகள், இந்நூலில் அறுதி யிட்டு வரையறை செய்து கூறியுள்ளமை, சிறப் பாகப் போற்றற்பாலது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் —
துய்யபட்ட
நாதன் அன்பர் தாள்தூளி நற்பாணன்
நன்கலியன்
ஈதிவர் தோற் றத்தடைவாம் இங்கு.



தோற்றத்தின் மாதமும் நாளும் :

இங்ஙனம் ஆழ்வார்களில் தோற்றத்து அடை வினை வரையறை செய்தருளிய மணவாள மாமுனி கள், அவர்கள் தோன்றிய மாதங்களையும் நட் சத்திரங்களையும் கூட அழகுறத் தொகுத்துக் கூறுகின்றார், பொய்கையார், பூதத்தார், பேயாழ் வார் என்னும் மூவரும், ஐப்பசி மாதத்தில் தோன்றியராவர். பொய்கையார் திருவோணத் திலும், பூதத்தார் அவிட்டத்திலும், பேயாழ்வார் சதயத்திலும் தோன்றியருளினர். பொய்கையார் பேயார் பூதத்தார் என்னும் இம்மூவரும் மற் றைய ஆழ்வார்களுக்கு முன்னே தோன்றி, நற்ற மிழால் நூல்செய்து நாட்டை உய்வித்த பெருமை யுடையவர்கள் ஆதலின், இவர்களுக்கு முதலாழ் வார்கள் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

முதலாழ்வார்கள் தவிர்த்த மற்றைய ஆழ்வார்

களில் திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியருளினர். திருப்பாணாழ்வார் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்திலும், தொண்டரடிப் பொடியாழ்வார் மார்கழிக் . கேட்டையிலும் திருமழிசையாழ்வார் தைமாத மகத்திலும், குலசேகர ஆழ்வார் மாசிப் புனர்பூசத்திலும், நம்மாழ்வார் வைகாசி விசாகத்திலும், பெரியாழ்வார் ஆனிச் சுவாதியிலும் தோன்றியருளினர்.

## பெரியாழ்வாரும் திருப்பல்லாண்டும்

ஆழ்வார்களில் திருப்பல்லாண்டு பாடிய பட்டர் பிரான் என்பவருக்குப் பெரியாழ்வார் என்னும் சிறப்புப்பெயர் உண்டு எம்பெருமானுக்கு மங்களா சாசனம் செய்வதில் மற்றுள்ள ஆழ்வார்களுக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டிலும், மிகுதியான பரிவு மிகப்பெரிய அளவில் இருந்ததினல், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் காரணச் சிறப் புப்பெயர் ஏற்பட்டது.

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர் வத்தளவு தான் அன்றிப்—
பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான்
பெற்றுன்,
பெரியாழ்வார் என்னும் பெயர்!

வேதத்துக்குப் பிரணவமாகிய ஓங்காரம் எங்ஙனம் முதன்மையாகவும் சுருக்கமாகவும் மங்களமாகவும் அமைந்துள்ளதோ, அதுபோல ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களுக்கெல்லாம், பெரியாழ்வார் பாடியருளிய திருப் பல்லாண்டு முதன்மையும் சுருக்கமும் மங்களமும் அமைந்து, அவற்றிற்கெல்லாம் முதன்மை யான தாகத் திவ்வியப்பிரபந்தத்தின் தொடக்கத்திலேயே சிறப்பாக அமைந்து திகழ்கின்றது. ஆழ்வார்களில் பெரியாழ்வாருக்கு ஒப்பாக ஒருவரும் இல்லே. அது போல் திருப்பல்லாண்டுக்கு ஒப்பான நூலும் வெறென்று இல்லே.

## ஆண்டாளும், மதுரகவியும், இராமாநுசரும் :

இத்தகைய சிறப்புமிக்க பெரியாழ்வாரின் திருமகளார் ஆகிய ஆண்டாள் திருவாடிப்பூரத்தி லும், நம்மாழ்வாருடைய குணப்பெருங் கடலில் ஆழ்ந்து திளேத்து இன்புற்ற மதுரகவியாழ்வார் சித்திரைமாதத்துச் சித்திரையிலும், அனேவரும் உய்ய உதித்த எதிராஜர் ஆகிய இராமாநுஜர் சித்திரைத் திருவாதிரையிலும் தோன்றி அருளி னர். ஆண்டாளுக்கு ஒப்பில்லாமைபோல, அவர் அவதரித்த திருவாடிப்பூரத்திற்கும் ஒப்பில்லே. **ஆண்டாள்,** "அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்த் தோன்றியவர்" ஆழ்வார்கள் தம் செயலே விஞ்சி நிற்கும் தன்மையள், இளமையிலேயே முதிர்ந்த பக்திஞானங்கள் கைவரப்பெற்று பிஞ்சாய்ப்பழுத் தவள், அவளேப் பக்தியுடன் நாளும் வழுத்துவது நமது கடமையாகும்.

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலே விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப், —
பிஞ்சாய்ப்
பழுத்தாளே, ஆண்டாளேப், பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து.

திருவெட்டெழுத்தாகிய திருமந்திரத்தின் இடை யில் உள்ள நம என்னும் பதம் போல, மதுர கவியாழ்வார் செய்தருளிய "கண்ணிநுண் சிறுத் தாம்பு" என்னும் திவ்வியப்பிரபந்தம் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களின் நடுவே முன்னேர்களால் அதன் சிறப்புக் கருதிச் சேர்க்கப்பட்டுத் திகழ் கின்றது.

வாய்த்ததிரு மந்திரத்தின் மத்திமம்
ஆப்பதம்போல்
சீர்த்த மதுரகவி செய் செயலே — ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள், அருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து

## எம்பெருமானர் :

ஆழ்வார்களின் பெருமையையும், அவர்கள் அருளிச் செய்த திவ்வியப்பிரபந் தங்களின் சிறப் பினேயும், நாத முனிகள் முதலாகிய நம்முடைய ஆசாரியர்களேத்தவிர அறியவல்லவர்கள் யாரும் இல்லே.

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?
அருளிச் செயலே அறிவார் ஆர்? — அருள்பெற்ற
நாத முனிமுதலாம் நம்தே சிகரை அல்லால்,
பேதைமன மே! உண்டோ? பேசு—

நம்முடைய ஆசாரிய பரம்பரையில், நாத முனிகள் முதலாக இருந்த ஆசாரியர்கள் எல் லோரும் திவ்வியப் பிரபந்தங்களின் அரிய பெரிய பொருள்நலங்களே ஒராண் வழியாகவே உப தேசித்து வந்தனர். ஆனல் அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எதிராஜராகிய எம்பெருமானர் (இராமாநுஜர்), தம்பேரருளின் திறத்தால், அடியார்களேயெல்லாம் விளித்து அறைகூவி, இப் பொருள் நலங்களேக் கேட்க ஆசையுடையவர்கள் எல்லோருக்கும் இவற்றை உபதேசியுங்கள் என்று கட்டளேயிட்டு, முன்னேர்கள் வைத்துக் கொண் டிருந்த ஒரு வரம்பினே அறுத்துப் போக்கி விட்டார்.

ஓர் ஆண் வழியாய் உபதேசித் தார் முன்னேர்!
ஏரார் எதிராசர் இன்னருளால், — பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆசிரியர்காள்
கூறும்என்று,
பேசி வரம்பறுத்தார் பின்.

இங்ஙனம் இந்த ஸ்ரீவைஷ்ணவமாகிய தரிச னத்தை இராமாநுஜராகிய எம்பெருமானர், வளர்த்துப் பரப்பிய செயலின் மாட்சிமையை யாவரும் அறிந்து வியந்து போற்றுவதற்காகவே, இத் தரிசனத்திற்கு "எம்பெருமானர் தரிசனம்"

என்று நம்பெருமான் (திருவரங்கநாதர்), இந்தக் கொள்கைக்குப் பெயரிட்டு வழங்கும்படி நிலை பெறுவித்தார்.

> எம்பெரு மானார் தரிசனம் என் றேஇதற்கு
> நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்; — அம்புலியோர்
> இந்தத் தரிசனத்தை எம்பெருமா னார்வளர்த்த
> அந்தச் செயல் அறிகைக் கா!

## திருவாய்மொழி உரையாசிரியர்கள் :

திருக்குருகைப்பிரான்பிள்ளான், நஞ்சீயர், பெரிய வாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, வாதி கேசரி அழகிய மணவாளச்சீயர் ஆகிய ஐந்து பெரும் சான்றோர்களும், நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி என்னும் தமிழ் வேதத்தினைத் தம்முடைய விரிவுரைகளினாலே காத்தருளிய பெரி யோர்கள் ஆவார்கள். இவ்வைந்து பெருமக்களும் திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் இயற்றி யருளி யிருக்காமற் போனால், அந்தோ! திருவாய் மொழியின் பொருளைத் தேர்ந்து உரைக்கவல்ல வர்களாக இக்காலத்தில் ஒருவரும் இருக்க மாட்டார்,

> பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச் சான்பிள்ளை
> தெள்ளார் வடக்குத் திருவீதிப் — பிள்ளை
> மணவாள யோகிதிரு வாய்மொழியைக் காத்த
> குணவாளர் என்றுநெஞ்சே கூறு.

தெளிந்த ஞானத்தை உடையவராகிய திருக் குருகைப் பிரான்பிள்ளான் என்பவர், தம் ஆசிரி யராகிய இராமானுஜரின் திருவருளால் திருவாய் மொழிப் பொருளை விளக்கி அருளிச் செய்த வியாக்கியானம், ஆறாயிரப்படி என்பதாகும். ஒற்றுநீக்கி 32 எழுத்துக்கள் கொண்டது கிரந்தம் எனப்பெறும். இங்ஙனம் ஆறாயிரம் கிரந்தம் கொண்ட நூலுக்கு ஆறாயிரப்படி என்பது பெயர். இவ்வாறே, நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியும்; வாதி கேசரி அழகிய மணவாளச்சீயர், பன்னீராயிரப் படியும்; நம்பிள்ளையின் ஆணைப்படி பெரிய வாச்சான் பிள்ளை இருபத்து நாலாயிரப்படியும்; வடக்குத் திருவீதிப்பிள்ளை முப்பத்தாயிரப்படியும், முறையே இயற்றியருளினர்.

இவர்களின், "வியாக்கியானச் சக்கரவர்த்தி" என்னும் விழுப்புகழ்பெற்ற பெரியவாச்சான்பிள்ளை என்பவர், திருவாய்மொழிக்கு மட்டுமன்றி, மற்று முள்ள திவ்வியப் பிரபந்தங்களுக்கும் கூட, விரி வான வியாக்கியானங்கள் அருளிச் செய்துள்ளார். அதனாலேயே திவ்வியப் பிரபந்தப் பொருள்களை, இக்காலத்தில் யாவரும் அறிந்து கற்று மகிழும் வாய்ப்பு ஏற்படுவதாயிற்று.

வேதாந்த முனிவர் என விளங்கியிருந்த நஞ்சீயர், திருப்பாவைக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் மட்டுமே, வியாக்கியானங்கள் செய்தருளினர். பிள்ளை லோகாசாரியருடைய தம்பியாராகிய அழகியமணவாளப் பெருமாள்நாயனர், திருப்பா வைக்கும், அமலனாதி பிரானுக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வியாக்கியானம் செய்து அருளினர். வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் மூவாயிரத்தில் திருவிருத்தம் ஒன்றுக்கே உரை யிட்டருளினர்.

திருவாய்மொழிக்கு ஐந்து பெருஞ்சான்றோர் கள், வியாக்கியானங்கள் இயற்றினர். ஆயினும் ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்னும் வியாக்கியானமே, இப்பொழுது பரவலாகப் போற்றிப் பயின்று வரப்பெறுகின்றது. நம் பிள்ளையின் உபந்நியாசங் களைக் கேட்டு, அவற்றை வடக்குத்திருவீதிப் பிள்ளை பட்டோலைகொண்டு, ஈடு முப்பதத்தாறா யிரப்படி என்னும் நூலாக்கி முடித்து, நம் பிள்ளையின் திருமுன்பு கொண்டு போய் வைத் தருளினர். அதனைத் திருவரங்கர் மூலமாக நம் பிள்ளையிடமிருந்து, சிறியாழ்வான் அப்பிள்ளை என்னும் ஈயுண்ணி மாதவப் பெருமாள் என் பவர், கிடைக்கப்பெற்றார்.

அவர் தம்முடைய திருக்குமாரர் பத்மனாபப் பெருமாளுக்கும், அவர் அதனை நாலூரர்ப் பிள்ளை என்பவருக்கும், அவர் தம் திருக்குமாரரான நாலூராச்சான் பிள்ளைக்கும் வழங்கினர். அந்த நாலூராச்சான் பிள்ளையே, பின்னர் அனைவருக் கும் உபதேசித்தருளினர்.

## பிள்ளை லோகாசார்யர் :

பெரியவாச்சான் பிள்ளை இயற்றிய இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானத்திற்கும், வடக்குத் திருவீதப் பிள்ளை இயற்றிய ஈடுமுப்பத்தாறாயிரப் படி வியாக்கியானத்திற்கும், மூலகாரணமாக இருந்தவர், லோகாசாரியர் என்பவர், நம்பெரு மாள் நம்மாழ்வார் நஞ்சீயர் என்றாற் போல, லோகாசாரியருக்கு அவர் தம் அளப்பரும் பெருமை பற்றி, நம்பிள்ளை என்னும் சிறப்புப் பெயர் ஏற் பட்டது.

> நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
> என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்; — அன்புடையோர்
> ஏத்துதிரு நாமங்கள் தாம் என்று நன்னெஞ்சே
> ஏத்ததனைச் சொல்லிநீ இன்று.

கந்தாடை தோழப்பர், தம் அன்பின் மிகுதி யால், நம் பிள்ளையினை "இவர் என்ன லோகா சாரியரோ?" என்று வியந்து வினவி மகிழ்ந் தார். அதனால் நம்பிள்ளைக்கு லோசாரியர் என் னும் சிறப்புப் பெயர் வழங்குவதாயிற்று.

தமது குருவாகிய நம்பிள்ளையின் லோகா சாரியர் என்னும் பெயரையே, வடக்குத் திருவீதிப் பிள்ளைத் தம்முடைய புதல்வருக்கு வைத்து மகிழ்ந்தார். அதனால் முடும்பைக்குல திலகரான வடக்குத் திருவீதிப் பிள்ளையின் புதல்வருக்கு, பிள்ளை லோகசாரியர் என்னும் திருட்பெயர் அமைந்தது. இப்பிள்ளை லோகாசாரியர் இயற்றிய நூல்களுள் "சீர்வசனபூடணம்" என்னும் நூல், மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்நூலின் சிறப் புக்கு இணையான மற்றொரு நூல் எதுவும் இல்லை.

## சீர்வசனபூடணம் :

தொல்லாசிரியர்கள் அருளிச் செய்த திருமொழிகளையே பெரும்பாலும் சேர்த்து, கல்வியிற் சிறந்த அறிஞர்களின் ஆன்மாவுக்கு அழகிய அணிகலனுகச் "சீர்வசனபூடணம்" என்னும் நூலைப் பிள்ளை லோகாசாரியர் அருளிச் செய்தார். அவர் அருளிய சீர்வசனபூடணம் என்னும் நூலின் ஆழ்ந்த பொருள்கள் எல்லாவற்றையும், அறிய வல்லவர்கள் இல்லை. அதன் கண் பணிக்கப்பட்டவற்றைக் கடைப்பிடிக்க வல்லவர்களும் இல்லை. யாரோ ஓரிருவர்தாம் அந்நூலின் நுண்பொருள்களை அறியவும், அறிந்தவற்றைக் கடைப்பிடிக்கவும் இருத்தல் கூடும். அஃது எல்லோராலுமே அறியவும் கடைப்பிடிக்கவும் இயலாத அரும் பெரும் நூல் ஆகும்.

ஆர்வசன பூடணத்தின் ஆழ்பொருள்எல்
லாம்அறிவார்?
ஆர் அதுசொல் நேரில் அநுட்டிப்பார்?—
ஓர் ஒருவர்
உண்டாகில் அத்தனைகாண் உள்ளமே!
எல்லார்க்கும்
அண்டாத தன்றோ அது?

ஆயினும், உய்ந்து ஈடேற வேண்டும் என்னும் விருப்பம் உடையவர்கள், அந்நூலின் ஆழ்ந்த பொருள்களை ஒரு முகமாகப் பயின்றுணர்ந்து, அந்நூற்பொருளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் கடமையாகும். ஆசிரியர்பால் கேட்ட சிறந்த பொருள்களை மறவாமல் ஊன்றி மனத்தில் பதித்துக் கடைப்பிடிக்க வல்லவர்கள் இந்நூலைக் கற்றுணரப் பெரிதும் முயலுதல் வேண்டும். சீர்வசனபூடண நூலுக்கு, நல்ல மரபு நெறியில் பற்பல விரிவுரைகளும் விளக்கவுரைகளும் ஏற்படுதல் கூடும். அவற்றையும் அறிவுடையார் அனைவரும் பயின்றுணரக் கடமைப்பட்டவர் ஆவர். சீர்வசன பூடணத்தின் செம்பொருளைச் சிந்தையினுற் சிந்தித்தாலும், வாயினுல் எடுத்துப் பிறர்க்கு விளக்கிக் கூறினுலும், அஃது அப்பொழுதைக்கப்பொழுது ஆரா அமுதம் என மிகப் பெரிய ஆனந்தத்தை விளைவிக்கும். ஏனெனில், அதன்கண் அரிய பல அற்புதமான பொருள்கள் அழகுற விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

(1) தன்னுடைய குருவின் திருவடிகளில் அன்பில்லாதவர்கள், திருமகளின் கேள்வனை திரிமாலின்பால் அன்பு செலுத்தினுலும், அவர்களுக்குத் திருமால் பரமபதம் கொடுக்க விரும்ப மாட்டான். ஆசாரிய பக்தியற்றவர்கள் ஒருபோதும் வைகுந்தம் போக மாட்டார்கள்.

தன்குருவின் தாளிணைகள் தன்னில்அன்
பொன்றில்லாதார்,
அன்புதன்பால் செய்தாலும் அம்புயைகோன்,—
இன்பமிகு
விண்ணுடு தான்அளிக்க வேண்டியிரான்;
ஆதலால்
நண்ணுர் அவர்கள்திரு நாடு.

(2) ஞானம் அநுட்டானம் என்னும் இரண்டையும், குறையற நிரம்பப் பெற்ற குருவை அடைந்து பணிந்தால், திருமகள் கேள்வனுகிய திருமால் அவர்களுக்குத் தானுகவே வைகுந்த நாட்டை வலிந்து வந்து கொடுப்பான்.

ஞானம் அநுட் டானமிவை நன்ருக
வேயுடையன்
ஆன குருவை அடைந்தக்கால்—மாநிலத்தீர்
தேனுர் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும்.

(3) உலகமக்களே! நீங்கள் உய்தி பெற வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் உங்கள் ஆசாரியர்களின் திருவடிகளிலேயே அன்பு செலுத்துங்கள். அங்ஙனம் செலுத்தினுல், பையரவில் பள்ளி கொள்ளும் பெருமாளின் பரமபதம், உங்களுக்கு உள்ளங்கையிலுள்ள நெல்லிக் கனி போல, மிகவும் எளிதாகக் கிடைக்கும்.

உய்யநினை வுண்டாகில் உம்குருக்கள்
தம்பதத்தே
வையும் அன்பு தன்னைஇந்த மாநிலத்தீர்! —
மெய்யுரைக்கேன்!
பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்
கை இலங்கு நெல்லிக் கனி.

(4) ஆசாரியர் செய்தருளுகின்ற பேருதவியை நாம் உள்ளவாறு எண்ணித் தெளிந்து கொள்வோமாயின், அவ்வாசாரியனைப் பிரிந்து வேறு ஓர் இடத்தில், உறைவதற்கு நம் மனம் விரும்பாது.

(5) தன் ஆசாரியனுக்குச் சீடனுகிய தான் தொண்டு புரியும் செயல், அவ்வாசாரியன் இவ்வுலகில் எழுந்தருளியிருக்கும் வரையிலேயே இயலும். அதனை அறிந்து வைத்தும், ஆசாரியனுக்குப் பணி விடை செய்வதன் இன்சுவையும் நற்பேறும் உணராதவர்களே, ஆசாரியனைப் பிரிந்து வேறெங்கேனும் இருப்பார்கள். அறிந்தவர்களோ, ஆசாரியனை ஒரு கணமும் பிரியாமல், அடிதாறும் நிழலும் போல ஆசாரியனைச் சிறிதும் பிரிவின்றி ஒன்றி உடனுகவே இருந்து இன்புறுவார்கள்.

(6) ஆசாரியன் சீடனின் ஆருயிரைப் பேணிக் காப்பாற்றக் கடமைப் பட்டவன்; சீடனே ஆசாரியனின் திவ்விய மங்களத் திருமேனியைப் போற்றிப் பாதுகாக்கும் கடமையுள்ளவன். இதனைச் சீர்வசன பூடணம் முதலிய நூல்களின் மூலம் கேட்டறிந்து வைத்திருந்தும், அவ்வழியில் ஒழுகுதல் பெரும் பாலோர்க்கு அரியதாகவே இருக்கும்.

(7) பின்பழகிய பெருமாள் சீயர் என்பவர். பரமபத வாழ்க்கையிலும் விருப்பம் இன்றி, மிக்க பரம பக்தியோடு, தம்முடைய ஆசாரியரான நம்பிள்ளைக்கு அடிமைப் பணி விடைகள் செய்து மகிழ்ந்திருந்தார். அவரைப் போல நாம் ஒவ்வொருவரும் நம் ஆசாரியருக்குப் பணி விடைகள் செய்தொழுகக் கடமைப்பட்டுள்ளோம். பின் பழகிய பெருமாள் சீயரைப் போல, அவ்வளவு

பெரிய நிலையில் ஆசாரியருக்குப் பணிவிடைகள் செய்ய நம்மால் இயலாமற் போயினும், அவரது ஆசாரிய பக்தியையும் பணி விடைத் திறங்களை, நாம் பல்கால் சிந்தித்துப் போற்றிப் பாராட்டி மகிழ்தலாவது செய்தல் வேண்டும். அதுவே நாம் உய்ந்து ஈடேறுதற்கு உற்ற துணையாக அமையும்.

*(8)* முற்காலத்தில் வாழ்ந்த ஆசாரியர்கள், அனைவரும் கடைப்பிடித்து ஒழுகிய ஆசார சீல அருமைப் பாடுகளை அறியாதவர்கள், அவைகளைத் தம் மனம் போனபடி பல வகையாகப் பேசிப் பிதற்றுவர். அவைகளைக் கேட்டு மனம் திரிந்து, நாம் வீணே கெட்டொழியாமல், நம்முடைய முன்னோர்களாகிய ஆசாரியர்களின் நல்லொழுக்கங்களையே கடைப்பிடித்து ஒழுக, நாம் பெரிதும் முயலுதல் வேண்டும்.

*(9)* உலகத்திலுள்ள மக்கள், நாத்திகர், ஆத்திகர், ஆத்திக நாத்திகர் என மூவகைப் படுவர். சாத்திரங்களைக் கல்லாமல், தான் தோன்றியாக மனம் போன போக்கெல்லாம் திரிகின்றவன், நாத்திகன் எனப்படுவான். உயர்ந்த சாத்திரங்களை உள்ளவாறு கற்றுணர்ந்த, நன்னெறியில் நின்று ஒழுகும் நல்லவர்கள், ஆத்திகர்கள் எனப்படுவர். சாத்திரங்களை இசைந்து கற்றுத் தேர்ந்திருந்தும், அவற்றின் படி ஒழுகாமல் தன்னிச்சைப்படி தீநெறியிற் செல்பவன் ஆத்திக நாத்திகன் எனப்படுவான். இம்மூவரில் முன்னவனையும் பின்னவனையும் புறக்கணித்து விட்டு, இடை நிற்கும் நல்லவனாகிய ஆத்திகனையே, நாம் எப்போதும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

*(10)* நல்ல மணமுள்ள ஒரு பொருளைச் சேர்ந்திருக்கும் பொருளுக்கும்கூட, அந்த நல்ல மணம் சேர்க்கையினால் ஏற்படும். அது போல நல்ல குணமுடையவர்களைச் சேர்ந்தால், நமக்கும் அவர்களின் நல்ல குணங்கள் ஏற்பட்டு, அதனால் நாம் பல நன்மைகளை அடையலாம்.

*(11)* நாம் நல்ல குணமுள்ளவர்களே யாயினும், தீய குணமுள்ளவர்களின் பால் சேர்ந்து ஒழுகினால், நம்மிடமுள்ள நல்ல குணங்கள் அழிந்து, தீயவர்களின் தீய குணமே நமக்கும் ஏற்பட்டு, அதனால் பல தீங்குகளை அடைந்து வருந்த நேரும்.

*(12)* ஒரு நூலின் பொருளை நம்மிலும் சிறந்த கல்வி கேள்வி அறிவுள்ள முன்னோர்கள் பால் முறைதப்பாமல் கேட்டுணர்ந்து, அதனை மேலும் சிந்தித்து ஆராய்ந்து தெளிந்து, அப்பொருளை உள்ளது உள்ளவாறே நாம் பிறருக்கு எடுத்துக்கூற வேண்டுவது நமது கடமை. இங்ஙனமின்றித் தமக்குத் தமக்குத் தோன்றிய வாறெல்லாம் அந்நூற் பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மனம் போனவாறு பிறருக்குச் சொல்லி, இது தான் முன்னோர்கள் கூறி வைத்த பொருள் என்று பொய்கூறி ஒழுகுபவர்கள், மிகவும் இழிந்த தீயமூர்க்கர்கள் ஆவார்கள். அத்தகைய மூர்க்கர்கள்பால் நாம் நெருங்குதலும் கூடாது.

*(13)* தொல்லாசிரியர்களுடைய ஞானம் நல்லொழுக்கம் முதலியவற்றை, எடுத்துரைத்துப் புகழ்ந்து விளக்குகின்ற அறிஞர் பெருமக்களின் திருமொழிகளால், தெளிவு பெற்று, நமக்கு நல்ல நிலை நல்கக் கூடிய சிறந்த ஆசாரியனை அடைந்து, அவர் தம் அடி பணிந்து, அவர் திருவுள்ளம் உவக்கும்படி பணிவிடைகள் செய்து ஒழுகினால், இவ்வுலகில் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்னும் நிலையில், நாம் பெரிதும் இன்பமுற்று மகிழ்ந்து வாழலாம்.

## முடிவுரை :

இத்தகைய சிறந்த பல பொருள்கள் செறிந்த உபதேச ரத்தினமாலை என்னும் இந்நூலை, நாள் தோறும் ஓதிச் சிந்தையிற் சிந்தித்து ஆழ்ந்து தெளிபவர்கள், நமக்கெல்லாம் எந்தையாகிய எதிராஜர் என்னும் எம்பெருமானார் (இராமாநுஜர்) திருவருளை நிறைவுறப் பெற்று, இவ்வுலகில் ஒரு குறைவுமின்றி இகபர சௌபாக்கியங்களை அடைந்து சகல செல்வயோகம் மிக்க பெரு வாழ்வில் வாழ்வார்கள்.

ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல்வாழி!
தாழ்வாதும் இல்குரவர் தாம்வாழி! ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி!
செய்யமறை தன்னுடனே சேர்ந்து

— மணவால மாமுனிவர். உபதேச ரத்தினமாலை



# பதினாறு பெற்ற பெருவேழன்

ஷோடச கணேசன்

1. பால கணபதி: இளஞ்சூரியனைப் போன்ற செவ்வொளிச் செல்வன். குழந்தை பாவம். "பல கணதிபன்" என்றும் சொல்லும்படியாக மா, பலா, கதலி என்ற முக்கனிகளையும், கரும்பையும் நாற்கரங்களில் தரித்திருக்கிறான் பால கணதிபன். அத்தனை தித்திப்பு இதயன் என்று அர்த்தம்.

2. தருண கணபதி: சிசுப் பருவம் தாண்டிய இளைஞன். அருணோதயத்தில் ஆகாசத்தே காணும் ஆழ் சிவப்பு வர்ணன். எண் கரத்தான். அவற்றில் பாசம், அங்குசம், அப்பம், விளாம்பழம், நாவல் பழம், தனது கொம்பில் ஒன்று, நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைக் கொண்டிருப்பான்.
சக்தியின் தேக ஸம்பந்தமின்றி ஸ்கந்தன் சிவனிடம் உத்பவித்தானெனில், சிவ ஸம்பந்தமின்றி சக்தியிடமே உதித்தவன் விநாயகன். எனவே ஈச்வரனுக்கு மாற்று அச்சாகத் தன் வலப் பாகத்தில் பெண்ணாகவும், இடப் பாகத்தில் ஆணாகவும் இருப்பவன். இதனால்தான், பெண் யானைக்குக் கொம்பு கிடையாதாகையால் வலப்புறத்தே விக்நேச்வரனின் தந்தம் உடைந்திருக்கிறது. தானே இரு பாலுமானதால் தன்னிடம் காமமே இருக்க முடியாது என்று காட்டத்தான், சீரிளமைப் பருவத்தில் அந்த உடைந்த தந்தத்தை வலக்கையில் ஏந்தி உலகுக்குக் காட்டுகிறான்.

3. பக்த கணபதி: "விக்நேச்வரன்" எனில் விக்னங்களின் ஈச்வரன் என்பதே நேர்ப் பொருளாயினும் விக்னங்களைப் போக்கும் ஈச்வரன் என்றே அர்த்தம் செய்து கொள்வது போல, பக்த கணபதி என்றால் பக்தனாக இருக்கிற கணபதி என்று பொருள் கொள்ளாமல், பக்தரைப் பாலிக்கும் கணபதி என்றே கொள்ள வேண்டும். "பக்த" என்றால் "பற்றுள்ள" "பக்குவமான", "பிரிவுபட்ட" என்றெல்லாமும் அர்த்தம் கொள்வதுண்டு. பிரஸித்தி பெற்ற "சுக்லாம்பரதரம்" ச்லோகத்தில் "சசி வர்ணம்" என்றபடி, நிலவென வெண்மையாக இருப்பவரிவர். சதுர் புஜங்களில் தேங்காய், மாங்கனி, வாழைப்பழம், பாயஸ பாத்திரம் முதலியவற்றைத் தாங்கும் இனியவர்.

4. வீர கணபதி: பொதுவாகப் பிரஸன்ன வதனர், ஸுமுகர் எனப்படுகிற அன்பு முகத்தர், வீராவேசத்தில் ரௌத்ராகாரமாகச் சிவந்திருக்கிறார். தம் கரத்திலொன்றில் ஒரு வேதாளத்தையே வேறு பிடித்திருக்கிறார்! ஷோடச கணபதியருள் இவர் ஷோடச கர (பதினாறு கர) கணபதியாயுள்ளார். மற்ற பதினைந்து கைகளில் வேல், அம்பு, வில், சக்ரம், கத்தி, கட்வாங்கம் எனும் நுனியில் கபாலம் பொருந்திய குண்டாந்தடி, சம்மட்டி, கதை, அங்குசம், பாம்பு, பாசம், சூலம், ஈட்டி, கோடாரி, கொடி ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார்.

5. சக்தி கணபதி: "நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை" என்று சிவனாரைத் தேவாரம் கூறுவது போல், ஸ்திரீ ஸங்கத்திலேயே பிரம்மசர்யம் காக்கும் அதிசய ரூபங்கள் நம் ஆனைமுக அண்ணலுக்கும் உண்டு. அவற்றில் இது ஒன்று. அந்தி வானின் ஆரஞ்சு வர்ணரான இவரும், பச்சை நிறத்தவளான இவரது சக்தியும் பரஸ்பரம் இடையைச் சுற்றிக் கையால் அணைந்தவர்களாக அமர்ந்த கோலம் கொண்டிருப்பர். வேறிரு கைகளில் பாச, அங்குசம் தாங்கியிருப்பார். நாற்கரத்தரான இக் கரிமுக வரதனின் பிறிதொரு கை அபயமளிக்கும்.

6. த்விஜ கணபதி: உபநயனத்தில் பெறும் பிரம்மோப தேசத்தின் மூலம் காயத்ரீ மாதாவுக்கு மகனாக மறுபிறப்புக் கொண்டு வேதப் பயிற்சிக்குத் தகுதிபெறும் பிராம்மண, க்ஷத்ரிய, வைச்யர்களுக்கு "த்வி–ஜர்" எனப் பெயர். "இரு பிறப்பாளர்" என்பது இதன் நேர் தமிழாக்கம். இவர்களால் விசேஷமாக ஆராதிக்கப் பெறும் த்விஜ் கணபதி மிகவும் பொருத்தமாகச் சுவடி, ஜபமாலை, தண்டம், கமண்டலு ஆகியவற்றைத் தாங்கி வித்யையையும், வைராக்யத்தையும் உருவகிக்கிறார். வித்யா தேவியான வாணி போலவே நிலவாக வெளுத்தவர். அது மட்டுமல்ல. வாணி காந்தனான பிரம்மனைப் போல் 4 முகம் படைத்தவருமாவார். நாலும் யானை முகத்தான்! ("த்வஜ கணபதி" என்றும் இவர் வழங்குகிறார். ஆனால் கையில் கொடி தாங்காத இவர் எப்படி "த்வஜ" கணபதியாக முடியும்? "த்விஜ" என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.)

7. ஸித்தி கணபதி: பொதுவாக ஸித்தி புத்தி ஸமேத விநாயகர் என்கிறோமல்லவா? விநாயகரது அறிவு புத்தி என்ற பத்னியாகவும் ஆற்றல் ஸித்தி என்ற பத்னியாகவும் பேசப் படுகின்றன. இங்கே ஸித்தி ஸமேதராகத் தரிசனம் தருகிறார். நன்கு கனிந்த மாம்பழம், பூச்செண்டு, கரும்பு, கோடரி இவற்றை நாற்கரங்களில் கொண்ட இவர் ஐந்தாவது கரமானது துதிக்கையில் எள்ளுப் பூரணம் கொண்ட மோதகத்தை வைத்திருக்கிறார். மாவுக்குள் மதுர பூரணம் மறைந்திருப்பது போல் ஒவ்வொருவருள்ளும் பூரணப் பொருள் இனிக்க உள்ளது என்று காட்டுவதே விநாயகரது கரத்திலுள்ள மோதகத்தின் பொருள். மோதகம் என்றால் ஆனந்தம் என்று அர்த்தம். எள்ளுள் எண்ணெய் போல்ஸித்தியின் உள்ஆற்றல் தனதே என்று காட்டவே இங்கு எள்ளுப் பூரணம் போலும்!

8. உச்சிஷ்ட கணபதி: "உச்சிஷ்ட கணபதி உபாஸனே" என்பதாக மிகவும் போற்றிக் கட்டுக் காப்புடன் பின்பற்றப்படும் கணபதியிலிருந்து, ஷோடச கணபதியரிடை வரும் இந்த உச்சிஷ்ட கணபதி மாறுபட்டவர். கருநீல வண்ணரான இவர் நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெற் கதிர், பாசம், அக்ஷமாலே முதலியவற்றைக் கைக் கொண்டவர்.

9. விக்ன கணபதி: முன்னமே சொன்னற் போல், விக்ன கணபதி எனினும் இவர் விக் னத்தை உண்டாக்குபவரல்ல, அழிப்பவரே. உருக்கிய பொன் போன்ற நிறத்தரான இவர் பொன்மணி பூஷணங்களும் நிறைய அணிந்த வர். இவரது பத்துக் கரங்களில் விளங்கும் சங்கு, கரும்பு வில், மலரம்பு, கோடரி, பாசம், சக்கரம், தந்தம், அங்குசம், பூச்செண்டு (அல்லது தளிர்க்கொத்து), நாணல் (அல்லது அம்பு) இவையும் இவருக்கு அணிகள் போலவே சோபை யூட்டும்.

10. க்ஷிப்ர கணபதி: வெகு விரைவே அருள் புரிவதால் "ரக்ஷிபரர்" எனப் படுபவரிவர். தந்தம், கற்பகக் கொடி, பாசம், அங்குசம் இவற்றை நாற் கரங்களிலும், ரத்ன கும்பத்தைத் துதிக் கையிலும் ஏந்திய இம்மூர்த்தி செம்பருத்தி எனச் சிவந்தவர்.

11. ஹேரம்ப கணபதி: பொதுவாக ஐங் கரனுக உள்ள பிள்ளையாரப்பன் சிவனுரைப் போலவே ஐந்து முகத்தவராக, தச கரங்களோடு விளங்குகிறுர். சிவபெருமானைப் போலவே இவர் வெள்ளை வண்ணர். அம்பிகையைப் போல சிம்ம வாஹனத்தில் வீற்றிருப்பவர். அபயம், வரதம், பாசம், தந்தம், அக்ஷமாலே, அங்குசம், கோடரி, சம்மட்டி, மோதகம், பழம் ஆகியன இவரது கைகளில் திகழ்கின்றன. "பஞ்ச மாதங்கன்", "வெள்ளை வாரணம்" என்றெல்லாம் சொல்வது குறிப்பாக இந்த ஹேரம்ப விநாயகனரத்தான்.

12. லக்ஷ்மி கணபதி: பச்சைக்கிளி, கொய்யாக் கனி (அல்லது மாதுளே), அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கத்தி, இவற்றைத் தனது அறு கரங்களிலும், மாணிக்க கும்பத்தைத் துதிக் கையிலும் தாங்கிய இவரும் வெண்ணிற ஜோதி நிறமானவர். அமுதப் பெருக்கில் நனேந்தவர். இவரை இரு மருங்கும் தேவியர் இருவர் அணைந் திருப்பர். சியாமள நிறங்கொண்ட அத்தேவி மார் ஒரு கரத்தால் வரமருளுவர்; பிற கரத்தில் தாமரை தாங்கியிருப்பர்.

13. மஹா கணபதி: விசேஷமாக உபாஸிக்கப் படும் விநாயக மூர்த்தம் மஹா கணபதிதான். லக்ஷ்மி — திருமால்; பார்வதி — பரமேசன், ரதி — மன்மதன், பூதேவி — பூவராஹர், வல்லபை — விநாயகர் என்ற ஐந்து தம்பதி யரும் இவருள் அடக்கம். இதற்கேற்ப லக்ஷ்மி யின் கமலம் — திருமாலின் சக்கரம், பராசக்தி யின் பாசம் — சிவனின் சூலம், ரதியின் உத் பலம் — மதனனின் கரும்பு வில், பூமா தேவி யின் நெற்கதிர் — பூவராஹரின் கதை, விநாயக சக்தியான வல்லபையைக் குறிக்க தந்தம் — விநாயகருக்கே விசேஷமான கொழுக்கட்டை முதலியவற்றை எதிரெதிர்க் கரங்களில் தரிக்கிறுர். விசேஷ வல்லமை வாய்ந்த இவர் வல்லபையை அணேந்து விளங்குபவர். அவளது கரகமலத்தில் ஒரு கமலம் மிளிரும். பரமேச்வரனைப் போலவே முடியில் பிறைமதியும், நுதலில் மூன்ருவது கண் ணும் கொண்ட இவர் துதிக்கையில் தாங்கி யுள்ள ரத்ன கலசத்திலிருந்து உலகுக்கெல்லாம் வளமையை வாரிச் சொரிவார். அருண வர்ணம் படைத்த கருணை வாரணர்.

14. விஜய கணபதி: இவரும் சிவந்தவரே. மூஷிக வாகனராக நாற்கரங்களில் பாச, அங்கு சமும், தந்தமும், மாம்பழமும் கொண்டு விளங்கு பவர். பெயரிலிருந்து வெற்றி தரும் ஆற்றல் கொண்டவர் என்று புரிந்து கொள்ளலாம். மாம் பழத்துக்குப் பதில் மோதகத்தோடு கூடினவ ராக, இந்த சதுர்புஜ மூஷிக வாகனரையே நாம் பொதுவாக அனைத்துக் கோவில்களிலும் தரிசிக் கிறேம். (இப்படி வெகுவாக வணங்கப்படும் மூஷிக வாகன — மோதக ஹஸ்தர் ஷோடச கணபதியரில் நேராக வரவில்லை. இவர் சைவாக மங்களில் பேசப்படும் ஸ்ரீகண்ட ருத்ர குமார விநாயகர் ஆவார்.)

15. நிருத்த கணபதி: ஆனந்த நடனமிடும் அழகு மூர்த்தி. தனது ஆறு கரங்களிலொன்றில் ஆயுதமோ, வேறு பொருளோ தரிக்காமல் அதனை நாட்டிய கதிக்கேற்ப மோதிரம் ஜொலிக்க வளைத்துக் காட்டுபவர். மற்ற ஐங்கரங்களில் பாசம், அங்குசம், அப்பம், கோடரி, தந்தம் இவற்றைக் கொண்டவர். கற்பகத்தருவின் கீழ் விளங்கும் இவர் அற்புத மஞ்சள் நிறத்தவர்.

16. ஊர்த்வ கணபதி: வெண் தாமரை, நெற் கதிர், செந்தாமரை, கரும்பு வில், (புஷ்ப) பாணம், தந்தம், துளிர், கதை இவற்றை ஏந்தும் எண்கரத்தர். பொன்னெனப் பொலி வண்ணர். பச்சை நிறம் வாய்ந்த தேவியை அணைய விழைந்து எழுப்பிய துதிக்கையை உடையவர்.

"ஊர்த்வம்" என்பது உச்சி. மூலாதார அடியாக இருப்பதால் பிருத்வி தத்வமாகவே பெரிதும் பேசப்படுபவர் விநாயகர். இதற் கேற்பவே இவரது மூர்த்தங்கள் பலவற்றில் பூதேவிக்குரிய நெற்கதிரையும், பூவராஹரின் கதையையும் இவர் தாங்கக் கண்டோம். ஊர்த்வ கணபதியிடமும் இவ்விரண்டைக் காண்கிறேம். ஆனல் அவர் பூவுலகோடு நின்று விடாமல், பக்தரையும், இகவுலகோடு நிறுத்தி விடாமல், உச்சியாக, உச்சிக்குத் தூக்கி விடுபவராக இருக் கிறவர் என்று காட்டவே "ஊர்த்வ" என்ற அடைமொழி பெற்றிருக்கிறுர். நமக்கு மேல் நோக்கு அளிக்க வேண்டும் என்பதே போல் ஷோடச மூர்த்தங்கள் ஊர்த்வ கணபதியுடன் பூர்த்தியாகின்றன!

வித்தக விநாயக விரைகழல் சரணே.

# விஷ்ணு பெருமை

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.



சதா கோவிந்த கீர்த்தனம்
கோவிந்த கோவிந்த கோவிந்தா

விஷ்ணு பரமாத்மா, கிருஷ்ண பரமாத்மா, கண்ண பரமாத்மா என்றெல்லாம் பெருமானை அழைக்கின்றோம். பரமாத்மா என்ற சொல் விஷ்ணுவிற்கே தனிப்பட்ட பெயராக விளங்குகின்றது. அவ்வளவு விஷ்ணுவிற்கு மகிமை என்ன என்பதை ஆராய்வோம்:—

மானிடராகப் பிறந்த நாம் நம்முடைய ஆறுவது அறிவினால் இனிப்பிறவாத வரத்தைப் பெற முயலவேண்டும். அப்படி முயலுவதற்கு உறுதுணையாக நாம் ஆறு கர்மங்களைத் தினமும் அனுஷ்டிக்க வேண்டுமென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதாவது:—

1. ஸ்னானம் செய்வது
2. அனுஷ்டானம் செய்வது
3. ஜபம் செய்வது
4. ஹோமம் செய்வது
5. ஆண்டவனைப் பூஜிப்பது
6. அதிதிகளை விருந்தோம்புதல்

## 1. ஸ்நாநம்

திதி, வார, நட்சத்திர, யோக, கரண என்கின்ற ஐந்தையும் சொல்லி சங்கற்பித்து, வருணன் முதலான தெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டு, தீர்த்தத்தில் கொஞ்சத்தை எடுத்து, வலது கையால் புரோட்சித்துக் கொண்டு, பைரவரை நினைந்து பாவத்தைப் போக்கடிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு, கோவிந்தா! கோவிந்தா! என்று சொல்லிக்கொண்டு தீர்த்தத்தில் ஸ்னானம் செய்ய வேண்டும். எந்தக் காரியங்களையும் ஸ்னானம் செய்து கொண்டுதான் ஆரம்பிக்க வேண்டுமென்பது தான் தர்ம சாஸ்திரமாகும். ஒருமுறை ஸ்னானம் செய்தபின் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு தீர்த்தத்தை நோக்கிக்கொண்டு "ஓ கங்கா தேவியே! ஓ யமுனா தேவியே! ஓ கோதாவரி தேவியே! ஓ சரஸ்வதி தேவியே! ஓ நர்மதா தேவியே! ஓ சிந்து தேவியே! ஓ காவேரி தேவியே! நீங்கள் எல்லோரும் இத்தீர்த்தத்தில் எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க வேண்டும். கங்கை விஷ்ணுபரமாத்மாவின் பாதக் கட்டை விரலிலிருந்து பெருகுகின்றது என்று வேதாகமங்கள் கூறுகின்றபடியால் ஸ்னானம் செய்யும் பொழுது விஷ்ணுவை நினைந்து "ஓ விஷ்ணு பரமாத்மாவே! எல்லா உலகையும் காப்பாற்றக் கூடியவனே! சங்கு சக்கரம் கதை இவைகளைத் தரித்திருப்பவனே! உமது புண்ணிய தீர்த்தத்தில் ஸ்னானம் செய்ய எனக்கு சம்மதம் அளிக்க வேண்டும். ஓ கிருஷ்ண பரமாத்மாவே! எல்லாத் தீர்த்தங்களுக்கும் நீதான் மன்னன். நீயே உலகத்தைக் காப்பாற்றும் தந்தை. எல்லா பாபங்களையும் போக்கடிப்பதற்கு உமது பாத கமலங்களிலிருந்து தோன்றுகின்ற கங்கா தீர்த்தத்தை எனக்கு ஸ்னானம் செய்வதற்கு கொடுத்தருள்வாய்!" என்று கூறிக்கொண்டே கோவிந்தா! கோவிந்தா! என்று சொல்லிக்கொண்டு ஸ்னானம் செய்யவேண்டும். இதைத்தான் "கோவிந்தேதி ஸதாஸ்னானம்" என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்படி மனிதன் ஸ்னானம் செய்வதனால் பலம், அழகு புகழ், தர்மம், ஞானம், நீண்ட ஆயுள், சுகம், திருப்தி, பிணியற்ற நிலை, எல்லாவற்றையும் பெறுகின்றானென்று வல்க்ய முனிவர் கூறுகின்றார்.

## 2. அனுஷ்டானம்

சூர்யோதய காலத்தில் ஸ்நாநம் செய்தபின் சூரியனை நோக்கி சிவந்த புஷ்பங்களோடு ஆர்ய நாராயணனுக்கு அர்க்யம் கொடுத்து (இருகைகள் நிரம்பிய தீர்த்தத்தை சூரியனை நோக்கி கொடுத்தல்) சாயா தேவி சமிக்ஞா தேவி என்ற இரு தேவிகளோடு கூடியவனும் பகலை உண்டாக்குபவனும் பயிர்களுக்கு தன் கிரணங்களால் பசுமையூட்டி வளர்ப்பவனும் தன்னை வணங்குபவர்களுக்கு கண்ணொளியையும், பிணியற்ற நிலையையும் கொடுத்து காப்பாற்றுபவனும் ஏழு பெயர்கள் கொண்ட ஒரே குதிரை பூட்டப்பெற்ற ஒற்றைச்சில்லில் அடித்தளமில்லாத ஆகாய மார்க்கத்தில் ஓடுகின்ற காலில்லாத அருணன் என்னும் சாரதியினால் செலுத்தப்படும் தேரில் குறித்த நேரத்தில் குறித்த இடத்தை சோம்பலில்லாமல் கடக்கின்றவனுமான சூரியநாராயண மூர்த்தியை காலையிலும் மாலையிலும் வணங்கி வழிபட வேண்டும். இதையே வேதம் சப்தாஸ்வம்ரம் ஏகசக்ரம் ஏகோ அஸ்வேவஹதி ஸப்தநாமா" என்று யஜுர் வேதமும் "ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத்" என்று தர்ம சாஸ்

திரமும் கூறுகின்றன. இங்கும் விஷ்ணு பர மாத்மா சூர்ய நாராயண மூர்த்தியாக இருந்து நமது பிணியை நீக்கி பாபத்தை போக்கிக் காப்பாற்றுகின்ருர்.

## 3. ஜபம்

கோவிந்தேதிசதா ஜபஹா
கோவிந்த, கோவிந்த, கோவிந்தா.

உலர்ந்த வஸ்த்திரம் தரித்துக்கொண்டு நதிக் கரையிலோ, குளக்கரையிலோ வீற்றிருந்து விஷ்ணு வினுடைய சகஸ்ரநாமம் என்று சொல்லப்படுகின்ற ஆயிரம் திருநாமங்களை பாராயணம் செய்து ஜபிக்கவேண்டும். அச்சுதா, அனந்தா, கோவிந்தா, என்ற நாமங்களை சொல்வதனுல் எல்லாப் பிணி களும் அகல்கின்றன. கேசவனிலும் பார்க்க சிறந்த வனில்லை. இந்த சரீரம் கிழநிலை பெற்று பிணி யுற்று இருக்கும் வேளையில் கங்கை நீர் மருந் தாகவும் நாராயண பரமாத்மா வைத்தியனுகவும் வந்து நம்மைக் காப்பாற்றுகின்ருர் என்று கூறப் படுகின்றது. ஆகையினுலேயே "கோவிந்தேதி சதா ஜபஹா" என்றும் "நதைவம் கேசவாத் பரம்" என்றும் "சரீரே ஜர்ஜரீ பூதே" என்றும் "வியாதிக்ரஸ்தே களேபரே ஔஷதம் ஜாந் நவீதோயம் வைத்யோ நாராயண ஹரிஹி" என்று விஷ்ணு சகஸ்ரநாமம் பலஸ்ருதியில் கூறப்பட் டுள்ளது.

## 4. ஹோமம்

தினமும் அக்னியை பூஜித்து வழிபடவேண் டும். அக்னியில் நாராயண பரமாத்மாவை ஆவாகனம் செய்து ஹோமங்கள் செய்து நம் வறுமை நீங்க அவலினுல் ஹோமம் செய்ய வேண்டும். மேலும் அன்ருடம் நாம் சாப்பிடுவ தால் ஏற்படும் பாவம் நீங்க "வைஷ்வதேவம்" என்று சொல்லப்படுகின்ற அக்னி வழிபாட்டை யும் ப்ரம்மச்சாரிகளுக்கு "சமிதாதானம்" என்னும் அக்னி வழிபாட்டையும் இல்வாழ்வாருக்கு ஔபாசனம் என்னும் அக்னி வழிபாட்டையும் தர்மசாஸ்திரங்கள் வகுத்துள்ளன. இப்படிப்பட்ட அக்கினி வழிபாடு செய்வதனுல் வறுமை நீங்கி அக்கினியின் மூலம் சிறந்த செல்வத்தைப் பெற லாம். இதையே "ஸ்ரியம் இச்சேத் ஹுதாசனுத்" என்றுகூறியிருக்கிருர்கள். அவலை நாராயணனின் நாமத்தைச் சொல்லி அக்னியில் ஹோமம் செய் வதால் நமது வறுமை நீங்கும். கிருஷ்ண பரமாத்மாவுக்கு மிகமிக விருப்பமானது அவல் என்றும் அந்த அவலை கிருஷ்ண பரமாத்மா வுக்கு அளித்த குசேலருக்கு வறுமை நீக்கப் பட்டு அளவிலா செல்வங்கள் கிருஷ்ண பரமாத் மாவால் அளிக்கப்பட்டதென்று குசேலருடைய வரலாற்றிலிருந்து அறியக் கிடப்பதாகும்.

## 5. ஆண்டவனைப் பூஜித்தல்

தினமும் ஒவ்வொருவருக்கும் தெய்வ ஆராதனை இன்றியமையாதது. நமது பூஜையில் சாளக்ராமம் என்று சொல்லப்படுகின்ற விஷ்ணுவின் வடிவத்தை குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், சந்தனம், பன்னீர், பால், தயிர், தேன், நெய், இளநீர் ஆகிய அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்து கடைசியில் அவ்வபிஷேக தீர்த்தத்தை சிறிதள வெடுத்து "விஷ்ணு பாதோதகம் சுபம்" என்று பருக வேண்டும். இதுவே கங்கா தீர்த்தமாகும். இவ்விதம் ஆராதனை செய்து கங்காதீர்த்தத் தினைப் பருகுவதனுல் யமபயம் நீங்கும். இதையே "கங்கா ஜலலவ கணிகாபீதா" சகிர்த்மி ஏனமுராரி சமர்ச்சா கிரியதே தஸ்ய யமேனன சர்ச்யா" என்று பஜகோவிந்தம் என்னும் தெய்வ வழிபாட்டு நூலில் ஆதிசங்கராசார்ய ஸ்வாமி கள் விசேஷமாக நாராயணனைப் பூஜிக்க வேண்டு மென்றும் கங்கை நீரை அருந்த வேண்டும் என்றும் இதனுல் யமபயம் நீங்கும் என்றும் கூறியுள்ளார்.

## 6. அதிதிகளுக்கு விருந்தோம்புதல்

தினமும் மனிதன் தான் சாப்பிடுவதற்கு முன் யாராவது விருந்தினர்கள் வருகிருர்களா என்று கவனித்து வந்தவரை காலலம்பி உபசரித்து ஆசனத்தில் அமர்த்தி அவருக்கு முதலில் சமைத்த உணவை அளித்து அவரை நாராயண பரமாத் மாவாக நினைந்து நாராயணன் சாப்பிட்டதாக மகிழ்ந்து அவரை வணங்கி ஆறுதலாக இருக்கச் செய்துவிட்டு பின்பேதான் சாப்பிட வேண்டும். இதுவே விருந்தோம்புதல் ஆகும். சாப்பிடும் பொழுது கோவிந்தா கோவிந்தா என்று சொல்லி தன்வாயில் போட்டுக் கொண்டால் விஷ்ணு பர மாத்மா திருப்தி அடைவார். பாரத நாட்டிலே கோவிந்த நாம சங்கீர்த்தன போஜனம் என்று ஓர் விருந்தளிப்பார்கள். அப்பொழுது இருவரி சைகளில் இருந்து சாப்பிடுவார்கள். ஒருவரிசை யில் இருப்பவர்கள் கோவிந்த கோவிந்த கோவிந்தா என்று உரத்துச் சொல்வார்கள். அப்பொழுது அந்த நாமத்தை காதால் கேட்டுக் கொண்டு எதிர்வரிசைக்காரர்கள் சாப்பிடுவார் கள். பின்பு இவர்கள் கோவிந்த கோவிந்தா என்று சொல்ல முதலில் கோவிந்த நாமத்தைச் சொன்னவர்கள் சாப்பிடுவார்கள். இப்படி சாப் பாடு முடியும் வரை கோவிந்த கோவிந்த கோவிந்தா என்ற நாமங்கள் ஒலித்துக் கொண் டிருக்கும். இங்கு நாராயண பரமாத்மாவே மனித வடிவத்தில் சாப்பிடுவதாக கருத்தில் கொள்ளப்படும். இவ்விதம் காலை முதல் மாலை வரை எல்லாம் நாராயண பரமாத்மாவின் வடிவமாக, கோவிந்த வடிவமாக இருக்கின்ற படியினுல் மஹா விஷ்ணுவுக்கு விஷ்ணு பர மாத்மா என்றும், கிருஷ்ண பரமாத்மா என்றும் கூறப்படுகின்றது. ஆகவே ஆதிசங்கரரும் "பாமரனே! கோவிந்தனை பஜனை செய்" என்று பஜகோவிந்தம் என்கிற கிரந்தத்தில் கோவிந்தனை விசேஷமாகக் கூறியுள்ளார்.

ஆகவே நாமும் விஷ்ணு கோவிலின் தூல லிங்கமாக விளங்குகின்ற கோபுர வடிவமான விஷ்ணு பரமாத்மாவை ஆசௌது காலங்களிலும் கோவிலுக்கு வரமுடியாத சந்தர்ப்பங்களிலும் எட்டத்திலிருந்தே கோபுரத்தை தரிசித்து கோவிந்தா கோவிந்தா என்று கூறி விஷ்ணு பரமாத்மாவை வணங்குவதற்கே இந்த சிங்கப்

பூரில் இந்த விஷ்ணு ஆலயத்தில் இந்தக் கோபுரம் கட்டப்பட்டு திகதி (2-2-1979) வெள்ளிக்கிழமை யில் சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடாத்தப்படுகின்றது. இக்கோபுரத்திற்கு நிதி உதவிய புண்ணிய சாலிகளும் இக்கோபுரத்தை அழகுற கட்டி எழுப்பிய சிற்ப மேதைகளும் இதற்கு உறுதுணையாயிருந்த மற்ற பணியாளர் களும் இக் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்திய ஆசாரியர்களும் இவ்வைபவத்தை கண்டுகளித்த மகா ஜனங்களும், இத்திருப்பணிச் சபையோரும் கோவில் தர்மகர்த்தாக்களும் இம்மை மறுமைகளில் நன்மை பெற கோவிந்த நாம சங்கீர்த்தனம் (கோவிந்த, கோவிந்த. கோவிந்தா) செய்வோம்.

ஸ்ரீ கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா! கோவிந்தா!



**வேத வாக்கு :**

# ஒருவனே தேவன்

**'அண்ணா' சுப்ரமண்யம்**

அக்னிதேவனே! வீரர்களுள் வீரனாகிய இந்திரன் நீயே. ஓங்கி உலகளந்த உத்தமனான விஷ்ணு நீயே. வேதத்திற்கு உறைவிடமான பிரம்மதேவன் நீயே. வருணன் நீயே, மித்ரன் நீயே, அர்யமா நீயே, அதிதியும், பாரதியும், இளாதேவியும், ஸரஸ்வதி தேவியும் நீயே.

**—ரிக்வேதம் 2-1**

தேவர்களே! நீங்கள் எல்லோரும் இந்திரனிடம் உறைகிறீர்கள் என்பது உங்களுடைய பிரியமான பெரும் புகழ். **—ரிக் 3-54-17**

இந்திரனே! நீ பேராற்றல் படைத்தவன்; எல்லா தேவர்களையும் உன்னிடம் கொண்ட விச்வதேவன். **—ரிக் 3-98-2**

நம்முடைய துதிகளால் நாம் இன்று ஸவித்ரு தேவனைப் போற்றுகிறோம். அவன் மங்கள நாயகன், விச்வதேவன்; அவனுடைய சக்தி உண்மையில் உறைகிறது. **—ரிக் 5-82-7**

ஸவித்ரு தேவனாகிய அவனே அர்யமா, அவனே வருணன், அவனே ருத்ரன், அவனே மகாதேவன்; ஒன்றேயாகிய தெய்வம் அவனே. அவனை இரண்டாவதாகவோ, மூன்றாவதாகவோ, நான்காவதாகவோ, ஐந்தாவதாகவோ, ஆறாவதாகவோ சொல்லவில்லை.

பிரபுவே! உன்னிடம் எண்ணிலடங்காத மூர்த்திகள் உறைகின்றனர். உன்னுடைய கோடியில் எத்தனையோ கோடிகள் அடக்கம். நீயே கோடானுகோடியாக விளங்குகிறாய்.

**—அதர்வண வேதம் 13-4**

இந்திர-வருணனே! எங்கள் துதிகளின் வாயிலாக உன்னையும் உனது அருளையும் நாடும் எங்களுக்குப் புகலளிப்பாயாக. **—ரிக் 1-17-7**

இந்திரனும் அக்னியுமாகிய நீங்கள் இருவரும் உங்களுடைய ஸத்ய ஸ்வரூபத்தால் எங்களைக் காத்தருளுங்கள். **—ரிக் 1-21-6**

தேரில் அமர்ந்து வரும் இரண்டு வீரர்களைப் போலவும், மக்களிடையே மதிமிக்க மணமக்களைப் போலவும், விடியற்காலையில் இரண்டு சக்கரவாகப் பறவைகளைப் போலவும் எங்களை நோக்கி எழுந்தருளுங்கள். **—ரிக் 2-39**

மருத் கணங்கள் தங்கள் துதிகளால் மதிமிக்க ரிஷிகளைப் போலும், மக்களைக் காக்கும் களங்கமற்ற வீரர்களைப் போலும், புத்தியில் சிறந்த வழிகாட்டிகள் போலும், பரிசுகளை தாராளமாக வழங்கும் மணமக்களைப் போலும், அழகிய தாய்மார்களை உடைய விளையாட்டுக் குழந்தைகளைப் போலும், படாடோபத்துடன் போருக்குச் செல்லும் வீரியம் மிக்க போர் வீரர்களைப் போலும் எத்தனையோ வகையில் போற்றுதற்குரியவர்கள் ஆகின்றனர்.

**—ரிக் 1-78**



# கலைகள் உணர்த்தும் கடவுள்

**மீ.ப.சோமு**



இறைவன் இறைவி என்று இரண்டு சொற்கள் தமிழில் வழங்கி வருகின்றன அல்லவா? பொருள் ஆழமும் ஒலி அழகும் நிரம்பிய இந்த இரண்டு சொற்களும் நமது சமுதாயத்தின் உயர்ந்த பண்பாட்டையும், ஞான மரபையும் அருமையாக எடுத்துக் காட்டுகின்றன.

உலகெங்கிலும் உள்ள எல்லாச சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் பொருந்துகிற பொதுவான கடவுட் திருநாமங்கள் இவை!

கடவுள் என்னும் பொதுப் பெயர் அருவமானது. அந்த அருவத்துக்கு உருவம் தந்து பரம்பொருளை ஆண் பெண் என்று இரண்டு பான்மையாக்கி, இறைவன் எனவும் இறைவி எனவும் சொன்ன அழகே அழகு!

உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து மறைத்து அருள்கிற தலைவனை இறைவன் என்றும், அந்த இறைவனைப் பிரியாமல் என்றென்றும் அவனிடம் நிலைபெற்று விளங்கும் தாய்மையை இறைவி என்றும் நம் முன்னோர்கள் அழைத்தார்கள். இந்தத் தாய்மையே பரம்பொருளிடம் குடி கொண்டுள்ள திருவருளான சக்தி ஆகும். இந்தச் சக்தியின் வழிபாடே நவராத்திரி பூஜை.

தாச மார்க்கம் என்பது கடவுளுக்குச் செய்கிற தொண்டு. சற்புத்திர மார்க்கம் என்பது பூஜை வழிபாடு. சகமார்க்கம் என்பது யோக நெறி. சன்மார்க்கம் என்பது ஞானநெறி. இந்த நான்கு மார்க்கங்களில் உள்ளவர்களும் எப்படி அன்னையை வழிபடுகிறார்கள் என்பதை அந்தந்த நிலைகளுக்கு ஏற்ப வகுத்துக் கூறியிருக்கிறார்கள் திருமூலரும் மற்ற முனிவர்களும்.

நமது நாட்டிலே நவராத்திரி வழிபாட்டு முறையில் புரட்டாசி மாசத்து வளர்பிறை முதல் நாளில் இருந்து மூன்று நாட்களுக்கு ருத்ரியையும், நான்காம் நாள்முதல் ஆறும் நாள்வரை லக்ஷ்மியையும், ஏழாம் நாள் முதல் ஒன்பதாம் நாள்வரை சரஸ்வதியையும் வழிபட்டு, பத்தாவது நாளில் இந்த வழிப்பாட்டை முடித்துக் கொள்கிற ஒரு முறையை, சுகேது என்ற அரசனுக்கும் அவனுடைய அரசி துவேதியைக்கும் முனிவர்கள் கற்பித்தார்கள் என்பதாக ஒரு பழைய வரலாறு உண்டு.

அம்பாளைப் பற்றிய வழிபாட்டுப் பாடல்கள் தமிழ் மொழியில் ஏராளமாக உள்ளன. கவிதை அழகும் கற்பனைச் செறிவும் மனத்தை உருக்கும் உணர்ச்சிகளும் நிரம்பிய பாடல்களாக இந்த இலக்கியம் பல நூறு ஆண்டுகளாய் நமது தமிழ் மொழியில் வழங்கி வருகிறது. அத்தகைய சொல் ஓவியங்களில் ஏழுக்கு, முன்பக்கங்களில் ஏழு ஓவியங்கள் வரைந்து தந்திருக்கிறார் மணியம்செல்வன். இந்த ஏழு சித்திரங்களுமே கலைகளை உணர்த்துகிற கடவுளாகிய சரஸ்வதி தேவியை, கலைத் தெய்வத்தைச் சொல்லிலும் இறகிலும் வணங்குகின்றன.

## படம் — 1

கலைத் தெய்வமான சரஸ்வதியை, "சமயம் தொறும் நின்ற தையல்," — ஒவ்வொரு மதத்திலும் நின்று திகழ்கிற ஞானப்பெண் என்கிறார்கள் முனிவர்கள். இந்த உலகத்திலுள்ள சமயங்கள், வேறுபட்ட மார்க்கங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவானதுதானே அறிவுக் கலைகளின் வழிபாடு?

அறிவு என்றால் அப்பழுக்கில்லாத தூய்மையின் வடிவம். அதன் நிறம் கருப்பில்லாத வெள்ளை நிறம். இந்த நிறத்தோடு ஒட்டி அறிவு என்ற தத்துவத்துக்கு உருவம் தந்தார்கள் நம் முன்னோர்கள். இருளும் பாசியுமான அறியாமை என்னும் குளத்திலே ஞானம் என்ற

வெண் தாமரை மலர்கிறது! எனவே சொன்னூர்கள், கலைமகளின் உடை (கலை என்றாலே உடை என்று பொருள்) வெண்நிறமானது. வெண்மையே அவள் ஆபரணம், (பணி என்றால் ஆபரணம்) வீற்றிருக்கும் ஆசனம் தூய வெண் தாமரை, அவள் சரஸ்வதி.

வெள்ளியினால் ஆன சிம்மாசனத்தின் மீது அரசனுக்குச் சமமாக ஒரு புலவரை மன்னன் உட்கார வைத்து அன்பு செலுத்துகிறான் என்றால் அந்தப் பெருமை யாருக்கு? அந்தப் புலவருடைய கவித்துவத்துக்கு உரிய சிறப்பு அது. அது கலைமகளுடைய திருவருள். அரியாசனத்துக்குச் சரியாசனம் தந்த கலை அன்னையை வணங்குகிறார் காளமேகப் புலவர்:

வெள்ளைக் கலை உடுத்து
வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் – வெள்ளை
அரி ஆசனத்தில்
அரசரோ(டு) என்னைச்
சரி ஆசனம் வைத்த
தாய்!

## படம் — 2

மலை மகளாகிய பார்வதியும், அலைமகளாகிய லக்ஷ்மியும், கலை மகளாகிய சரஸ்வதியும் மூவரும் ஒரே சக்தியின் மூன்று அம்சங்களே. முக்கண்ணி ஆகிய இறைவி கலைமகளாக வரும் போது உள்ளங்கையில் ஏடு தாங்கி இருக்கிறாள். நிறமும் அணி பணிகளும் எல்லாம் வெண்மை. வீற்றிருப்பது வெண்தாமரை மீது. பாடுவது திருமுறையாகிய வேதங்கள். அவள் பார்ப்பனி, அதாவது (பார்ப்பனன் — பிரமன்) பிரமனின் தேவி ஆகிய பிராமி. அவளுடைய திருவடிகளை என் தலை சூடிக் கொள்கிறது, என் வாய் அவளுக்குத் தோத்திரம் சொல்லுகிறது என்று எளிமையான அழகுத் தமிழிலே உள்ளத்தைக் கவர்கிற திரு மந்திரமாகப் பாடிப் பரவுகிறார், சித்தர்களுக்கெல்லாம் சித்தராகிய திருமூலர்:

ஏடங்கை நங்கை
இறை எங்கள்முக் கண்ணி
வேடம் படிகம்
விரும்பும் வெண் தாமரை
பாடும் திருமுறை
பார்ப்பனி பாதங்கள்
சூடும் என் சென்னி, வாய்
தோத்திரம் சொல்லுமே.
[அங்கை — உள்ளங்கை, சென்னி – தலை.]

## படம் — 3

நாவீறு, சொற்பேறு, அருள் வாக்கு, சந்நதம் என்றெல்லாம் சொல்கிற அருள் மொழியைத் தருபவள் கலைமகளே! அவளே லக்ஷ்மியாகவும், பரா சக்தியாகவும் திகழ்கிறாள். "திருமகளாகவும் ஜய மகளாகவும் விளங்கி என் பேதை நெஞ்சில் இருந்து அருள்கிற செஞ்சொல் வஞ்சி" என்று அந்த வாக்குத் தேவதையைப் பாடுகிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்!

சொல் மகளாகிய கலைவஞ்சியைப் போற்றினால் உலகம் முழுதும் எல்லா உயிர்களுக்கும் ஞானமும், வேதப் பொருளும், திருந்திய செல்வமும், அழியாத சீர்சிறப்புக்களும் கிடைக்கும் என்பது கம்பர் வாக்கு:

பெருந்திருவும், ஜய மங்கையும்
ஆகி என் பேதை நெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப்
போற்றில், எல்லா உயிர்க்கும்
பொருந்திய ஞானம் தரும், இன்ப
வேதப் பொருளும் தரும்,
திருந்திய செல்வமும் தரும், அழியாப்
பெரும் சீர் தருமே!

## படம் — 4

படிகம் போன்று வெண்மை நிறமான மேனி. பவளம் போன்று சிவந்த வாய். வாசனை கமழ்கிற (கடி என்றால் வாசனை) தாமரை போன்ற கையும் உடுக்கு போலும் ஒடுங்கிய (துடி — உடுக்கு) இடையுமாகக் காட்சி தருகிற கலைமகளை அல்லும் பகலும் அனவரதமும் வணங்கிப் போற்றினால் மனிதன்தானா கவிதை பேசுவான்? வெறும் மண்ணாங் கட்டி, வெறும் கல்லும் கூடக் கவி சொல்லும்!

கல்லுக்குள் இருந்து சிற்பம் எழுகிறது என்றால் என்ன பொருள்? தாமரைத் தடாகத்துத் தண்ணீருக்குள் இருந்து ஓர் அழகிய பூமலர்ந்து வருவது போலே, கல்லுக்குள் இருந்து ஞானப் பெண் எழுந்து வருகிறாள்! கல்லானாலும் சரி, கல் போன்ற ஒரு கட்டியான மனித உள்ளமானாலும் சரி, அதற்குள் இருந்து பூத்து வருவது கலை. அது ஒரு பூமலர்ச்சி, ஒரு சிற்ப உதயம்!

படிக நிறமும்
பவளச் செவ் வாயும்
கடிகமழ் பூந் தாமரைபோல்
கையும் — துடிஇடையும்
அல்லும் பகலும்
அனவரத மும் துதித்தால்
கல்லும் சொல் லாதோ
கவி!

## படம் — 5

மொழிக்கும் அது கூறும் பொருளுக்கும் உயிராக நிற்பது எது? அறிவு என்ற தத்துவந் தானே! குமரகுருபர அடிகள் பாடுகிறார்:

சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக நிற்கிற கலையன்னையே, உன்னை ஞான உணர்விலே தோய்ந்து தியானிக்கக் கூடியவர்கள் யார்? நிலம் வரை தாழ்ந்து பூமியைத் தொடக்கூடிய தும்பிக் கையுடைய பெண் யானையும், ராஜஹம்ஸம் என்கிற அரச அன்னமும் உனது அழகிய நடையைப் பார்த்து வெட்கும்படியாக எழில் நடை பயில்கிற தாமரைத் திருவடி அம்மையே, சகலகலா வல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராய்,
    மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை, நினைப்பவர்
    யார்? நிலம்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு,
    அரசன்னம் நாண, நடை
கற்கும் பதாம் புயத் தாளே;

    சகல கலா வல்லியே!

[புழைக்க — தும்பிக்கை, துவாரமுள்ளது. பிடி — பெண் யானை.]

## படம் — 6

உலகம் முழுவதும் வென்று, தங்கள் குடை நிழலில் ஆள்கிற மன்னர்களும், என் பாடலைக் கேட்டு வணங்கும்படி செய்வது உன் திருவருளே, அன்றோ? படைப்புக் கடவுள் முதலாகிய தேவதைகள், மூர்த்திகள் பல உண்டு என்றாலும், சொல்லப் போனால், விளம்பில், உன் போல் கண்கண்ட தெய்வம் உண்டோ சகலகலா வல்லியே என்று மெய்சிலிர்த்துப் பாடுகிறார் குமரகுருபர அடிகள்:

மண்கண்ட வெண்குடைக் கீழாக
    மேற்பட்ட மன்னரும், என்
பண்கண்டளவில் பணியச்செய்
    வாய்; படைப்போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடிஉண்
    டேனும், விளம்பில், உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
    சகலகலா வல்லியே.

## படம் — 7

குமர குருபரர் பாடுகிறார். கலாவல்லி கொடுத்த அந்த வாக்கைக் கொண்டே அவளிடம் வரங்களைக் கேட்கிறார்!

பண்ணும் — சங்கீதமும், பரதமும் — நாட்டியமும், கல்வியும், இன்பச் சொல்லாலாகிய கவிதையும் நான் நினைத்த மாத்திரத்தில் எனக்கு வரும்படி நல்குவாய் அம்மா. எழுதாத வேதத்துள்ளும், விண்ணிலும், புவியிலும், தண்ணீர், நெருப்பு, காற்று முதலிய ஐந்து பூதங்களிலும், அன்பர்களுடைய கண்ணிலும் கருத்திலும் நிறைந்தவளே, சகலகலா வல்லியே!

பண்ணும், பரதமும், கல்வியும்,
    தீஞ்சொல் பனுவலும், யான்
எண்ணும்பொழுது எளிது எய்த
    நல்காய், எழுதா மறையும்,
விண்ணும், புவியும், புனலும்
    கனலும், வெங்காலும், அன்பர்
கண்ணும் கருத்தும், நிறைந்தாய்
    சகலகலா வல்லியே.





**கொலை செய்யாதவனும், பொய் பேசாதவனும், திருட்டுக்குணம் இல்லாதவனும், மதிக்கத்தக்க நற்குணங்களை வாய்க்கப் பெற்றவனும், நல்லவனும், அடக்கமுடையவனும், நடுநிலைமையுடையவனும், கிடைத்ததைப் பிறருக்குப் பங்கிட்டு உண்பவனும், குற்றம் அற்றவனும், கட்குடி இல்லாதவனும், காமவேட்கை இல்லாதவனும் எவனோ அவனே (அஷ்டாங்க யோகம் குறிப்பிடும்) இயமம் என்னும் பயிற்சியில் நின்றவன் ஆவான். —திருமூலர் (திருமந்திரம்)**


கலைகள் உணர்த்தும் கடவுள்-1


கலைகள் உணர்த்தும் கடவுள்-2
கலைகள் உணர்த்தும் கடவுள்-3

கலைகள் உணர்த்தும் கடவுள் - 4




5
6


கலைகள் உணர்த்தும் கடவுள் — 7

# ‘எதிர்பாராத சந்திப்பு’

கலைமணி, சிரோமணி, -தஞ்சை- என். எஸ். தாதாசாரியார் P. O. L.

தமிழ்நாடு

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப் ரம்மணேநம
ஸ்ரீமதே ராமானுசாயநம

எண்பெருக்கந் நலத்து, ஒண்பொருள் ஈறிய
பண்புகழ் நாரணன் திண்கழல் சேரே

## 1. முன்னுரை

தமிழுக்கு உலகப் பொது மொழிகளில் ஒரு தனி இடமும், தனிச் சிறப்புமுண்டு. இலக்கண–இலக்கிய வளம், பழைமை, பண்பு, எளிமை, என்பன போன்ற ஓர் உயர் தனிச்செம் மொழிக்குள்ள இலக்கணம் யாவும் கொண்ட மொழி தமிழ் மொழி. **பிரபுலிங்க லீலையில் சிவப்பிரகாச சுவாமிகள்** தமிழின் சிறப்பை, மறைமுகமாகக் கூறும்வகையில் — **‘கரும்பு கசக்கும் கனி மொழி’** என்றார். மண்ணுக்கும், மலருக்கும்தான் மணம் உண்டென்று இதுகாறும் நினைத்தோம் அன்று. பண்பட்ட மொழிக்கும் மணம் உண்டு. தமிழுக்கோ நிச்சயம் உண்டு.

இக்கருத்தை **அமுதனர்** என்ற **ஸ்ரீவைணவ ஆசிரியர் இராமானு நூற்றந் தாதியில்** மிக அழகாகக் குறிப்பிட்டார். தக்க புலவர் தக்க தமிழில் **புளியோதிரை பற்றி** எழுதினல் படிக்கும் பொழுதே புளி மணக்குமாம். தமிழுக்குத் தித்திப்பு உண்டு என்றும் கூறுவதுண்டு. ஒருவர் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்றதும் ஒரு புலவர் நள வெண்பாவில் இருந்து ஒரு பாட்டை எழுதிப் பாலில் தோய்க்கவும் என்றாராம்.

கம்ப ராமாயண, ஜடாயு இராவணனைப் பார்த்து **‘போச்சு நின் ஆற்றல்’** என்றதும் தமிழ்ப் பற்றுள்ள இராவணன் **போச்சு** என்ற கொச்சைச் சொல்லால் தமிழைக் கொலைசெய்த உன்னை விடேன் என்று கூறித் தனது **சந்திரஹாஸம்** என்ற வாளால் சடாயுவை மாய்த்தான் எனக் கம்பர் காட்டினர். இதனல் கொச்சைச் சொல்கூட கலக்க இயலாத் தூய தமிழ் என்பதைக் கம்பன் ஜடாயுவின் வாயால் வெளியிட்டார். சமய வேற்றுமை என்பது என்றும் தீராத ஒருகொடிய தன்மை. அதையும் மாற்றி ஒற்றுமைப்படுத்த வல்லது தமிழ் என்பதையும் ஸ்ரீவைணவ சமயப் பெரியோர்களும் சைவ சமயப் பெரியோர்களும் தமிழ் மொழி கொண்டு ஆத்திகத்தை வளர்க்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்தும் ஒரு செய்யுள் உண்டு.

பெர்ற் சைவ வைணவமும் புத்தர் பிரான்
பொன்னுரையும்
நற்சமணக் கிறித்துவரும் நபிகள் பிரான்
நல்லுரையும்
பற்பலவாய் இருந்திடினும் பைந்தமிழின்
பண்பேற்றுக்
கற்போரைப் பிடித்து இழுத்துக்கனி
தமிழின் சுவையூட்டி
நாயன்மார் நாவமுதும் நல்லாழ்வார்
பாசுரமும்
காவியமாய் இந்நாட்டில் கதிர் வீசக்
காண்கின்றோம்

என இத்தகைய முத்துக்கினிய முத்தமிழ் தத்தித் தவழும் தமிழ் நாட்டில் (இந்தியா) உடலுக்கு உணவையும் உணர்வுக்கு உயர்ந்தோர் வாக்கையும் சிந்தைக்குச் சிந்தை குளிரும் தீந்தமிழையும் வாரி வழங்கிய, வழங்குகின்ற நாடு சோழ நாடு. இக்கருத்தை மறைமுகமாகவும், பொதுப்படையாகவும் வருணிக்கும் **கவிமணி** தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு...
தெய்வ கீதம் பல உண்டு
தெரிந்து பாட நீ உண்டு
வாழும் சொர்க்கம் வேறுண்டோ.

எனக் கூறியுள்ளார். அத்தகைய நம் இன்பத் தமிழ், சுவையில், பண்பில், பாலையும் தேனையும் ஒத்தது என்பர். ஆவின் பால் எவ்வளவு காய்ச்சினும் தன் சுவை குன்றாது. தேனே பல நாள் பழகினும் பழுது படாது என்பதுடன், இரண்டும் மனிதனுக்கு **உணவாகவும், மருந்தாகவும், போஷாக்குப் பொருளாகவும்** [வடமொழியில் இதனைத் **தாரகம், தாரகம், போஷகம்** என்பர்] இருக்கும். அத்தகைய சிறப்பு தமிழுக்கும் உண்டு. இதனல்தான் ஆழ்வார்கள் தமிழ்ப்பாடல்கள் மூலம் திருமாலைப் **‘பாலாழிவண்ணு! தேனில் இனிய பிரானே’’** எனக் குலாவி அழைத்தனர். இத்தகைய தேன் தமிழும், பால் தமிழும் தெய்வக் கவிஞர்கள் அருட் செல்வர்களாம் **ஆழ்வார்கள், நாயன்மார்கள்** நாவில் சுரந்தன. உலக அன்னை உமை அம்மை ஞானப்பால் ஊட்டி ஆளுடைய பிள்ளையைத் **திருஞானசம்பந்தராக்கினர்.** உலக அன்னை திருமகளும் தனது திருவடிப் பொற்கழலைத் திருமங்கை மன்னன் அறவழியில் நின்று வழிப்பறி செய்கையில் **பல்விட்டுக்**

**கடித்த காலையில்** தேனூறு செந்தமிழை ஆழ்வார் நாவில் சுரக்கப் பண்ணினாள். இவ்விரு பெரியவர்களும் **சைவத்திற்கும் வைணவத்திற்கும்** பொதுப் படையாகச் சமய உலகிற்கே இரு கண்களாக விளங்குகிறார்கள். முகத்தில் உள்ள கண்கள் இடையே மூக்கினால் தடைபட்டு அருகே இருந்தும் கூடாமல் இருந்தாலும் நோக்கு நெறி இரு கண்களுக்கும் ஒன்றே. குறுகிய சமயநெறி நோக்கமும் இவர்களைப் பிரித்தே பார்த்தது. இவ்விரு கண்களாகிய திருமங்கை மன்னரும் திருஞான சம்பந்தரும் எதிர்பாராமல் சந்திக்கும் ஒரு நல்லடிக்காலம் ஒரு சமயம் ஏற்பட்டது. அப்பொழுதுதான் **அந்தர் வாஹினி**யான சரசுவதி நதிபால் இருவர் உள்ளத்திலும் உள்ள பற்றும், பாசமும், குழைவும், குணமும் தாமாகவே பீரிட்டன. பீரிட்ட உணர்ச்சி வெள்ளம் அரும் அகத்துறைத் தமிழ்ப்பாடலாக அமைந்தது. இப்பாடல்கள் தனிப்பாடல் வரிசையில் உள்ளன. வெகுவாகச் சைவர்களும் வைணவர்களும் இப்பாடல்களை அவ்வளவு பற்றுடன் ஏற்காவிடினும் சமரஸ நோக்கமுள்ள பெரியவர்கள் இடையே இப்பாடல்கள் போற்றப்படுகின்றன.

## 2. இருவர் பெருமை

திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிப் பதியிலே சிவபாத இதயருக்கும், பகவதியாருக்கும் தெய்வக் குழந்தையாகப் பிறந்து மூன்றாண்டுக்குள்ளேயே (அறியாப்பருவத்தில்) **முருகப்பெருமானுடைய தோன்றலாகத் தோன்றி** உமையம்மையால் ஞானப் பாலூட்டப் பெற்று அதனடியாக வந்த சிவஞானத்தாலே சிவசம்பந்தம் பெற்று திருஞான சம்பந்தரானார். **பன்னிரு திருமுறை** வகுப்பில் முதல் மூன்று திருமுறைகளை இயற்றித் **திருக்காப்பு** என்ற பெயர் கொண்ட தேவாரப் பகுதிக்கு ஆசிரியராகி சிவத்தலங்கள்தோறும் சென்று அமுதகீதம் பாடிச் சைவ சமயத்திலேயே சிறந்த நாயனார் ஆனார். திருமங்கைமன்னனோ இதே சீர்காழிப் பதிக்கு அண்மையில் உள்ள ஆலிநாட்டில் திருக்குறையலூர் திருமாலின் **சாரங்கம்** என்ற வில்லின் அமிசமாய் **நீலன்** என்ற பிள்ளைப் பெயருடன் சோழன் படைத் தலைவனாய் திருமங்கை நாட்டின் குறுநில மன்னராய், தெய்வநங்கை **குமுதவல்லிக்காக** வைணவராக மாறி வைணவ அடியார்களுக்கு அன்னம் பாலிக்கும் பொழுது பற்றாக்குறை ஏற்பட அதற்காகத் திருமணங்கொல்லையிலே திருமணக் கோலத்துடன் வந்த **திவ்ய தம்பதிகளான திருமகளையும், நாராயணனையும்** மிரட்டி வழிப்பறி செய்ய முயலுகையில் திருமகளின் திருவடியும், திருக்கண்ணும் தன்மேல் படவே எட்டெழுத்துப் பொருளான ஆதிமுதல்வன் நாராயணனே நேரிடையில் மந்திர உபதேசம் செய்யும் பேறு பெற்றார். இவர் **பதரி** முதல் **திருவணை** வரை பதிதோறும் சென்று செந்தமிழ் பாடித் திருமாலையே தமது அமுதத் தமிழால் நீர்ப்பண்டமாக உருக வைத்தார்.

ஆழ்வார்கள் வரிசையில் திருமங்கை ஆழ்வார் கடைக்குட்டியாய் இருந்தாலும், உருவ வழிபாட்டிலும் நான்குவகைத் தமிழ்க் கவிபாடுவதிலும் உரங்கொண்ட பக்தி நெறியிலும் ஸ்ரீவைணவத்தில் சிறந்த ஆழ்வாரானார். அருள் மாரி என்ற திருப்பெயரும் பெற்றார். இவ்விருவரின் சமய நெறிக் கொள்கைகள் நம்மளவில் மாறுபட்டுத் தோன்றினாலும், சமரச நெறியில், உள்ளத்தாலும், உண்மை விளக்கத்தாலும் ஒன்றுபட்டே இருந்தன. உதாரணமாகத் திருக்குற்றால வருணனையில் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் **'கொல்லை, முல்லை, மெல்லரும்பு ஈனும் குற்றாலம்'** எனப் பாடினார். அப்படியே திருமங்கை ஆழ்வாரும் திருக்குறுங்குடி வருணனையில் "கொல்லை, முல்லை, மெல்லரும்பு ஈனும் குறுங்குடியே" என்று பாடினார் என்றால் இவ்விருவர் தம் வாக்கில் சொல்லொற்றுமை எவ்வளவு பொருந்த அமைந்திருக்கிறது என்பதைக் காணலாம்.

## 3. இருவர் சந்திப்பும், நிகழ்ச்சியும்.

பதியே பரவித்தொழும் பெருந்தொண்டரான திருமங்கை மன்னர் இமயத்திலிருந்து திருமால் திருப்பதி ஒவ்வொன்றிலுமுள்ள திருமாலை வணங்கியும் பாடியும் தெற்கு நோக்கி வந்தார். தெற்கே வர வர வைணவ அடியார்கள் கூட்டம் பெருகியது. தில்லைச்சித்திரக் கூடத்திலிருந்து (சிதம்பரம்) பிறந்த ஊராகிய காழிச்சீராம விண்ணகரம் வந்தார்; நகரில் நுழைந்தார். உடன் வரும் அடியார்கள் "**ஆலிநாடர் வந்தார்! அருள்மாரி வந்தார்; மங்கை வேந்தர் வந்தார்! பரகாலர் வந்தார்!**" என்ற முறையிலே கட்டியம் பாடத் தலைப்பட்டார்கள். அவ்வமயம் சீர்காழியில் திருஞானசம்பந்தர் சிவன் அடியார் கூட்டத்துடன் திருமடத்தில் வீற்றிருந்தார். திருமங்கை ஆழ்வாருடைய கட்டிய நாதம் கேட்டுச் சீற்றம் கொண்ட திருஞானசம்பந்தரின் சீடர்கள் அவர்களைத் தடுத்தார்கள். இதை அறிந்த திருமங்கை ஆழ்வார் சிவனடியார்களை நோக்கி "தடுப்பது என்கொல்? நாங்கள் உங்கள் சமயாச்சாரியார் திருஞானசம்பந்தரைத் தரிசிக்கவே ஆவலுடன் வருகிறோம். எங்குற்றார் திருஞான சம்பந்தர்?" என்றார். இதற்குள் இச்செய்தி ஆறுடைய பிள்ளையாருக்கு எட்டியது. தம் அடியார்கள் வைணவ அடியார்களை எதிர்ப்பதை விரும்பாமல் மடாலயத்திலிருந்து திருமங்கை மன்னனை எதிர்கொண்டழைக்கத் தாமே புறப்பட்டார். ஒரே இடத்தில் அடுத்தடுத்த ஊரில் தோன்றியும், இதுவரை சந்திக்காமலிருந்த இந்த இருவரும் ஓரிடத்தில்

கங்கையும், யமுனையும் கூடுவது போல் கூடினர். பிரிந்திருந்த கண்கள் பதிந்திருந்து கூடின. ஒருவரையொருவர் மனமாரத்தழுவி மகிழ்ந்தனர். அப்பொழுது திருஞானசம்பந்தர் ஆழ்வாருடைய கவித்திறமையைச் சிவனடியார்களுக்குக் காட்டும் நோக்கத்தில் ஆழ்வாரைப்பார்த்து **ஓர் குறளைப் பாடுங்கள்** என்றார். ஒரு குறள் பாட்டுப் பாடுங்கள்-ஒப்பற்ற வாமனவதாரத்தைப் பாடுங்கள் என இருவகைப் பொருள் கொண்டது இப்பதம். நாயன்மார் குறிப்பறிந்த ஆழ்வாரும் சீர்காழி தலப் பெருமாளை (அதாவது வாமனவடிவம் எடுத்த திருமாலை) உள்ளத்திற் கொண்டு "ஒரு குறளாய்" என்ற அமுதப் பதிகத்தைப் பாடினார். திருமால் பத்து அவதாரம் எடுத்து மூவுலகையும் அளந்து நின்றார்ப்போல் குறட்பாவும் பத்துப் பத்தாகப் பிரிந்து முப்பாலையும் அளந்து ஒப்பற்றதாக ஆயிற்று.

இப்பாடலைக் கேட்ட சம்பந்தப் பெருமான் தன் கையில் இருந்த வேலைத் (சம்பந்தர் முருகனது அவதாரமானதால் அதனறிகுறியாக வேல் தாங்கி நின்றார் போலும்) திருமங்கை மன்னருக்குப் பரிசாக அளித்தார். பரிசுபெற்ற ஆழ்வாரும் **"மானவேல் பரகாலன்"** என இதனடியாகத் தம்மையே தாம் கூறிக் கொண்டார். (மான – பரிசாகக் கிடைத்த, வேல் – வேற்படை எனப் பொருள்) இவ்விரு மாபெருமகான்களின் உள்ளங்கள் மகிழ்ந்து களித்துக் கூடவே அகத்துறைத் தமிழ்ப் பாக்கள் இரண்டு அவதரித்தன. பண்டைய தமிழ் இலக்கியங்களில் வரும் அகத்துறைப் பாடல்களில் **தாய் பேச்சு, தோழி பேச்சு, தலைவி பேச்சு** என்ற பகுதிகள் வரும். அம்முறையில் ஈண்டு திருமங்கையாழ்வார் பேச்சில் தலைவி பேச்சும், சம்பந்தர் வாக்கில் தாய் பேச்சுமாக இரு பாடல்கள் ஏற்பட்டன. திருமங்கை ஆழ்வாரை நோக்கி) திருஞான சம்பந்தர் பெண் தன்மை ஏந்தி, "ஏ! மங்கை மன்னரே, பரம் பொருளான திருமாலை வழிப்பறி செய்து பரமபதத்தையே பறித்துக்கொண்டீரே. உமது பவனிக்கு எதிரில் என் மகள் ஒரு நாள் காணச் சென்றதுமே, இயற்கையான உம் வழிப்பறித் தன்மையில் அவள் உள்ளத்தையே வழிப்பறி செய்தீரே...? இது முறையா? என் ஒரே மகள் ஈண்டு உள்ளம் இழந்து உயிர் ஒன்றுடன் வருந்தி நிற்கிறாளே. இது தகுமா?" எனக் கூறும் வகையில் தம் உள்ளத்தைத் திருமங்கை ஆழ்வார் திருடிவிட்டார் என்பதைக் காட்டினார்.

"கடியுண்ட நெடுவாளை கராவிற் றப்பிக்
கயத்துக்குள் அடங்காமல் விசும்பில் பாய
அடிஉண்ட உயர் தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு குலைசி தறும் ஆலிநாடா
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடி
பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடி ஒன்று நின்பவனிக்கு எதிரே சென்று
கும்பிட்டாள் உயிர் ஒன்றுங் கொடுவந்தாளே"

இப்பாடல் படிக்கப் படிக்க இன்பம் தரும் ஓர் அருமைப் பாடல். இப்பாடலைக் கேட்டார் திருமங்கைஆழ்வார். ஆழ்வாரும் பல நாட்களாய் தம்மைப்போல் நாத்திக வாதங்களைக் கண்டித்து நாட்டிலே அன்பு நெறியைப் பரப்பி வந்த திருஞான சம்பந்தரைக் காணவேணும்! என்று தவித்துக்கொண்டிருந்தார். அந்தத் தவிப்பைத் தாமும் காதல் துறையிலே தலைவிப் பேச்சாக ஆக்கி ஞானசம்பந்தர் மேல் வெளியிட விரும்பி,

"வருக்கை நறுங்கனி சிதறிச் செந்தேன் பொங்கி
மருக் கரையிற் குளக்கரையின் மதகிலோடப்
பெருக்கெடுத்து வண்டோலம் செய்யும் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமான்! கேளீர்
அருட்குலவு மயிலைதனில் அனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவையாக்கினோம் என்று
இருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையும் ஓர் பெண்ணாக்கல் இயல்புதானே" என

எவ்வாறு ஞானசம்பந்தப் பிரான் திருமங்கை ஆழ்வாரின் செயல்களை நன்கு அறிந்திருந்தாரோ அவ்வண்ணமே திருமங்கை ஆழ்வாரும் திருஞான சம்பந்தர் மயிலாப்பூரில் எறும்பைப் பூம்பாவையாக்கிய சம்பந்தரது அற்புதச் செயலை அறிந்திருந்தார். அச்செயலை அடிப்படையாகக் கொண்டு இப்பாடலை இயற்றினார்:- "ஞானசம்பந்தப் பெருமானே, நானோ ஒரு பெண். பெண் என்றால் அபலை எனப் பெயர். நான் தங்களையே நினைந்து நினைந்து காணா காதலுற்றுப் பிரிவாற்றாமையால் வருந்தி நிலவுகூட அனலாக வேகும்படி நிலவில் வெந்திருக்கிறேன். தாங்கள் மயிலாப்பூரில் அனலில் வெந்த ஒரு பெண்ணைப் பிழைப்பித்தீரே...! இது என்ன விந்தை...? சித்து விளையாட்டால் கூட இதனைச் செய்யக்கூடுமன்றோ. ஆனால் திருமங்கையில் தோன்றித் தங்களைக் காண விரும்பி, நிலவில் வெந்த இந்தப் பெண்ணுடன் கூடி உயிர்ப்பித்தால் அன்றோ தங்கள் பெருமை நிலைக்கும்" என்றார்! இந்த நிகழ்ச்சியால் சமயங்களுக்கோ சமயாசாரியர்களுக்கோ அணுகும் முறையில் மாறுபாடிருந்தாலும் குறிக்கோள் ஒன்றாகத்தான் இருக்கும் என்ற சமய சமரச அடிப்படை நோக்கத்தில் நின்று எல்லோரும் பக்திப் பெரும் பாதையில் கலந்து, கூடிக்

**158 ம் பக்கம் பார்க்க**

# "எளியவர்க்கு எளியவன் ஸ்ரீநிவாசன்"


## என். பி. ராமன்பட்டாச்சார்

(தலைமை அர்ச்சகர் ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயில், சிங்கப்பூர்)


ஸ்ரீ எம்பெருமான் திருமால் நல்லோரைக் காக்கவும், தீயோரைத் தண்டிக்கவுமே அவதரிப்பவனென்பது யாவரும் அறிந்த உண்மை. தன்னை உள்ளன்போடு நினைப்பவர் எவராயினும் அவர்களுக்கு அருளும் தன்மை உள்ளவன். இதை உணராதவர்கள் இழிவுபடுத்திப் பேசினும் அதை இசையாக ஏற்கும் தன்மையுள்ளவன். அதனாலேயே சாந்தசொரூபன் எனப் போற்றுகின்றோம். ஆனால் அவனை நினைத்த பக்தர்களையும், சாதுக்களையும் மற்றவர் துன்பத்திற்கு உள்ளாக்கினால் அவன் அதை ஒரு கணம் சகியாது தீயோரை அழித்து விடுவான். ஸ்ரீநாராயணனைப் பகைத்து அழிந்தவர் அநேகர். பகைத்தபின் சரணடைந்தவர்கள் சிலர். தன்னைத் தவிர வேறு கதியில்லை என்று எவன் பற்று நீக்கித் தன்னைச் சரணடைகிறானோ அவனை ஒருபோதும் கைவிடாதவன்.

திருமங்கை ஆழ்வார், தமிழ்ப் பாக்களாலே அனுபவித்து "திருவுக்குத் திருவாகிய செல்வா தெய்வத்திற்கு அரசே" எனக் கூறுகிறார். திரு என்றாலே லக்ஷ்மி எனப் பொருள்படும். திருவுக்குத் திருவாகி என்றால் ஸ்ரீலக்ஷ்மிக்கும், லக்ஷ்மி கரனாக விளங்குபவன் எனப் பொருள்படக்கூறுகிறார். இது வைணவ மரபுப்படி ஸ்ரீபிராட்டியாகிய லக்ஷ்மியை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனை அடைவது என்பது, ஸ்ரீபிராட்டியின் புருஷகாரணபவத்தாலே தான் என்பது காரணம். தாய் தந்தையர்களுக்கு இப்புவியில் எப்படித் தங்கள் குழந்தைகளிடம் அன்பு ஏற்பட்டுஅக்குழந்தைகள் எக்குற்றம்செய்யினும் பொறுத்து அவற்றை நல்லவைகளாக நினைப்போமோ அப்படியே ஸ்ரீயாகிய லக்ஷ்மியோடு கூடின ஸ்ரீநாராயணன் சேதனர்களானகுழந்தையாகிய நாம் எக்குற்றம் செய்யினும், "குன்றனைய குற்றம் செயினும் குணம் கொள்ளும்" என்று பொய்கையாழ்வார் பாசுரப்படி குற்றங்களைக் கூடக் குணமாக எடுத்துக் கொள்ளும் குணம் ஸ்ரீபெரிய பிராட்டியாகிய லக்ஷ்மியின் புருஷாகாரத்தாலேஎன்பது வைணவவழிபாட்டு முறை. ஸ்ரீலக்ஷ்மியின் அவதாரத்தைப்பற்றி பவிஷ்யோத்திர புராணத்திலும் ஸ்ரீவால்மீகி இராமாயணம் பால காண்டத்திலும் விரிவாகக் கூறப்பட்டு இருக்கிறது.

பவிஷ்யோத்திர புராணத்தில் நாராயணனுக்கு ஸ்ரீநிவாசன் என்று திருநாமம் ஏற்படக் காரணம் யாது என்று பிரம்மாவை நோக்கி ஸ்ரீநாரத பகவான் கேட்கிறார். அதற்கு பிரம்மா கூறும்போது ஒரு சமயம் வைகுண்டத்தில் யாவருக்கும் தாயாகிய லக்ஷ்மி நாயகனோடு வீற்றிருக்கும் சமயம், ஒரு தேவதாஸ்ரீயான வித்யாதரபெண் யாழ் கொண்டு இசைத்துப் பாடிப் புகழ்ந்த சமயம் இசையில் மெய்மறந்த லக்ஷ்மி தன் திருமுடியில் சூடிய பூமாலையை அப்பெண்ணுக்குப் பரிசாகக் கொடுத்தாள். அவளும் பெற்று மகிழ்ந்து திரும்பும் சமயம் வழியில் மகரிஷி துர்வாசர் சந்திக்க உடன் மகரிஷி என் உலக நாயகியான லக்ஷ்மிக்கு இசை எடுப்பவளாகியவள் என்று வணங்கினார். வித்யாதரப்பெண் தன்னை மகரிஷி துர்வாசர் வணங்கியதைக் கண்டு, தனக்குப் பரிசாகக் கிடைத்த பூமாலையை மகரிஷிக்குக் கொடுத்தாள்.

பூமாலையோடு தேவலோகம் சென்ற முனிவர் தேவேந்திரனை மதித்துத் தனக்குக் கிடைத்த லக்ஷ்மியின் பிரசாதமாகிய பூமாலையை இந்திரனிடம் கொடுக்க, அவனும் அதை வாங்கித் தன் யானையின் தலையில் வைக்க, யானை உடன் அந்த பூமாலையைத் துதிக்கையால் எடுத்துக் காலில் போட்டுத் துவைத்தது.

இது கண்ட முனிவர் கோபம் கொண்டு இந்திரா உன் வைபவத்தைப்பார்த்து இம்மகா பிரசாதமான பூமாலையை உனக்குக் கொடுத்தேன். நீயோ அகம்பாவத்தாலும், செருக்காலும் இருக்கும் தன்மையைப் பார்த்தேன். இது உனக்குத் தகாது. ஆதலால் நீயும் உன்னைச் சார்ந்த சுவர்க்கலோகமும், பூலோகமும் முறையே சுவர்க்கலக்ஷ்மியும், ராஜ்யலக்ஷ்மியும் சிதைந்து நீதியும் அழிந்து மறையக் கடவது எனச் சாபம் இட்டார்.

சபாத்தால் தன்னுடைய தேஜஸ், கீர்த்தி, பலம் முதலியவற்றை இழந்த தேவர்களை இது சமயம் இராவணனுடைய மூதாதையர்கள் ஆன மாலியவான், சுமாலி, மாலி முதலிய இராக்கதர்கள் பலவாறு துன்புறுத்த இதைத் தாங்காத தேவர்கள் என்னிடம் வர நானும் அவர்களோடும், சிவன் முதலானவர்களோடும் நாராயணனை வைகுண்டத்தில் சென்று கண்டு அவனிடம் முறையிட அவர் எப்போது தங்களை விட்டு லக்ஷ்மி சென்றாளோ அவளைத் திரும்ப அடைய க்ஷீராப்தி என்று சொல்லக் கூடிய பாற்கடலைக் கடைந்தால் அதில் லக்ஷ்மி

திரும்பத் தங்களுக்கு அருள் புரிந்து தோன்று வாள் எனக் கூறினர்.

உடன் தேவர்களும், பல மூலிகைகளைப் பாற் கடலில் போட்டு மந்திரகிரி என்ற பர்வதத்தை (மலையை) மத்தாகவும், வாஸுகி என்ற சர்ப் பத்தை (நாகத்தை) கயிறாகவும் கொண்டு பாற் கடலைக்கடைய நாராயணன் கூர்மமாக (ஆமையாக) மந்திரகிரிமலையைக் கடலுள் சென்று தாங்கிக்கொள்ளப் பாற்கடலைக்கடைந் தார்கள். ஒரு பக்கம் தேவர்களும், ஒரு பக்கம் ராக்கதர்களும் சேர்ந்து மதனம் செய்யும்போது முதலில் ஆலகால விஷம் உண்டானது. முறையே காமதேனு, உச்சிரஸ்சிரவஸ் என்ற குதிரை ஐராவம் என்ற யானை, கௌதுபமணி, பாரிஜாதம் முதலியவைவும் உண்டாயின. உடன் தன்வந்திரி பகவான் இரு கைகளிலும் சாகாவரத்தன்மையுடைய அமிர்தத்தைக் கலசங்களில் கொண்டு தோன்றினர். கடைசியில் லக்ஷ்மி ஸர்வஅலங்கார பூஷிதையாக எங்கும் பேரொளி திகழத் தோன்றினள்.

உடன் தேவர்களும், மகரிஷிகளும் ஸ்ரீசூக்தத் தினல் லக்ஷ்மியைத் துதித்தார்கள். சர்வ அலங் கார பூஷிதையாகிய லக்ஷ்மி தன் திருக்கை களில் மாலையுடன் எல்லாம் நிறைந்த ஒருவனை அடைய வேண்டும் எனக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது என்னையும் மற்ற தேவர்களை யும் பார்க்கும்போது இவரிடம் தபஸ் இருந்தது கோபத்தை வெற்றி பெறவில்லை, இவரிடம் அறிவு இருந்தது ஆனல் பற்றற்ற நிலையை அடையாதவர்கள் ஆனர்கள். எல்லா குணங் களும் நிறைந்தவரான நாராயணனையே தனக்கு ஏற்றவர் என மாலையிட்டாள். மகிழ்ந்த நாராயணன், வேண்டும் வரத்தைக் கேள் எனக் கூற, அதற்கு லக்ஷ்மி எப்போதும் அவரின் திரு மார்பினில் தான் இருக்க அருள்புரியக் கேட் டாள். அதன்படியே என நாராயணன் அன்று முதல் ஸ்ரீநிவாஸராக, ஸ்ரீநாராயணன் பெயர் பெற்றான் எனக் கூறினன் பிரம்மா.

இதையே ஆழ்வார்கள் "அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை, உறை மார்பா" எனத் துதித்தார்கள். மேலும் "வல மார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண்டே" எனப் பெரியாழ்வாரும் துதித்தார்.

ஸ்ரீலக்ஷ்மிக்கு உகந்தது தாமரை மலர், அந்தத் தாமரை மலரின் மென்மையைக் காட்டிலும், மிகவும் மென்மையும், சௌகர்யமும் உடைய எம்பெருமானுடைய இதயக்கமலத்தில் தனக்கு இடங் கிடைத்ததே என மகிழ்ந்த லக்ஷ்மி அதை விட்டு அகல நேருமோ எனச் சந்தேகப்பட்டு, இது ஒரு கணமும் இதை விட்டுப் பிரிந்து இருக்க ஆற்றல் இல்லேன் என்று சொல்லுவதுபோல் வர்ணனை செய்து துதிக்கிறார்.

குருவாயூரப்பனைத் துதித்துவந்தவரான பட்டத்திரிகூட நாராயணீயம் என்ற பாடல் களில் லக்ஷ்மியின் அருள் நமக்குக் கிடைக்க குருவாயூரப்பனை நாராயணனையே வழிபாடு செய்தால் போதும். காரணம், எப்போதும் அவன் திருமார்பில் இருந்து அலர்மேல் ஆராத காதல் கொண்டு அவன் புன்சிரிப்பில் மயங்கி இருக்கிறாள். இதுசமயம் அவள் கடைக்கண் பார்வை சேதர்களுக்கு ஏற்பட்டு மறையும் போது அந்த காலவரையிலேயே பலவிசித்திரங் களும், பேரரசு மாறியும், மலைபோன்ற செல்வம் மறைந்தும், தரித்திரர்கள் செல்வர்களாகவும், மாறுகிறார்கள். காரணம் சிலகணவிந்தாள் சேதர்களுக்கு அவள் பார்வை கிடைக்கிறது. மறுபடியும் எம்பெருமானுடைய சிரிப்பில் மயங்கி அவள் பக்கம் பார்வை போகிறது. ஆத லால் எப்போதும் நாம் நாராயணனையே தியானித்தால் அவள் நிரந்தரமாக நம்மிடம் ஒரு கண்பார்வை இருக்கும் எனப் புகழ்கிறார்.

சேதனர்களாகிய நாம் அனவிரதமும் ஸ்ரீநிவாஸனை தியானித்து வழிபட்டு எல்லா நல னும் பெறுவோமாக.

ச்ரிய காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தி நாம் ஸ்ரீஸிம்ம புரிவாஸாய, ஸ்ரீநிவாஸாய மங்க ளம்.





# திருக்கோயில்

சுவாமி ஹரிதாஸ் கிரி

எல்லா வல்ல இறைவன் யாவுமாய் எங்கும் பரவியிருக்கின்ருன். எங்கும் பரவியிருக்கின்ற அந்த மெய்பொருளேக் கண்டறிய பேரறிவை அறிந்து கொண்டுதான் காண இயலும். கடுமையான வெயிற்காலத்தில் அறைக்குள்ளே நுழையும் ஒருவன் கூறுகின்ருன் "என்ன வெயில்! காற்றே இல்லேயே!" அந்த வீட்டின் அன்பர் மின்சார விசிறியை இயக்குகின்ருர். காற்றில்லேயே என்று கவலேப்பட்ட மனிதன் மின்சார விசிறி சுழல ஆரம்பித்ததும் "அப்பாடா காற்றுவந்தது!" என்று களேப்பு நீங்கினவளுகை மகிழ்ச்சியுருகின்ருன்.

ஒருசற்று இந்நிகழ்ச்சியினேச் சிந்தித்து ஆராய்வோம். அறைக்குள் நுழைந்த மனிதன் "காற்றே இல்லேயே" என்று கூறினன். அப்படி என்ருல் அந்த அறையினுற் காற்று இல்லேயா? காற்றில்லாமல் உயிரினங்கள் வாழ முடியுமா? முடியாது! அந்த அறையினுள் இருந்த காற்றினே அந்த மனிதனுல் உணரமுடியவில்லே. பிறகு, மின்சார விசிறி இயக்கப்பட்டது. அந்த கருவி புதியதாக வெளியிலிருந்து காற்றினேக் கொண்டு வரவில்லே. அங்கு எப்போதும் இருக்ககின்ற காற்றினேயே அந்த மனிதனே உணரும்படி செய்தது. எப்போதும் இருக்கின்ற காற்றினே உணர முடியாத நிலேயில் விசிறி தேவைப் படுகிறது.

அதுபோல ஆதியாய் அளுதியாய் ஒளியாய் ஒலியாய் உருவாய் அருவாய் நீராய் நெருப்பாய் காற்ருய் கனலாய் மலராய் மணமாய் புவியாய் புலனுய் ஆகாசமாய் எல்லாமாய் அல்லதுமாய் விளங்குகின்ற அப்பரம் பொருள் எங்கும் எப்போதும் என்நேரமும் என் நிலேயிலும் இருப்பதை பாமரராகிய நாம் உணர முடியாத தன்மையில் இருக்கின்ருேம். அவன் இருப்பதை உணர்த்தவே இப்பாருலகம் தோன்றிய நாள் முதல் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. "ஆ" என்னும் ஆன்மா அவன்பால் லயம் அடையவதற்கே "ஆலயங்கள்" ஏற்பட்டிருக்கின்றன. அறிவு பெற்ற மனிதன் பிறவிப் பயனே அடைய வேண்டு மென்ருல் ஆன்மாவுக்கு ஆன்மாவாக நிறைந்து நிற்கும் அப்பரம்பொருளே கண்டு கொள்வதே ஆகும். அப்படிக் கண்டு கொண்டவனே பிறப்பு இறப்பாம் மாயையினே அறுத்து அறியாமை நீங்கப் பெற்றவனுக அப் பரம்பொருளிடம் இரண்டறக்கலந்து, அழியாத பேற்றினேப் பெறுகிருன் இந்த நிலேயை உணர்த்தவே ஆங்காங்கே ஆலயங்கள் தோன்றியிருக்கின்றன! தோன்றிக்கொண்டும் இருக்கின்றன.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" — "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் பழமொழிகள் இறைவனருளால் அப் பேற்றினேப்பெறவே தோன்றியிருக்கின்றன. அற நெறி வழியில், ஆலயங்கள் கட்டுதல் பாமர மக்களுக்கு இறை வழிப்பாட்டிற்கு உகந்த மார்க்கம். தானத்தில் பெரியது அன்னதானம் என்று கூறுவர். பசித்தவனுடைய பசியினேப் போக்குவதே அன்னதானத்தின் சிறப்பு. பிறவிப் பயன் எடுத்தவன் ஆன்மீகப் பசிக்கொண்டு அலேயும் பொழுது ஆலயங்களும் அவன் பசியினே தீர்க்க உதவுகின்றன. ஆகவே ஆலயங்கள் எழுப்புவது மகத்தானதொரு ஆன்மீகத் தொண்டு. அன்னமிட்டவனேயும் ஆலயம் கட்டியவனேயும் ஆண்டவன் தன்பால் ஈர்த்துத் தனக்கு உடமையாக்கிக் கொள்கிருன்.

ஆகம, வேத சாத்திரங்கள் வழியாக ஆலயங்கள் கட்டப்படுகின்றன. எண்சான் உடம்பிற்கு எப்படி சிரசானது முக்கியமோ அது போல், ஆலயத்திற்கு ராஜகோபுரம் முக்கியமாகும். வானளாவி உயர்ந்து அழகுடன் ராஜகோபுரம் நிற்கையில் வெகுதூரத்திலிருந்தும் கோபுர தரிசனம் கிடைக்கப்பெறுகிறது. ஊருக்குள் நுழைந்தவனுக்கோ அல்லது அங்கேயே இருப்பவனுக்கோ, ஒரு வேளே கோயிலுக்குள் சென்று சன்னிதானத்தில் நேராக சென்று மூர்த்தி தரிசனம் பெற இயலாதபொழுது தூரத்திலிருந்தே ராஜகோபுரத்தைக்கண்டு தரிசித்து இறைவனேப் பற்றி நினேவுபடுத்திக் கொள்ளலாம். கோயிலுக்கு வருகின்றவர்கள், வர இயலாதவர்கள், வரவிருப்பமில்லாதவர்கள் அனேவருக்குமே ராஜகோபுரம் தரிசனம் கொடுத்து பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது. ஆலயம் அமைப்பதும், அதில் அழகிய

தொரு ராஜகோபுரத்தை நிர்மாணிப்பதும் போற்றுதற்குரிய ஒரு பெரும் தொண்டு.

அசுத்தமே இல்லாத ஓர் சிறந்த நாடு சிங்கப்பூர். பலதரப்பட்ட மக்கள் வாழும் சிங்கப்பூர் எல்லா விஷயங்களிலும் உலகத்தின் கண், ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சர்வ சமயங்களும் தங்களுடைய தொண்டினை செவ்வனே இயக்க அரசாங்கமும் உறுதுணை நிற்பது மிகவும் பாராட்ட வேண்டிய ஓர் அம்சமாகும். இந்த அமைப்பிலே இந்து சமய அறக்கட்டளையினர் ஆலயங்கள் தோறும் சமயத் தொண்டு செய்துகொண்டு வருவதை நான் நேரில் வந்திருந்த சமயம் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு பாராட்டினேன். இந்து சமய அறக் கட்டளை மேலும் மேலும் சிறப்புடன் இயங்கி மக்களை நல்வழிப்படுத்தி நாடு நலமுற இறை வனருள் கிடைக்கட்டும்.

அநேகமாக பாரதம், மற்றும் கிழக்கத்திய நாடுகளில் உள்ள ஆன்மீக எண்ணங்கொண் டோர் அனைவருக்கும் உயர்திரு கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களை நன்கு தெரிந்திருக்கும். அப் பெரியாரை நேரில் கண்டிருக்கிறேன். நல்ல பழுத்த பழம். இளைஞனுக்கு உள்ள கெட்டி யான இதயம். குழந்தை போன்ற குணமுடைய வர். சலிப்பற்று உழைப்பவர். ஆராய்ந்து அறிந்து எதையும் சாதிக்கும் திறமையுள்ளவர். ஆயிரம் பிறைகளை கண்டும் திடமான உள்ளத் தோடு திருவருட்தொண்டு செய்து கொண்டிருப்ப வர். தானத்தில் இவர் கர்ணனே! தருமத்தில் இவர் யுதிஷ்டிரனே! பக்தியில் ப்ரஹலாதனே! இறைவனிடத்தில் உள்ள நம்பிக்கையில் இவர் துருவனே! என்று சிறிது நேரம் பழகிய எனக்கு தோன்றுமானால், நெருங்கிப்பழகும் வாய்ப்புடையவர்களுக்கு அவரோர் நெல்லிக்கனி என்பதில் ஐயமில்லை.

ஒரு சமயம் அவரை நேரில் அலுவலகத்தில் கண்டேன். கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். "இந்த வயதில் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறீர்களே? என்று கேட்டேன். சிரித்துக் கொண்டே பெரு மிதத்துடன் கூறினர் "சாமி! உடலில் — உள்ளத் தில் தெம்பு உள்ளவரையில் நியாயத்துடன் நேர்மையுடன் சத்தியத்திற்கு பயந்து நெறி தவறாமல், உழைக்கவேண்டும். சம்பாதிப்பதில் தேவைக்கு மிகுதியை ஆண்டவனுக்கும் அடியார் களுக்கும் செலவு செய்யவேண்டும். எனக்குப் பாடத் தெரியாது, மேடை ஏறிப்பேசத் தெரியாது. ஏதோ என்னால் முடிந்த அளவு அவனால் கொடுத்த இப்பிறவியினை வைத்துக்கொண்டு அவனுக்காகவே தொண்டு செய்து கொண்டு வருகிறேன். எல்லாம் அவன் செயல். என்னால் ஒன்றுமில்லை."

அன்னாரின் அடக்கத்தையும் அமைதியையும் ஆன்மீகத்தில் உள்ள பற்றினையும் அதற்காகவே உழைக்கும் அவருடைய சலியாத உழைப்பினை யும் கண்டு உள்ளத்தில் மகிழ்ந்து வியப்புற்றேன்.

சிங்கப்பூரிலே அமைந்திருக்கும் பெருமாள் ஆலயத்தில் பல கைங்கர்யங்கள் செய்து வந்து கொண்டிருக்கும் இப்பெரியார் ராஜகோபுர நிர் மாணத்திற்கும் முழுப்பொறுப்பு ஏற்று வெற்றியாக பூர்த்தி செய்திருப்பது போற்றுதற்குரிய ஒரு பெரும் மகத்தான தொண்டு. ராஜகோபுரம் எப்படி வானளாவி நிமிர்ந்து நிற்கின்றதோ அதுபோல மெய்யன்பர், கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களின் புகழும் இறைவனருளால் நிமிர்ந்து நிற்பதை கண்கூடாகக் காண்கின்றேன். வாழ்க அவர் சமயத் தொண்டு! வானளாவ வாழ்க அவர் புகழ்! வாழ்க இந்து சமயம்.

உயர்ந்த பண்புக்கு அடிப்படை சில்லறைத் தியாகங்கள்.

—எமர்சன்

**தெ**ய்வத்தை எதிர்த்துச் செல்வம் தேடுதல் தீமை. ஆனல் தெய்வத்தை நம்பிச் செல்வம் சேர்க்க வேண்டும். இது என் கொள்கை.

—பாரதியார்

**ஜீ**வனுக்குச் சுதந்திரம் இல்லை. ஆண்டவனைச் சார்ந்திருப்பதே ஜீவனுக்குரிய நிலை. ஜீவன் வாழ்வதும் இயங்குவதும் எல்லாம் இறைவனின் அருளால்தான்.

—ஸ்ரீராமானுஜர்

**ஆ**சையால் உந்தப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல் ஓடித் திரிகிறார்கள்.

—புத்தர்

**ப**ங்கியும் புகையிலையும் அபினியும் கலியுகத்தின் யமதூதர்கள்; ஈசனையும் அவனை வழிபடும் பக்தி மார்க்கத்தையும் மறந்த மனிதப் பதர்கள் இந்த யமகிங்கரர்களின் விடாப்பிடியில் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

—கபீர்தாசர்

**உ**ன்னல் ஆற்ற இயலாதது என்று உலகில் ஒன்று உண்டா? உன்னை என்னவென்று நினைத்துக்கொண்டாய்? மாபெரும் ஆற்றல்திரளான இறைவனின் துளி அல்லவா நீ? அளப் பெரும சோதிப் பெருவெள்ளமாகிய இறைவனிடமிருந்து எழுந்த பொறி அல்லவா நீ? எப்படி நீ ஆற்றல் இல்லாதவனாக இருக்க முடியும்?

—வினோபா பாவே

# கண்ணனின் குழலோசை

ர. வேங்கடரத்தினம்

ர. வேங்கடரத்தினம்



தூய வலம்புரிச் சங்கினை ஊதும் திருமால் கிருஷ்ணனுகத் தோன்றிப் புல்லாங்குழல் வாசித்த பொழுது நிகழ்ந்த அற்புதங்களைக் கேளீர் என விளித்து, விஷ்ணுசித்தர் வரிசையாகக் கூறி மகிழ் கிருர்.

வானில் திரியும் கந்தர்வர்களின் கானமெல்லாம், கண்ணனின் குழலோசை முன் நிற்க மாட்டாமல் ஒழிந்ததாம். தேவகிமைந்தன், அமரர்ஏறு, செந் தாமரைக் கண்ணன், தோள்வலி மிக்க தேவாதி தேவன் வேய்ங்குழல் எடுத்து ஊதக் கேட்ட கந்தர்வர்கள் கண்ணனின் அமுத இசை என்ற வலையில் கட்டுண்டு, சுருக்குண்டு, இசையில் மயக்கமுற்று, வெட்கமும் கொண்டு, தளர் வடைந்து ஒடுங்கிப்போயினர். ஏதும் செய்ய இயலாத நிலையில் தடுத்தாட்கொள்ளப்பட்டவர் களாக வயம் இழந்து நின்றனர்.

பெரியாழ்வார் வானைத்தாண்டி நிகழ்ந்த அற் புதம் எனப் புவியில் நிகழ்ந்ததைப் பேசுவார். பாம்புப் பள்ளியான் குழல் ஊதியபோது, இசை யின் எதிரொலி தேவலோகம் வரையிலும் சென்றதாம். வேள்வியில் வழங்கப்பெறும் அவிசை உண்ணும் விண்ணவர் அதை முற்றும் மறந்து இசையின் பின்னேடு ஆயர்பாடியினுள் புகுந்து, நாவின் சுவையினைச் செவியினுள் பருகி மகிழ்ந்து, கோவிந்தனேடு பின்சென்றனராம். இடைவிடாமல் கண்ணன் பின்னேடு போய் இசையமுதம் உண்டனர்.

புவியுள்நான் கண்டதோர் அற்புதம் கேளீர்
பூணி மேய்க்கும்இளங் கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத் தணையான்குழல் ஊத
அமர லோகத் தளவும்சென் றிசைப்ப,
அவியுண மறந்து வானவர் எல்லாம்
ஆயர் பாடி நிறையப்புகுந் தீண்டிச்
செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து,
கோவிந்த னைத்தொடர்ந் தென்றும்
விடாரே.

மாடுமேய்க்கும் இளங்கோபாலரின் கூட்டத்து நடுவே கண்ணன் குழல் ஊத, அமரர் நந்த கோகுலத்தில் நுழைந்து கூட்டமாய்த் திரண்டு இசையின்பம் பருகினரே!. அன்று முதல் கண்ணனை விடாமல் பின்பற்றுவதாயும் பாசுரம் பேசும்.

கருங்கண் தோகைமயிற் பீலி யணிந்து
கட்டிநன் குடுத்த பீதக ஆடை,
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒரு வன்குழல் ஊதின போது
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும்வளர் கொம்புகள் தாழும்,
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிஅவை பெய்யும் குணமே.

பெரியாழ்வார் திருமொழியில் வரும் இந்தப் பாசுரம் கண்ணனின் மோகன கீதத்தை மரமும் செடியும் கூடச் சுவைத்து இன்புற்றதாகக் கூறும். மரங்கள் மாயவனின் மதுரகீதம் கேட்டு, அசைவின்றி நின்று தேனைத் தாரையாகப் பெருக்கு மாம். செடிகள் பூக்களை உதிர்க்கும். நிமிர்ந்து நிற்கும் மரக் கிளைகள் தாழ்ந்து பணிந்து வணங் குவது போல் பாட்டிற்கு வளைந்து கொடுக்கும்; கண்ணனை நோக்கி உருகும். கிளைகள் கரம் கூப்பும். பார்த்துப் பார்த்துக் கண்ணன் நிற் கும் பக்கமாக இவ்வளவும் செய்யும் அந்த மரங்கள்!

கறுத்த கண்கள் உள்ள மயிலிறகை அழகுறப் பூண்டு, பட்டாடையும் பொன்னகைகளும் அணிந்து எழிலுருவாய்த் திகழும் இடையர்கோமான் குழல் ஊதியபோது, தேவர்கள் முதல் கந்தவர்களைக் கடந்து, மரம் செடி கொடி வரையில் ஜீவ ராசிகள் யாவுமே தம் வயம் இழந்து நின்றன என்பது ஆழ்வாரின் ரசானுபவம்.

தும்புரு நாரதாதியர் வீணையை இனிமேல் தொடோம் என்றனராம். கின்னரர் கண்ணன் குழலோசை முன் நிற்கமாட்டாமல் தவித்தனர் என்பார் ஆழ்வார்.

குழலின் ஓசைசெவி யைப்பற்றி வாங்க
நன்ன ரம்புடைய தும்புரு வோடு
நாரதனும் தம்தம் வீணை மறந்து,
கின்ன ரமிது னங்களும் தம்தம்
கின்ன ரம்தொடு கிலோம்என் றனரே.

இசை இரட்டையர் ஆகிய கின்னரர் இசையொழிந்து போயினர். குழலின் முன் 'யாழ் நில்லாது போயிற்றும். நாரதரும் தும்புருவம் தம் தம் கலை மறந்து போயினர்.

விலங்குகள், புள்ளினம் என்ன செய்தன? கண்ணனது இன்னிசைக்கு மரமும் செடியும் தலை வணங்கும்போது மாடும் புள்ளும் ஒதுங்கி நில்லுமோ?

பறவைக் கூட்டங்கள் கூட்டினை விடுத்துக் குழலூதிய கண்ணனை நோக்கிக் காட்டினுள் புகுந்தன. பசுமாடுகள் காலைப் பரப்பிக்கொண்டு வசதியாக அமர்ந்து இசையைச் செவிசாய்த்துப் பருகின. ஓர் ஈ வந்து அமர்ந்தால்கூடக் காதை அசைக்காமல் கண்ணனின் இன்னிசையின்பம் துய்த்தன.

கோவிந்தன் குழல்கொண்டுதின போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி யாட்டகில் லாவே.

பாட்டைக் கேட்ட மான்கள் மருட்சியுற்று மேய்ந்துகொண்டிருந்ததை விடுத்து, வாயில் மெல்லும் புல் கடைவாயின் வழியே வழிய, தீட்டும் ஓவியம் என அசையாமல் நின்றனவாம்.

மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும்கடை வாய்வழி சோர,
இரண்டு பாடும்துலுங் காப்புடை பெயரா
எழுதுசித் திரங்கள் போலநின் றனவே.

குழல்கொண்டு ஊதிய கண்ணனைச் சுற்றி ஆய்ச்சியர், அமரர், மரங்கள், மான்கள், மாடுகள், புள்ளினம் யாவரும் உளர்; யாவும் உள்ளன.

## மாம்பழ வாயினிலே!

கண்ணனது இன்னிசைக்கு மாடும் மரமும் மட்டுமோ அல்லது கின்னரரும் கந்தர்வரும் மட்டுமோ கட்டுப்பட்டு மற்றையோர் விடுபட்டாற்போல், மகாகவி பாரதியார் கிருஷ்ணனின் இன்னிசையினைப் பாராட்ட உற்சாகத்தோடு ஆள் சேர்ப்பார். செந்தாமரை முகமண்டலம், செந்தாமரை வாயில் செம்பவழ அதரங்கள் என்னும் பழைய வருணனைகளை விடுத்து, அழகுச் சிறுவன் கண்ணபெருமானின் இனிய குழலோசையினை அவர் வருமாறு பாடுவார்:

மாம்பழ வாயினிலே — குழலிசை
வண்மை புகழ்ந் திடுவோம்.

கிருஷ்ணனின் மாயக்குழல் அமுதத்தை அவரும் அனுபவிப்பவர். மயக்கும் தன்மையும் தண்மையும் நிறைந்த மோகன இசை கொண்டு கண்ணன் பெண்களை ஏமாற்றுவதைத் தெரு நடுவே பார்க்கலாம்:

புல்லாங் குழற்கொண்டு வருவான் — அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே — அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.

கண்ணன் திருட்டுத்தனமாய்க் குழலை நிறுத்திவிட்டு, ஒரு காரியம் செய்திடுவான்! கண்மூடி வாய் திறந்த நிலையில் உள்ள பெண்களின் வாய் நிறையக் கட்டெறும்புகளைப் பிடித்து விட்டுவிடுவான்.

அங்காந் திருக்கும் வாய்தனிலே — கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்!

இதெல்லாம் பெண்களும் பொறுத்துக்கொள்ளத்தக்க விளையாட்டு. ஆனால், வேய்ங்குழல் நாதம் வெளியினின்று வரத் தொடங்கிவிட்டால் ஆயர் சிறுமியர் தவியாய்த் தவித்துப் போவர். வீட்டிலும் உள்ளம் தரியாது. உள்ளத்தை மயக்கும் மோகனகீதம் அழைக்கும்.

இசை எங்கிருந்தோ ஒலிக்கும். எங்கிருந்து ஒலி வருகிறது என்பது புரியாது. யமுனையாற்றின் தெய்விக அலைகள் எழுப்பும் அமர கீதமோ! அன்றி ஆற்றங்கரையில் அமைந்துள்ள பூம்பொழிலினின்று எழுவதோ எனத் திகைப்பர்.

அலை ஒலித்திடும் தெய்வ — யமுனை
ஆற்றி னின்றும் ஒலிப்பதுவோ? — அன்றிக்
கலையொலிக்கும் பொழிலிடை நின்றும்
எழுவதோ இஃ தின்னமு தைப்போல்?

பெண்களைப் பித்தாக்கும் கண்ணனது வேய்ங் குழல் ஓசையைப் பாரதியார் அமுது என்றும் நஞ்சு என்றும் ஒரே அடியில் கூறுவார்:

கண்ணன் ஊதிடும் வேய்ங்குழல் தானடீ
காதிலே யமு துள்ளத்தில் நஞ்சு!
பண்ணன் றும்அடி! பாவையர் வாடப்
பாடி எய்திடும் அம்படி தோழீ!

செவிக்கு இன்னமுதாக ஒலிக்கும் கண்ணன் குழலோசை, நெஞ்சிலே நஞ்சாக வேலைசெய்கிறது என்று தோழியினிடம் நாயகி புலம்புவாள்.

காரிகையரின் உள்ளத்தில் இருப்பவன் கண்ணபிரான். அவர்களுக்கு எந்த ஒலியைச் செவிமடுத்தாலும், கிருஷ்ணன் குழல் ஊதுகிறுப் போன்றதொரு மயக்கு! ஆகவே, பாரதி "நந்தலாலா" என்ற பாடலில்,

கேட்கும் ஒலியில் எல்லாம் — நந்தலாலா —
நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா

என்று பாடுவார். கண்ணபிரானின் மாம்பழ வாயினின்று எழும்பும் தீஞ்சுவைக் குழல்நாதம் எங்கும் நிறைந்த நிற்கும் பரம்பொருளின் குரலாக மங்கையர் உள்ளத்தில் கேட்கும்.

# ஸ்ரீசுதர்சனம்







"எங்கும்; எதிலும்; அனைத்தும் நானே" என்று கீதையில் முழங்கினான் கண்ணன். இதனை மெய்ப்பிக்கும் வண்ணம் எத்தனை எத்தனையோ வடிவங்களில் திருமால் கோலம் கொண்டிருப்பதைக் காண்கிறோம். வாமனனாகவும், மண்ணையும் விண்ணையும் அளாவிய விசுவ ரூப, திருவிக்கிரம வடிவினனாகவும் காண்கிறோம். இவை யனைத்தும் ஒவ்வோர் தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தத்துவ வடிவங்களில் ஒன்றே, திருமாலின் சுதர்சன சக்கர வடிவமும்.

மகாவிஷ்ணுவின் கரங்கள் ஒன்றில் காணப்படும் சக்கர ஆயுதத்தில் உறையும் தேவனே **சுதர்சனர்** எனப்படுகிறார். அந்தச் சக்கரம்தான் **சுதர்சன சக்கரம்** எனப்படுகிறது. திருமாலின் ஆயுதங்களில் ஒன்றான சக்கரத்திற்கு உரிய தெய்வம் என்பதால், சுதர்சனர் உக்கிர வடிவினர்; வைணவர்கள் சுதர்சனரை **சக்கரத்தாழ்வார்** என்றும் கூறுவர். விஷ்ணுவின் சக்கர அம்சத்திற்குச் **சக்கரராயர்** என்றும் ஒரு பெயர் உண்டு.

காஞ்சியும், திருக்குடந்தையும் திருமாலின் சக்கர அம்சத்துக்குச் சிறப்பாக உரிய தலங்கள். காஞ்சியில் அஷ்டபுஜர்— எண்கரங்கள் கொண்ட பெருமாள், திருமாலின் சக்கர சக்தி எனப்படுகிறார். இவருக்கு சக்கரராயர் என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. குடந்தையில் கோயில் கொண்டுள்ள சக்கரபாணி, சுதர்சனரின் வடிவமே என்று கூறுவர்.

''சில்ப ரத்தினம்'' என்னும் நூல், சுதர்சனரை ''சக்கரரூபி விஷ்ணு'' என்றே குறிப்பிடுகிறது. இதிலிருந்து சுதர்சனர், விஷ்ணுவின் ஓர் அம்சமே என்பதை அந்நூல் வலியுறுத்துகிறது.

சுதர்சன வழிபாட்டின் முக்கிய நோக்கம், பரம்பொருளை சக்கர—யந்திர வடிவிலே அமர்த்தி வழிபடுவதே யாகும். பரம்பொருளை உருவமற்ற ஒரு யந்திரத்தில் அமர்த்தி வழிபடும் நெறி, வைணவத்தில் மட்டுமின்றி பிற சமயங்களிலும் இருக்கின்றன. சக்தியைப் போற்றுபவர்களும், சிவனை வழிபடுபவர்களும், முருகனடியார்களும், பௌத்தர்களும், ஜைனர்களும்கூட தத்தம் உபாசனைக் குரிய தெய்வங்களைச் சக்கரங்களில் அமர்த்தி வழிபடுகின்றனர்.

வடக்கே குப்தர்கள் காலத்திலேயே சுதர்சனர் வழிபாடு சிறப்புப் பெற்று விளங்கியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பயானா என்ற இடத்தில் கண்டெடுக்கப் பெற்ற குப்தர் நாணயங்களில் சுதர்சன வடிவம் பொறிக்கப் பட்டுள்ளது. சுதர்சனர், போர்த் தெய்வம். எனவே குப்தப் பேரரசர்கள், அவ் வீரக் கடவுளைப் போற்றியதில் வியப்பில்லை. குப்தர் காலத்து சுதர்சனர் சிற்பங்களுக்கு இரு கரங்களே உள்ளன. பிற் காலத்துச் சிற்பங்களுக்கு நான்கு கரங்கள் முதல் பதினாறு கரங்கள் வரை காணப்படும்.

தென்னகத்தில் சுதர்சன வழிபாடு தொன்று தொட்டு இருந்து வந்த போதிலும், ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகர் காலத்தில் மிகப் பிரபல மடைந்து, அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம் போன்ற பல பிரிவினராலும் ஒரு முகமாக ஏற்கப்பட்டது.

அந்த மகான் இயற்றிய ''ஸ்ரீசுதர் சனாஷ்டகம்'' இணையற்ற படைப் பாகக் கருதப்படுகிறது. திருமா லின் கரத்திலுள்ள சக்கரத்தி லேயே வழிப்பவராகக் கருதி, அவ ருடன் சேர்த்தே சுதர்சனரையும் வழிபட்டு வந்த பக்தர்கள், ஸ்ரீ தேசிகர் காலத்திற்குப் பிறகு ஸ்ரீ சுதர்சனத்தை சிலை வடிவிலும் வழி படத் தொடங்கினார்கள். ஆகவே, இன்று நாம் ஆலய, சிற்ப, படிமங்களில் பல்வேறு கோலங்களில் சுதர்சனரின் வடி வங்களைக் காண்கிறோம். காஞ்சி, கண்டியூர், தாடிக் கொம்பு, மோகூர், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீரங்கம், திருமயம், கள்ளக் குறிச்சி ஆகியவிடங்களிலுள்ள வைணவ ஆலயங்களில் சிறப்பான சுதர்சனர் வடிவங்கள் உள்ளன. இச் சிற்பங்கள் அனைத்தும் ''சில்ப ரத்தினம்'' கூறும் வகையில் கம்பீரத் தோற்றத்தில் பதினாறு கரங்களுடன் காண்கின்றன. இச் சிற்பங்களில் கிளர்ந்தெழுந்து வரும் ஆவேசத் தோற்றத் தையும், தீச் சுடர் போன்ற கேச அமைப்பையும், பொலிவான அணிகலன்களையும் காணலாம். சுதர்சனரின் பதினாறு கரங் களிலும் சக்கரம், சங்கு, தனுசு, பரசு, அசி, பாணம், சூலம், முஸ லம், கதை, அங்குசம், அக்னி, கட்கம், கேடயம், ஹலம், குண் டம் முதலிய ஆயுதங்கள் உள்ளன.

சில ஆலயங்களில் சுதர்சன விக்கிரகங்களுக்குத் தனி சந்நிதி அமையப் பெற்றிருக்கின்றன,







ஜனங்களின் கருத்தில் ஸ்ரீ சுதர்சனர் பிரதானமான ஒரு பிரார்த்தனை தெய்வ மாகவே இருந்து வருவ தால், இந்த சந்நிதிகள் எப்போதுமே கலகலப் போடு இருந்து வரு கின்றன.

பெரும்பாலான சுதர் சன சக்கரங்களில் கோண அமைப்பு பிரதானமாகத் திகழ்கிறது. முக்கோணம், ஷட்கோணம் ஆகியவற் றுக்குள் சுதர்சனரை அமர்த்தி வழி படுவது சிறப்பாகக் கருதப்படு கிறது. வீட்டுப் பூஜைகளி லும் சுதர்சன சக்கரம் விசேஷ இடம் பெறுகிறது. பேராபத்துக்களிலும், தீரா நோயில் வாடும் போதும், எடுத்த காரியங் களில் இடையூறு ஏற்படும் போதும் ஸ்ரீ சுதர்சன மூல மந்த்ர ஜபம், பூஜை, ஹோமம் முதலியன செய்து பெரும் பலனை அடைவோர் பலர். சமூகத் தில் உழலும் மக்களுக்கு ஸ்ரீ சுதர்சன ஆராதனை ஒரு வரப்பிரசாதமே!

—வி. கோபாலன்.



# பகவத் கீதையின் பெருமை

## ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் உபந்நியாசம்

சரீரம் வீணுகப் போய்விட்டால் அப்புறம் பகவான் நாமாவைச் சொல்வது என்பது கூட முடியாது. கைகால் முடக்கிக் கொண்டு விட்டால் பிரதட்சணம் பண்ண வேண்டும். நமஸ்காரம் பண்ண வேண்டும் என்று நினைத்தால்கூட முடியாது. ஆகவே, காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்பது போல இந்த உடம்பு நன்ருக இருக்கும் போதே தர்மம் என்கிற பயிரை நிறைய விளைத்துக்கொள்ள வேண்டும். "குரு தர்ம:" "சத்காரியங்களைச் செய்". தர்ம காரியங்களை எல்லாம் செய்து ஈஸ்வரார்ப்பணம் பண்ணு" என்று சொல்லியிருக்கிறது. எதற்காகத் தர்மம் செய்யவேண்டும். ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டால் என்ன ஆகும்?

"தஸ்ய கார்யம் ந வித்யதே"

என்று அந்தப் புத்தகத்தில் தானே சொல்லி இருக்கிறது? அப்படி இருக்க இங்கே குரு என்று சொல்வானேன்? காரியம் இல்லாத நிலை தானே உயர்ந்தது? நினைவு என்ற ஒன்று எதற்காக? பேச்சு என்ற ஒன்று எதற்காக? காரியம் என்ற ஒன்று எதற்காக? மனோவாக்குக் காயங்களுடைய அசைவு தானே இது எல்லாம்? ஒரேயடியாக, அசைவு இல்லாமல், கண்மூடி மௌனியாக, தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதே நல்லது என்று ஓர் இடத்தில் சொல்லிவிட்டு, இங்கே காரியம் செய் என்று சொல்வானேன்? "சண்டை சமயம் அப்பா இது. சண்டை நடக்கிற சமயத்தில் காரியம் செய்தாகவேண்டும்" என்கிருர் பகவான். என்ன சண்டை? இந்த க்ஷேத்திரத்தில் ஒருவருக்கொருவர் முரண்பாடு உள்ளவர்கள்.

ஸமவேதா :

சேர்ந்திருக்கிருர்கள். எப்படி?

உபநிஷத்துக்களில் தேவாசுர யுத்தம் என்று சொல்லியிருக்கிறது. தேவாசுரர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளத் தாயாராக எதிரும் புதிருமாக நிற்கிருர்கள் என்று வருகிறது. அந்த இடத்துக்கு ஆசார்யார் பாஷ்யம் பண்ணும்போது, "இந்தத் தேவாசுரர்கள் யார், யுத்தம் எங்கே என்ருல் நித்தியம் நம் மனசில் தான் தேவாசுர யுத்தம் நடக்கிறது, புராணத்தில் சொல்லும்படியான யுத்தம் இல்லை இது" என்கிருர். உபநிஷத்துக்களிலே சொல்லும் தேவாசுரயுத்தம் என்பது நமக்குள்ளேயே இருக்கிறது. ஒரு பக்கம் யாரோ நல்ல காரியங்களைப் பண்ணு என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. இன்னொரு பக்கம் கெட்ட காரியங்களைப் பண்ணு என்று யாரோ தூண்டிவிடுகிற மாதிரி இருக்கிறது. இப்படிப்பட்ட கெட்ட விருத்திகளுக்கும் நல்ல விருத்திகளுக்கும் நம் மனத்தில் நித்யம் சண்டை நடக்கிறது. நல்ல விருத்திதான்



தேவர்கள், கெட்ட விருத்தி தான் அசுரர்கள். முக்கால்வாசி நாள் அசுரர்களே ஜயிக்கிருர்கள். என்றைக்கோ தேவர்கள் ஜயிக்கிருர்கள். அப்போது தான் நமக்கு ஆனந்தம் இருக்கிறது. அசுரர்களே ஜயிக்கவேண்டும் என்று முதலிலே எண்ணுகிருேம். ஆனல் அசுரர்கள் ஜயித்த பிறகு துக்கம் வருகிறது. "நம் புத்தி வீணுகப் போச்சே" என்று அழுகிருேம். நல்ல சித்த விருத்திக்கு ஜயம் வந்தால்தான் நமக்கு ஆனந்தம் உண்டாகிறது.

இரண்டு குழந்தைகள், ஒன்றினிடத்தில் இருக்கும் வாழைப்பழத்தை இன்னென்று பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டுவிட்டது. இந்தக் குழந்தை அழ ஆரம்பித்தது. அப்போது இன்னெரு குழந்தை அந்தப் பக்கம் வந்தது. உடனே அது தன் கையில் இருக்கும் வாழைப்பழத்தை அதனிடத்தில் கொடுத்துவிட்டது. இப்போது வாழைப்பழத்தைப் பிடுங்கிக் கொண்ட குழந்தைக்குச் சந்தோஷம் இருக்கும் என்ருலும், அதனுடைய சந்தோஷத்தைவிடத் தன் கையில் இருக்கும் பழத்தைக் கொடுத்த குழந்தைக்கு இருக்கும் ஆனந்தந்தான் சாந்தத்தோடு அதிகமாக இருக்கும். சாந்தம் என்பதே தெய்வ விருத்தி.

இப்படி ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு சரீரத்துக்குள்ளும் ஒவ்வொரு நாளும் தேவாசுர யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

இப்படி யுத்தம் பண்ணுகிற ஆசாமியே இல்லாவிட்டால் கண்மூடி மௌனியாக இருந்து விடலாம். சண்டை இருக்கிறவரைக்கும் நல்ல காரியங்களைச் செய்துகொண்டுதான் வரவேண்டும். நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வந்தால் தானே அசுர விருத்தி குறைந்து போகும். தான தர்மம் பண்ணுவது, ஊரிலே இருக்கிறவர்களுக்கு உபகாரம் பண்ணுவது என்கிறபோது அதனல் புகழ் தானே உண்டாகும். என்ருலும் இந்தப் புகழிலே ஆசை பிறந்து விட்டால் நாம் செய்கிற நல்ல காரியங்களே அசுர விருத்தியாக மாறினலும் மாறிவிடும். ஆகவே அசுர விருத்திக்கு இடம் இல்லாதவாறு சாந்தம் ஏற்படுகிறவரைக்கும் தர்ம காரியங்களைச் செய்யவேண்டும்.

அர்ஜுனன் தனக்குச் சாரதியாக உள்ள

கிருஷ்ணனைப் பார்த்து,

"சிஷ்யஸ் தேஹம் ஸாதி மாம்"

"நீயே சரணம். உன்னிடத்தில் நான் சரணுகதி பண்ணிவிட்டேன். என்னை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும்" என்று கேட்கிறுன்.

அர்ஜுனன் தேரின் நடுவில் உட்கார்ந்திருக்கிறுன். ஆசாரியன் வண்டி ஒட்டுகிறுன். வண்டி ஓட்டுகிறவன் குரு. வண்டியின் உள்ளே எஜமானுக உட்கார்ந்திருக்கிறவன் சிஷ்யன். நல்ல ஸ்பஷ்டமாக வண்டியின் முன்னுல் தேர்க்காலில் உட்கார்ந்துகொண்டு குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிற சாரதியாகிய கிருஷ்ணனைப் பார்த்து, "அஹம் – நான். தே – உனக்கு, சிஷ்ய – சிஷ்யனுகிறேன், நான் உன்னைச் சரணுகதி பண்ணி விட்டேன். ஸாதிமாம் – என்னை நல்வழிப் படுத்துவாயாக; என்னுடைய அஞ்ஞானத்தைப் போக்குவாயாக" என்று அர்ஜுனன் பிரார்த்திக்கிறுன்.

அப்படிப் பிரார்த்தித்துக்கொண்ட பிறகு பகவான் நிறையத் தத்துவ உபதேசம் பண்ணுகிறுர், அர்ஜுனனுக்கு. அந்த உபதேசங்கள் என்றைக்கோ பண்ணினவை. ஆனுலும் அன்று முதல் இன்று வரையில் அந்த உபதேசம் அழியாமல், உலகத்தில் அநேகமாக எல்லாப் பாஷைகளிலும் எல்லாத் தேசங்களிலும், பாராயண கிரந்தமாக விளங்குகிறது.

கீதம் என்றுல் பாட்டு. பெரிய இங்கிலீஷ் கவி ஒருத்தன் அந்தப் பகவத் கீதையை அப்படியே இங்கிலீஷ் பாட்டாகவே பண்ணி, "ஸாங் ஸெலஸ்டியல்" (Song Celestial) என்று பேர் கொடுத்திருக்கிறுன். தமிழிலும் கூட, கீதா சாரம், கீதா சாரத் தாலாட்டு என்று அநேக புஸ்தகங்கள் கீதையின் சாரத்தை அப்படியே பாட்டாகச் சொல்லுகின்றன. மகாராஷ்டிரத்தில் ஞானேச்வரி என்று ஒரு கிரந்தம். மகாராஷ்டிரர்களுக்கு இந்த ஞானேச்வரிதான் உயர்ந்த தத்துவ நூல். இது முழுக்க முழுக்கக் கீதையின் சாரந்தான். கீதைக்கு வியாக்யானம் போல, உரை போல, இந்த ஞானேச்வரி என்ற புத்தகம் மகாராஷ்டிர பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. அப்படி ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு பாஷையிலும் இந்தக் கீதை விளங்கிக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ பேர், எத்தனையோ விதமான உபதேச கிரந்தங்களைச் செய்திருக்கிறுர்கள். உலகம் சிருஷ்டியானது முதல் இன்று வரையில், "நல்ல விஷயத்தைக் கேட்கவேண்டும்; உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும்; தர்மம் இன்னது என்று தெரியவேண்டும்" என்று அநேகம் பேர் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டு வருகிறுர்கள். இவர்களுக்காக அநேக விதமான உபதேசங்களும் அவ்வப்போது செய்யப்பட்டு வந்திருக்கின்றன. புராரணங்களிலும் சரி, இதிகாசங்களிலும் சரி, கீதை என்ற பெயராலே உள்ள அநேக கிரந்தங்களிலும் சரி, பாரதத்தில் சாந்தி பர்வம் முதலிய பர்வங்களிலும் சரி அநேக உபதேசங்கள் இருக்கின்றன. பகவானே உபதேசம் பண்ணியிருக்கிற வேறு இடங்களும் நிறைய இருக்கின்றன. ஆனுலும் இந்த இடத்தில் குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்குப் பண்ணின உபதேசமாகிய கீதைக்கு மட்டும் ஏன் இவ்வளவு புகழ் ஏற்பட்டிருக்கிறது?

"வண்டி ஓட்டுகிறவனைப் பார்த்து, வண்டியில் உட்கார்ந்திருக்கிறவன் உபதேசம் கேட்கிறுன். ஆசார்யன் வண்டி ஓட்டுகிறவன், சிஷ்யன் வண்டிக்குள் இருக்கும் எஜமானன். இந்த நிலையிலே உபதேசம் செய்த கிரந்தம் இது என்கிற ஒரு சிறப்பு மாத்திரம் அல்ல. அதற்கு முந்தி அர்ஜுனன் சொல்கிறுன்:

"ஸேனயோர் உபயோர் மத்யே ரதம் ஸ்தாபய" என்கிறுன்.

"யுத்தம் பண்ணுவதற்கு யார் யார் வந்திருக்கிறுர்கள் என்று பார்க்கிறேன். நடுவில் என் தேரைக் கொண்டு போய் நிறுத்து" என்று வண்டி ஒட்டுகிற பகவானைப் பார்த்து அர்ஜுனன் சொல்கிறுன்.

யாராவது ஒருத்தர் உபந்நியாசம் பண்ணிக் கொண்டே இருக்கிறபோது கொஞ்சம் தூற்றல் போட ஆரம்பித்தால் போதும். கேட்கிறவர்கள் பலமாக மழை வந்துவிட்டால், "எங்கே சட்டை துணி, உடம்பெல்லாம் நனைந்து போய் விடுமோ?" என்று அங்காங்கே எழுந்திருந்து ஓட ஆரம்பித்துவிடுவார்கள். யாராவது ஒரு கல்லை எடுத்துக் கூட்டத்தில் போட்டால் கூட, உடனே, "உபந்நியாசமும் ஆச்சு, கேட்டு மாச்சு" என்று எழுந்து ஓடிவிடுவார்கள். பரதேசிக் கூட்டம் மாதிரி அப்படியே கலைந்து விடுவார்கள்.

ஆனுல் அர்ஜுனன், கிருஷ்ணனிடத்தில் உபதேசம் கேட்டானே, அந்த உபதேசம் எந்த இடத்தில் நடந்திருக்கிறது? தத்துவ உபதேசம், ஞானேபதேசம் என்றுல் அமைதியாக இருக்கும் நதிக்கரையில், ஆலமரத்தடியில், குருவும், சிஷ்யனும் ஏகாந்தமாக உட்கார்ந்திருக்கிற இடத்தில் அநேகமாக நடக்கும். சாந்தமாக, பொறுமையாக எல்லாரும் இருக்கிற இடத்திலே தத்துவ விசாரம் பண்ணுவார்கள். ஆனுல் பகவத்கீதை உபதேசத்திலே என்ன விசேஷம் என்றுல், அடுத்த க்ஷணத்தில் தலை எங்கே போகிறது என்று தெரியாது; தலை போகிற சமயத்தில் சிஷ்யன் உபதேசம் பண்ணு என்று கேட்கிறுன். ஆசார்யனும் உபதேசம் பண்ணுகிறுனே, இது மாதிரி வேறே எங்கேயாவது உபதேசம் செய்திருக்கும் படியான இடம் உண்டா?

ராம கீதை என்று ராமபிரான், ஆஞ்சநேயருக்கு உபதேசம் பண்ணின கீதை ஒன்று இருக்கிறது. சிஷ்யன் என்று பார்த்தால் அர்ஜுனனைக் காட்டிலும் ஆஞ்சநேயர் எந்த விதத்திலும் குறைந்தவர் அல்ல. அந்தக் கீதையில் சொல்லியிருக்கும் தத்துவங்களைக் காட்டிலும், இதிலும் விசேஷமாக ஒன்றும் இல்லை. ஆனுல் உபதேசம் பண்ணின இடம் இருக்கிறதே, அதனுலேதான் இந்தப் பகவத் கீதைக்கு அதிக மகிமை வந்துவிட்டது.

மழை பெய்தால் சட்டை நனைந்துவிடுமே என்று ஓடிப் போய்விடுகிறது, மநுஷ்ய ஸ்வபாவம்; அப்படியிருக்க, யுத்த களத்திலே, எதிரி

களுடைய சைன்யத்திற்கு முன்னடி கொண்டுபோய் ரதத்தை நிறுத்தச் சொல்லுகிறன். அடுத்த கணம் தலைபோனாலும் போய்விடும். தலை போனாலும் போகட்டும். தத்துவத்தைத் தெரிந்து கொள்வோம்; தலை போகிற பரியந்தமாவது இதைத் தெரிந்து கொள்ளலாமல்லவா? தத்துவ விசாரந்தானே பிரதானமானது என்று உடம்பின் மேலே ஆசை இல்லாமல், உயிரின் மேலே ஆசையில்லாமல் அர்ஜுனன் கிருஷ்ணனைப் பார்த்து, "நான் உன் சிஷ்யன், எனக்கு உப தேசம் பண்ணு" என்று கேட்கிறன். கிருஷ்ண பகவானும் அந்த யுத்த களத்தில் இந்த உப தேசங்களைச் செய்திருக்கிறர்.

---

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவில்

## உபயங்கள்

| உபயம் | | உபயக்காரர் |
|---|---|---|
| 1. தமிழ் வருடப் பிறப்பு | — | திரு. கே. வீரராகவலு நாயுடு குடும்பத்தார்கள் |
| 2. ஸ்ரீ இராம நவமி | — | திரு. கே. வீரராகவலு நாயுடு குடும்பத்தார்கள் |
| 3. சித்திரா பருவம் | — | தெக்ஷ்ணத்தார்கள் திரு. கே. என். கண்ணப்பன் |
| 4. கிருஷ்ண ஜெயந்தி | — | யாதவ சங்கத்தார்கள் |
| 5. புரட்டாசி முதல் சனி வாரம் | — | திரு. ஜி. ரெங்கராஜ் நாயுடு |
| 6. புரட்டாசி இரண்டாம் சனி வாரம் | — | திரு. எஸ். சுந்தர் ராஜு |
| 7. புரட்டாசி மூன்ரும் சனி வாரம் | — | திரு. கிருஷ்ண ஒந்திரியார் |
| 8. புரட்டாசி நான்காம் சனி வாரம் | — | திரு. பி. கோவிந்தசாமிப்பிள்ளை |
| 9. புரட்டாசி ஐந்தாம் சனி வாரம் | — | திரு. கே. வெங்கடாசலம் |
| 10. திருக்கார்த்திகை | — | திரு. க. மு. நடேச படையாச்சி |
| 11. வைகுண்ட ஏகாதேசி | — | திரு. கோ. மருதமுத்து பிள்ளை |
| 12. துவாதசி | — | திரு. கோ. ம. கனகசபை |
| 13. விநாயகர் சதுர்த்தி | — | விநாயகர் பாதம் தாங்கி பிள்ளைகள் |
| 14. வருஷாபிஷேகம் | — | கோவில் மேலாண்மைக் குழுவினர் |
| 15. ஆடி பூரம் | — | திரு. அழகு மண்டோர் |
| 16. விஜய தசமி, அம்பு போடுதல் | — | திரு. எஸ். எல். பெருமாள் |
| 17. சங்கராந்தி (தைப் பொங்கல்) | — | திரு. எம். ஒ. கே. அப்பு வைத்தியர் |
| 18. பங்குனி உத்திரம் ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம் | — | திருவாளர்கள் வி. கோவிந்தசாமிப்பிள்ளை, எஸ். எல். பெருமாள் |
| 19. தெலுங்கு வருடப் பிறப்பு | — | சிங்கப்பூர் தெலுங்கு சமாஜம் |
| 20. ஸ்ரீ ஹனுமந்த ஜெயந்தி | — | ஸ்ரீ ஆஞ்சநேயர் தொண்டர்கள் |

பிரம்மோத்ஸவம்

| | |
|---|---|
| 1. கொடியேற்றுதல் | கோவில் மேலாண்மைக் குழுவின |
| 2. முதல் நாள் | திரு. சி. பரஞ்சோதி |
| 3. இரண்டாம் நாள் | திரு. எம். பி. லிங்கம் |
| 4. மூன்ரும் நர்ள் | திரு. ஏ. நாராயணசாமி கண்டியர் |
| 5. நான்காம் நாள் | ஸ்ரீனிவாசப் பெருமாள் தொண்டர்கள் |
| 6. ஐந்தாவது நாள் | கோமள விலாஸ் |
| 7. ஆருவது நாள் | தெக்ஷண பாரத பிராமண சபா |
| 8. ஏழாவது நாள் | திரு. கே. கந்தசாமி |
| 9. எட்டாவது நாள் | திரு. ஜி. பாலகுரு |
| 10. ஒன்பதாவது நாள் | திரு. எஸ். எல். பெருமாள் |
| 11. பத்தாவது நாள் | திரு. பி. கோவிந்தசாமி பிள்ளை |
| 12. விடையாற்றி | திரு. எஸ். ரெங்கநாதன் |

# தமிழ்ப் பெரியாரின் அருட்பணிகள்

**சிங்கை மா. இளங்கண்ணன்**

பக்தர்களின் ஆரவாரமும், மேளதாள முழக்கமும் ஒன்று கலந்து விண்ணுலகிற்கு எட்டுகிறது.

மலர்களின் மணத்திலும், சந்தனக்குழைவிலும் ஊரே மூழ்கித் திளைக்கிறது. பக்தர்களின் உள்ளமெல்லாம் பக்தி வெள்ளத்தில் மிதக்கிறது.

இருள் சூழ்ந்திருக்கும் உள்ளங்களில் இறையொளி பரவிக்கொண்டிருக்கின்றது. வள்ளலும் தமிழ்ப்பெரியாருமான பொன்மனச் செம்மல் கோவிந்தசாமி அவர்கள் பசியோடு நடந்து கொண்டிருக்கிறார்.

எதிரே பல்லக்கில் உலா வந்துகொண்டிருக்கும் உலகமாதேவியின் கண்ணைப் பறிக்கும் திருஉருவத்தைப் பார்க்கிறார். ஊனுருக, உளம் நெகிழ இருகை குவித்து தேவியின் திருக்காட்சியைப்பார்த்துக் கும்பிடுகிறார்.

அம்பாளின் அருட்பார்வை தமிழ்ப்பெரியார் மேல் படுகிறது.

"வாருங்கள் உங்களைத்தான் எதிர்பார்க்கிறேன்."

தமிழ்ப்பெரியாருக்கு ஒரே வியப்பு. இருப்பினும் அவர் பின் செல்கிறார். தலைவாழை இலையில் பொங்கல், சுண்டல், வாழைப்பழம், வடை எல்லாம் பரிமாறப்படுகிறது. அமிழ்தத்தைத் தமிழ்ப்பெரியார் சுவைத்துச் சாப்பிடுகிறார். பசி பறந்து விடுகிறது. ஆனால் பக்திப்பசி கூடிவிடுகிறது.

அமிழ்தத்தை அருந்த அழைத்தவர் யார்?

தமிழ்ப்பெரியாருக்கு அழைத்தவரை முன் பின் தெரியாது; அறிமுகம் இல்லாதவர் அவர்!

எல்லாம் அம்பாளின் திருவுள்ளம் என முடிவு செய்கிறார். அசைக்க முடியாத இறைப்பற்று அவருக்கு!

இந்த நிகழ்ச்சி *1905*-ஆம் ஆண்டு தமிழ்ப் பெரியார் சிங்கப்பூருக்கு வரும்போது தமிழகத்தில் நிகழ்கிறது.

தஞ்சை மண்ணில் மாயூரத்தை அடுத்துள்ள கூரைநாடு எனும் சிற்றூரில் *1887*-ஆம் ஆண்டு பொன்னுசாமி பிள்ளைக்கும் மீனாட்சி அம்மையாருக்கும் ஒரே பிள்ளையாகப் பிறந்த தமிழ்ப் பெரியார் அவர்களுக்கு இந்நிகழ்ச்சி நிகழ்வுறும் போது அகவை பதினாறு.

இங்கு வந்து உறவினர் வீட்டில் தங்குகிறார்.

பெருமாள் உறையும் திருக்கோவிலுக்குச் செல்கிறார். அருள்மிகு சீனிவாசப் பெருமாள் கோவில் முன் அப்போதிருந்த திருக்குளத்தில் நீராடுவதும், நாள் தோறும் உலகளந்தானின் திருப்பாதங்களில் விழுந்து தொழுதெழுவதுமாக இருக்கிறார்.

இறைவன்பால் அன்பு கொண்டுள்ள அவர் மனம் இறைவனின் படைப்புகளின் மேலும் அன்பு செலுத்துகிறது. இளம் அகவையிலேயே 'அறம் செய விரும்புகிறது' அவர் மனம்.

அருள்மிகு பெருமாளின் அருட்பார்வை தம் மக்களுள் ஒருவரான கோவிந்தசாமி பிள்ளை மேலும் விழுகிறது.

அவருக்கு ஒரு கடையில் வேலையும் கிடைக்கிறது.

சம்பளத்திற்கு வேலை செய்கிறார்.

கடமையுணர்வோடு கண்ணியமாக நடந்து கொள்கிறார். வாடிக்கையாளர்கள் முதலாளியிடம் காட்டும் அன்பைவிட தமிழ்ப்பெரியார் மேல் அன்பு பாராட்டுகின்றனர்.

நேர்மையோடு நடந்துவந்தாலும் அவருக்குச் சம்பளம் சரியாகக் கிடைக்கவில்லை. மனம் தளரவும் இல்லை! எப்படியும் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளோடு கடுமையாக உழைக்கிறார்.

காலச்சக்கரம் உருள்கிறது.

*1915*–ஆம் ஆண்டு தமிழகத்திற்குச் செல்கிறார்.

பக்கிரியம்மாளுக்கும் தமிழ்ப்பெரியாருக்கும் திருமணம் நிகழ்வுறுகிறது.

மனைவியை அழைத்துக்கொண்டு சிங்கப்பூர் திரும்புகிறார். *1920*-ஆம் ஆண்டு வணிகத்தைத் தொடங்குகிறார்.

வாழ்க்கையோடு போராடும்போது இரண்டாம் உலகப்போரும் மூண்டுவிடுகிறது. போர் குறுக்கிட்டு அவர் முன்னேற்றத்திற்குத் தடை செய்கிறது.

போர் முடிந்த பின் மனம் தளரவில்லை. அல்லும் பகலும் அயராது உழைக்கிறார். இரவு பன்னிரண்டு மணிவரை கண் விழித்துக் காரியங்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்ப்பதோடு மட்டும் நிற்கவில்லை மூன்று நான்கு மணிக்கெல்லாம் எழுந்து வேலை செய்கிறார்.

'முன்னேற வேண்டும்' என்பதே அவருடைய குறிக்கோளாக இருக்கிறது. நேர்மையோடு செயல்படுகிறார். நாணயத்தை உயிருக்கு உயிராக மதிக்கிறார். வாழ்க்கையை எளிமையாகவும் அமைத்துக்கொள்கிறார். சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறார்; ஒழுக்கத்தை உயிராக மதிக்கிறார்; பக்தியோடு இருந்து கட்டுப்பாட்டோடு வாழ்கிறார்.

மும்மூர்த்திகளின் திருவருளால் வாணிகம் வளர்கிறது. திருமகளின் அருட்பார்வையால் செல்வம் பொங்கிப் பெருகுகிறது.

அருட்பணிக்கும், அரும்பணிக்கும் கொடை கொடுக்க முன் வருகிறார். சிங்கிப்பட்டியிலும், திருமருகலிலும் மருத்துவமனை கட்டுகிறார். பில்லாளியில் பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடம் கட்டுகிறார்; பக்தர் தங்கி இறைவனை வழிபடுவதற்கு திருப்பதியிலும், திருக்கண்ணபுரத்திலும் தங்குமடம் கட்டுகிறார்; திருமுருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூரில் கலைமன்றம் கட்டுகிறார்; இராமகிருஷ்ண மண்டபம் கட்டுகிறார்; இடையிடையே பல்வேறு அற நிறுவனங்களுக்குப் பொருட்குவையும் கொடுக்கிறார்.

தமிழகத்தில் இருந்து ஏழையாக வந்த தமிழ்ப்பெரியார் வரும்போது கண்ட காட்சியைப்போல் அவர் மனதில் நிலைத்துவிடும் அளவிற்கு இங்கும் ஒரு நிகழ்ச்சி நிகழ்வுறுகிறது.

அருள்மிகு சீனிவாசப்பெருமாள் கோவிலுக்கு அருகில் கலியாண மண்டபம் கட்டுவதற்குச் செயலவையினர் தமிழ்ப்பெரியாரிடம் பொருட்குவை கேட்கின்றனர்.

பெரியதொகை என்றாலும் தமிழ்ப்பெரியாரின் பொன்மனம் இசைவளிக்கிறது. பாரத்தை உலகளந்த பரமன் மேல் போட்டுவிட்டு அதைக் கட்டுவதற்கு உறுதி அளிக்கிறார்.

குத்தகைக்கு ஏலச்சீட்டு விடப்படுகிறது. கலியாண மண்டபத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகையைவிட இருமடங்கு கூடுகிறது.

தமிழ்ப்பெரியாரின் மனம் தளர்கிறது. யாரை நாடுவது; யாரிடம் பணம் கேட்பது? பெருமாளின் பெரும் பணியாச்சே; பணத்திற்கு எங்கே போவது என்று வருந்துகிறார். அன்றிரவு அவர்க்குத் தூக்கமும் பிடிக்கவில்லை. அவர் மனம் திருமாலையே சுற்றிச்சுற்றி வருகிறது.

நாரணன் விளையாடுகிறான் போலும்!

மும்மூர்த்திகளுள் ஒரு மூர்த்தியின் சிவந்த மேனி கீழைக்கடலில் இளங்கதிராய் எழுகிறது. அந்தக் காலைப்பொழுதும் கவலையோடு இருக்கிறார்.

பிறகு ஒரு முடிவுக்கு வந்தவர் வங்கியில் கடன் கேட்டுப் பெறுகிறார். திருமண மண்டபம் கட்டும் பணியும் தொடங்கி நிறைவுறுகிறது.

நான்முகன் பார்க்கிறார். அவர் பார்வை பட்டதால் தமிழ்ப்பெரியார் அமிழ்த ஆழியில் மிதக்கிறார். அந்த மகிழ்ச்சி மேலும் இரட்டிப்பாக மாறுகிறது. ஆம், ஆழியானின் அருளால் வணிகத்தில் எதிர்பாராத வகையில் இருமடங்கு ஆதாயம் கிடைக்கிறது. தமிழ்ப்பெரியார் வியப்படைகிறார். எல்லாம் வல்ல அவன் அருள் என்று மனம் உருகுகிறார். வங்கிக்கடன் தீர்ந்துவிடுகிறது.

ஆனால், இறைவனிடம் பட்ட கடன் தீரவில்லை என எண்ணுகிறார். அன்றே பெருமாள் திருமுன் கோபுரம் கட்ட வேண்டும்; அந்தக் கோபுரம் சுற்றுப்பயணியரையும் ஈர்க்கும் அளவிற்கு இருக்கவேண்டும் என உறுதி எடுத்துக்கொள்கிறார்.

ஒன்று ஈந்தால் பத்துக் கிடைக்கும். இது பரமன் திருவுள்ளம் என்று மனம் திறந்து தமிழ்ப்பெரியார் சொல்கிறார். கேட்போர் உடல் புல்லரிக்கிறது. இன்று இராசகோபுரம் எழுந்து எழிலோடு நிற்கிறது.

அரும்பணி செய்துள்ளீர்கள் என்றால் 'இல்லை இறைவன் மாந்தர் உருவில் வந்தும், என்னுள் இருந்தும் செய்யச் சொல்கிறான்,' என்று பெருந்தன்மையோடு சொல்கிறார்!

தெய்வத்துள் எந்தத் தெய்வத்தின் மேல் பக்தி என்று வினவும்போது 'எல்லாம் ஒன்றே!' என்று திருவாய் மலர்கிறார்.

பொருட்செல்வத்தை அளித்த அவர்க்கு இறைவன் மக்கட்செல்வத்தையும் ஈந்துள்ளான்.

தனலெட்சுமி, சந்திரா, புஷ்பலீலா, செண்பகவள்ளி எனும் பெயர்களுடைய பெண்மக்கள் நால்வரும், இராமச்சந்திரன், இராமகிருஷ்ணன், தனபாலன் எனும் பெயர்களைக்கொண்ட ஆண்மக்கள் மூவரும் இருக்கின்றனர்.

பெரியார் பொருட்கொடை மட்டும் கொடுக்கவில்லை. தம் பட்டறிவால் பெற்ற அறிவுக் களஞ்சியத்தையும் வழங்குகிறார். 'பக்தியோடு இரு; சினத்தை அடக்கு; சிக்கனமாய் இரு; உழைத்து முன்னேறு; ஒழுக்கத்தைப் பேணு; வாணிகம் செய்; கட்டுப்பாட்டோடு நட;' என்பவைதாம் அவை.

சீனிவாசப்பெருமாள் திருமுன் எழிலோடு உயர்ந்து நிற்கும் இராசகோபுரம் தமிழ்ப் பெரியாரை நினைவு கூர்கிறது! அவரும் இராசகோபுரத்தைப்போல் உயர்ந்து நிற்கிறார்! வாழ்க பல்லூழி காலம்!

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவிலில்

## கைங்கர்யம் செய்யும்

## அர்ச்சகர்கள்

### 1. தலைமை அர்ச்சகர்

முப்பத்தி எட்டு வயது ஆகும் திரு. என். பி. ராமன் பட்டாச்சாரியார், 1975-ம் ஆண்டு முதல் தலைமை அர்ச்சகராகப் பணியாற்றுகின்றார். தமிழகத்தில், கும்ப கோணம் அருகிலுள்ள நாதன் கோவில் எனும் ஊரில் பிறந்த இவர், சிங்கப்பூர் வருவ தற்கு முன்னர், திருநறையூர் (நாச்சியார் கோயில் நந்திபுரவிண்ணகரம்) திருவிண்ணகர் என்கிற ஒப்பலியப்பன் கோவிலில் கைங்கர்யம் செய்து வந்தவர் ஆவார்.

### 2. உதவி அர்ச்சகர்கள்

திருச்சி, மாரமரெட்டி பாளையம் எனும் ஊரில் பிறந்த திரு. என். வெங்கடரமண பட்டாச்சாரியரும் சிங்கப்பூர் ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவிலில் 1975-ம் ஆண்டு முதல் பெருமாளுக்கு கைங்கர்யம் செய்து வருகின்றார். ஐம்பத்தெட்டு வயதாகும் இவருக்கு மாரமரெட்டி பாளையம், துறையூர் கோயில்களில் கைங்கர்யம் செய்த அனுபவமுண்டு.

### வி. வெங்கடேச பட்டாச்சாரியார்

நூற்றியெட்டு வைணவக் கோயில்களைச் சார்ந்த திருவாலி திருநகர், திருமங்கை ஆழ்வார் அவதரித்த ஊரில் உள்ள தாடாளன் கோயில் ஆகிய இடங்களில் தெய்வச் சேவை செய்து அனுபவமுள்ள இவருக்கு வயது நாற்பதாகும். 1978 ஜனவரி முதல் இக்கோவிலில் கைங்கர்யம் செய்து வருகின்றார்.

### பரிஜாரகர் - மடப்பள்ளி பொறுப்பாளர்

1972-ம் வருடம் முதல் இக்கோயிலில் பணியாற்றும் ஆர். ஜகந்நாத ஐயங்காருக்கு வயது நாற்பத்தி ஆறு ஆகும். திருநாகை சௌந்திரராஜ பெருமாள் கோவிலில் கைங் கர்யம் செய்த அனுபவம் இவருக்கு உண்டு.



## புகைப்பட விளக்கம்

இடமிருந்து வலம் நிற்பவர்கள்: ஆர். ஜகந்நாத ஐயங்கார், என். பி. ராமன் பட்டாச்சாரியார், என். வெங்கடரமண பட்டாச்சாரியார், வி. வெங்கடேச பட்டாச்சாரியார்.

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவில் பணியாளர்கள்



**கணக்கப்பிள்ளை என். துரைராஜா**

நாற்பத்தைந்து வயது ஆகும் இவர் தமிழகத்தில் வல்லம் எனும் ஊரில் பிறந்தவர். 1970-ம் ஆண்டு முதல் ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோவிலில் கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றி வருகின்றார்.



**நாதஸ்வரக்கலைஞர் கே. எஸ். கார்த்திகேயன்**

பழனி நாதஸ்வரக் கலைக்கல்லூரியிலும், நாதஸ்வரம் சிவக்கொழுந்து பிள்ளை, கந்தர்வகான கமக வித்வான் வல்லம் வி. ஏ. கிருஷ்ணபிள்ளை ஆகியோரிடமும் பயிற்சி பெற்றவர். 1975-ம் ஆண்டு முதல் இக்கோவிலில் நாதஸ்வரக் கலைஞராகப் பணியாற்றுகின்றார்.



**தவில் கலைஞர் திருப்பதி ஸ்ரீநிவாஸலு**

ஆந்திரப்பிரதேசத்தில் கந்தகூரு எனும் இடத்தில் 1950-ல் பிறந்த இவர் தன் தந்தையிடம் தனது பனிரெண்டாம் வயதிலேயே தவில் வாசிக்கக் கற்றுக்கொண்ட இவர், டி. ஏ. கலியமூர்த்தி எனும் தன் குருவிடம் ஆறு ஆண்டுகள் பயிற்சியும் பெற்றுள்ளார். இவரும் 1975-ம் ஆண்டு முதல் இக்கோவிலில் பணியாற்றுகின்றார்.

**கோவில் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துபவர்**

கோவில், கல்யாண மண்டபம் ஆகியவற்றின் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்வதுடன் இதர சிறு பணிகளையும் செய்யும் கருப்பையா, சற்றேறக்குறைய 15 ஆண்டுகளாய் கோவிலில் வேலை செய்து வருகின்றார்.

**தோட்டக்காரர் வெள்ளை பாண்டியன்**

ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோவிலின் இருபுறமும் அமைந்துள்ள தோட்டங்களைச் சுத்தம் செய்து பாதுகாப்பதுடன் பூ எடுத்துக் கொடுப்பதும் இவர் கடமையாகும்.

# கலைமேவும் தலைவாசலான இராஜகோபுரத்தை உருவாக்கிய சிற்பிகள்

**1. என். கணபதி**



ஐவர் அடங்கிய சிற்பிகளுக்குத் தலைவராகவும், நாடு கடந்து வந்திருக்கும் மற்ற நான்கு பேர்களுக்கும் தந்தையாகவும், தோழனாகவும் இருந்து அயராத உழைப்பை வழங்கியவர். தமிழகத்தில் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் 1925-ம் வருடம் பிறந்த திரு. என். கணபதி அவர்கள் தனது பதினைந்தாம் வயதிலேயே சிற்ப வேலையில் ஈடுபட ஆரம்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கிள்ளான் ஸ்ரீ சுந்தரேசப் பெருமாள் ஆலயத்திற்கு சிற்ப வேலைப்பாடுகளை செய்து கொடுத்தவரும் இவரே.



**2. எஸ். வேணுகோபால்**

நாற்பத்தைந்து வயது ஆகும் இவருக்கு சிற்பக்கலை அனுபவம் இருபத்தொன்பது வருடங்களுக்கு மேல் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் உள்ள சீர்காழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.



**3. என். சந்திரகாசன்**

1935-ம் வருடம் சிதம்பரத்தில் பிறந்த இவர் தனது பதினேழாம் வயதிலேயே இத்துறையில் ஈடுபட ஆரம்பித்தார். இவரும் கிள்ளான் ஸ்ரீ சுந்தரேசப் பெருமாள் ஆலயத்திற்கு சிற்ப வேலைப்பாடுகளைச் செய்தவர் ஆவார்.



**4. எம். தண்டபாணி**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவெண்காடுவில் 1943-ம் ஆண்டு பிறந்தவர். இவரும் தனது பதினைந்தாம் வயதிலேயே சிற்ப வேலையில் ஈடுபட ஆரம்பித்தவர். இத்துறையில் இருபது வருட அனுபவம் பெற்றவர்.



**5. ஜி. திருஞானம்**

தலைமைச்சிற்பி திரு. என். கணபதி அவர்களின் புதல்வன். இருபத்து மூன்று வயதாகும் இவ்விளைஞருக்கு இத்துறையில் ஐந்தாண்டு அனுபவம் உண்டு. தன் தந்தையைப் போல சிறந்த சிற்பியாக வரவேணடும் என்ற ஆவல் நிறைந்தவர்.

மேற்குறிப்பிட்ட ஐவருடன் கோபுரம் கட்டுவதிலும் இதர திருப்பணிகளில் வேலை செய்யவும் உதவியாக இருந்தவர்கள் சிவா, இஸ்மாயில் ஆவார்.

குடமுழுக்கு விழா தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட
கவிதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட
சிறந்த கவிதைகள்

# ஓம் கணபதி

## வெண்பா

சித்தி விநாயகனே சீர்மேவும் மெய்ப்பொருளே
அத்தனின் செல்வா ஆனைமுகா = நித்தமுன்
பொன்னடி போற்றிப் பணிந்துருகும் எல்லார்க்கும்
கண்ணன் குடமுழுக்கைக் காட்டு.

கனிகொண்டு அம்மையை அப்பனைச் சுற்றி
நனிதுலக்கி வந்த நாயகா = பணிவால்நீ
போட்டியில் வென்றிப் புவிவாழும் மாந்தர்க்கு
ஊட்டினுய் கூரறிவை வூர்ந்து.

## கணபதிக்கு கன்னித் தமிழ்மாலை

இத்தரைக் குருவென மத்தள வயிறுடை
தத்துவக் கணபதி அருள்மேவி
இன்புறு . மடியவ ரென்றுமு லகினில்
இல்லறச் செழிப்புறு பொலிவோடு
முத்தமி ழறிவுடை வித்தகத் திறமுடன்
முப்பொழு துமவரி னியாராய்
முக்கனிச் சுவைதவழ் மும்மணி அழகென
முத்தொளிர் திருவுடன் திகழ்வாரே
சத்திய நெறியொளிர் சித்தெனக் கரிமுகச்
சற்குரு துணையுடன் நடைபோட
சக்தியின் மகனென உத்தமர் புகழ்நிறை
விக்கின விநாயகப் பெருமானின்
நித்தியத் திருவடி நெக்கிடும் நினைவினில்
நெஞ்சம துருகிட வணங்கியே
நித்தில ஒளிமிகு கண்ணனின் குடமுழுக்
கிங்கித எழிலினில் மகிழ்வோமே

## எண்சீர் விருத்தம்

சைவமும் வைணவமும் ஒன்றி இந்து
சமயமாய் வாழ்வொளிக்கு வரம்பு கட்டும்
தெய்வநெறி பரந்தொளிரும் இந்து நெறிச்

சிறப்பினிலே பேரின்பச் சீர்த்தி உண்டே
ஐவரென்று மறைமுகமாய்ச் சான்றோர் கூறும்
ஐம்புலன்க ளடக்கத்தை முன்னி றுத்தி
சைவனெனும் சிவபிரான் தாளைப் போற்றி
தக்கநெறி பிடித்தொழுகும் பண்பும் உண்டே.

அருவமும் உருவமும் சேர்ந்து லகில்
ஐம்பொறிக ளியக்கத்தால் உயிர்கள் வாழும்
திருவொளிரும் காட்சிகளை விளங்க வைக்கும்
சிறப்பினிலே இந்துநெறி தெய்வங் கட்கு
உருவமைத்துத் தத்துவங்கள் உள்ள டங்கும்
உன்னதங்கள் ஏராளம் அஃதை ஊன்றி
ஒருமையுடன் ஆய்பவர்க்கு உண்மை தோன்றும்
